# குறிஞ்சித் தேன்

(சங்கநூற் காட்சிகள்)

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலயம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18

உரிமை பதிவு
அமுதம்—32
முதற் பதிப்பு - பிப்ரவரி, 1952.
இரண்டாம் பதிப்பு - செப்டம்பர், 1956.

x·KVJ:21

விலை ரூ. 2

47269

நாஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

# முகவுரை

கடைச்சங்க நூல்களின் வரிசையில் ஒன்றாகிய எட்டுத் தொகையில் உள்ள நூல்களின் பெயரைத் தெரிவிக்கும் பாட்டு ஒன்று உண்டு.

*நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறம்என்று*
*இத்திறத்த எட்டுத் தொகை.*

இந்தப் பாட்டில் உள்ள வரிசை, பாட்டின் அமைப்பில் தானாகவே அமைந்ததேயன்றிக் குறிப்பிட்ட காரணம் எதனையும் உட்கொண்டதன்று. இந்த எட்டு நூல்களிலும் புறப் பொருளைக் கூறும் நூல்கள் பதிற்றுப் பத்து, புறநானூறு என்ற இரண்டும் ஆகும். அகப் பொருளைக் கூறுவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பன. அகப் பொருள், புறப் பொருள் என்ற இரண்டுக்கும் உரிய பாடல்கள் பரிபாடலில் உள்ளன.

அகப் பொருட் பாடல்கள் உள்ள ஐந்து நூல்களில் ஐங்குறுநூறு, கலித்தொகை என்ற இரண்டு நூல்களிலும் ஒவ்வொரு திணையை ஒவ்வொரு புலவர் பாடியிருக்கிறார். ஆகவே ஐந்து ஐந்து புலவர்கள் இயற்றிய பாடல்களை அவற்றில் காணலாம். மற்ற மூன்று நூல்களில் பல கவிஞர்கள் இயற்றிய பாடல்கள் உள்ளன. தனித் தனியாக உள்ள பாடல்களைத் திரட்டி அடியளவை நோக்கி அப் பாடல்களை மூன்று தொகுதியாகப் பழங்காலத்தினர் தொகுத்தார்கள். நாலடி முதல் எட்டடி வரையில் உள்ள பாடல்களைத் தொகுத்துக் குறுந்தொகை என்றும், ஒன்பது அடிமுதல் பன்னிரண்டடி வரை உள்ளவற்றைத் தொகுத்து நற்றிணை என்றும், பன்னிரண்டடிக்கு மேற்பட்ட பாடல்களைத் தொகுத்து அகநானூறு என்றும் பெயரிட்டார்கள்; இந்த மூன்று நூல்களில் குறுகிய

அடியளவுடையதாகையால் குறுந்தொகை என்ற பெயர் ஒரு தொகை நூலுக்கு அமைந்தது. பல அடிகள் உள்ள பாடல்கள் அமைந்த அகநானூற்றுக்கு நெடுந்தொகை என்றும் ஒரு பெயர் உண்டு.

எட்டுத் தொகை நூல்களைத் தொகுக்கும்போது முதல் முதலில் புலவர்கள் குறுந்தொகையைத்தான் தொகுத்திருக்க வேண்டும் என்று மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள். பத்துப் பாட்டு என்னும் தொகையில் முதலில் திருமுருகாற்றுப்படை அமைந்திருக்கிறது. அது முருகக் கடவுளைப் பற்றியது. எட்டுத் தொகையில் முதலில் தொகுக்கப் பெற்றது குறுந்தொகை. இதில் உள்ள கடவுள் வணக்கம் முருகனைப் பற்றியது. ஐந்து வகைத் திணைகளுள் முதல் திணை குறிஞ்சி. அத் திணைக்குரிய நிலம் மலையும் மலையைச் சார்ந்ததுமாகிய பகுதி. அதற்குத் தெய்வம் முருகன். நூல் வரிசையின் முதலில் முதல் நிலத்தின் தெய்வத்தை வணங்குவது பொருத்தமன்றோ ?

இந்தப் புத்தகத்தில் குறுந்தொகையிலிருந்து எடுத்த ஏழு பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்து ஒன்று. இது குறுந்தொகைக்குப் புறத்துறுப்பாய்ப் புறப்பொருட் பகுதியாகிய பாடாண் திணையைச் சார்ந்த கடவுள் வாழ்த்து என்னும் துறையில் அமைந்தது. ஏனைய ஆறு பாடல்கள் அகப் பொருள் துறைகள்.

வேறு நூல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் மிகுதியாகிய இந்த நூற் பாடல்களை மேற்கோளாக எடுத்து ஆண்டிருக்கிறார்கள். ஆலவாயில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள் தருமியின் பொருட்டுப் பாடியதாகச் சொல்லும் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்ற பாட்டு, இந்தத் தொகை நூலின் இரண்டாவது பாட்டாகக் கோக்கப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பாட்டின் கீழும் அந்தப் பாட்டுக்குரிய துறையும், அதைப் பாடிய புலவர் பெயரும் அமைந்திருக்கும். இந்தப் பாட்டின்கீழ் இதைப் பாடியவரின் பெயர் 'இறையனார்' என்று உள்ளது. மதுரையில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதரை இறையனார் என்று வழங்கும் வழக்கம் உண்டு. அப்பெருமான் அறுபது சூத்திரங்களால் இயற்றியருளிய

களவியலுக்கு 'இறையனார் அகப்பொருள்' என்ற பெயர் வழங்குவதிலிருந்து இதை உணரலாம்.

இந்தப் பாட்டு எழுந்த வரலாற்றையும் இதனோடு தொடர்புடைய செய்திகளையும் தேவாரம், கல்லாடம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், சீகாளத்திப் புராணம், தமிழ் விடு தூது, மதுரைக் கோவை முதலிய பல நூல்கள் விரிவாகவும் சுருக்கமாகவும் தெரிவிக்கின்றன.

**நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி**
**நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்**

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடுகிறார்.

★

குறுந்தொகையின் கடவுள் வாழ்த்து இப் புத்தகத்தில் இருக்கிறது. அந்நூலின் முதற் பாட்டு, திப்புத் தோளார் என்பவர் பாடியது.

தலைவன் தலைவியை முதலில் கண்டு காதல் கொண்டு அவளை அணுகி அவளும் தன்பால் காதல் கொண்டதை அறிந்து அவளோடு அளவளாவி மகிழ்கிறான். பின்பு யாரும் அறியாமல் அடுத்தடுத்து அவ்விருவரும் சந்திக்கிறார்கள். தலைவிக்கு உயிர்த்தோழி இருப்பதைத் தலைவன் உணர்ந்து, அவள் வாயிலாகத் தலைவியைச் சந்தித்தால் அடிக்கடி வந்து பழக எளிதாக இருக்கும் என்று எண்ணுகிறான். ஒரு நாள் கையுறையாகக் காந்தட் பூங்கொத்தை ஏந்தி வந்து, "நான் தலைவியினுடைய அழகிலே உள்ளம் பறிகொடுத்து நிற்கிறேன். உன் உதவியால் அவள் நட்பு எனக்குக் கிடைக்க வேண்டும். இந்தக் கையுறையை அவளிடம் அளித்து என் கருத்தையும் சொல்" என்று பணிவாகக் கேட்கிறான். தோழி முதலில் மறுக்கிறாள். ஏதேதோ காரணத்தைச் சொல்கிறாள். "நீ கொண்டு வந்திருக்கிறாயே, இந்த அழகான காந்தட்பூ, எங்களுக்கு அருமையான பொருள் அல்ல; எங்கள் மலை முழுவதும் ஒரே காந்தட்பூ, செக்கச் செவேல் என்று பூத்துக் கிடக்கிறது" என்று கூறி அவன் தந்த கையுறையை மறுக்கிறாள். அவள் கூற்றாக உள்ளது குறுந்தொகையின் முதற் பாட்டு. அது வருமாறு :

**செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த**
**செங்கோல் அம்பிற் செங்கோட்டு யானைக்**
**கழல்தொடிச் சேஎய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.***

"எங்கள் மலை முருகனுக்குச் சொந்தமானது. போர்க்களம் முழுதும் இரத்தத்தால் சிவந்து செங்களம் ஆகும்படியாக அவுணர்களுடைய படையையெல்லாம் கொன்று அடியோடு அழித்த பெருமான் அவன். அவன் அம்பு திரண்டது; இரத்தத் தாற் சிவந்தது. அவனுடைய யானையின் கொம்பு கூட இரத்தத் தால் சிவந்திருக்கும். கழலுகின்ற வீர வளையை எம்பிரான் அணிந்திருப்பான். அவனுக்குரிய மலையாகிய இந்த இடத்தில் அவனுடைய காந்தட்பூவுக்குக் குறைவு ஏது? அவனுடைய களமும், அம்பும், யானையின் கொம்பும் இரத்தத்தாற் சிவந்திருப்பன என்றேன் அல்லவா? அவனுடைய குன்றமாகிய இதில் இரத்தத்தைப் போன்ற பூக்கள் குலைகுலையாக மலரும் காந்தட் செடிகள் நிறைய இருக்கின்றன" என்று தோழி சொல்கிறாள்.

★

இறையனார் இயற்றிய பாட்டை முதலில் வைக்காமல் இந்தப் பாட்டை முதலில் வைத்தது ஏன்? திப்புத்தோளார் பாடலைக் காட்டிலும் 'கூந்தல் மணத்'தைச் சொல்லும் இறையனார் பாடல் சுவையிலே குறைந்ததா?—எனக்கு ஒரு காரணம் தோன்றியது. திப்புத் தோளார் பாட்டில் முருகனைப் பற்றிய செய்தி வருகிறது. இரண்டாவது பாட்டு இறையனார் இயற்றியதானாலும் முருகனைப் பற்றிய செய்தி அதில் இல்லை. ஆதலின் முருகனைக் கடவுள் வாழ்த்தில் வணங்கிய உள்ளம், அடுத்து அப் பெருமானைப் பற்றிச் சொல்லும் பாட்டை வைக்க நினைத்தது இயல்புதானே? முருகனைப் புறத்

---

* 'இரத்தத்தால் செங்களம் உண்டாகும்படியாகக் கொன்று அசுரர்களை அடியோடு அழித்த, சிவந்த திரட்சியையுடைய அம்பையும், சிவந்த கொம்பையுடைய யானையையும், கழலும் வளையையும் உடைய முருகனுக்குரிய இக் குன்றம், இரத்தத்தைப் போன்ற செந்நிறம் பெற்ற பூவின் கொத்துக்களையுடைய காந்தளை உடையது' என்பது இதன் உரை.

துறுப்பாகிய கடவுள் வாழ்த்தில் நினைத்தது போதாதென்று, அகத் துறுப்பாகிய பாடல்களிலும் முதலில் அவனை நினைக்க வேண்டு மென்ற எண்ணத்தால் இப் பாடலை முதற் பாட்டாக அமைத்திருக் கலாம் என்று தோன்றுகிறது

குறுந்தொகையில் இப்போது கடவுள் வாழ்த்து ஒன்றும், அகத்துறைப் பாடல்கள் நானூற்று ஒன்றும் இருக்கின்றன. இத னைத் தொகுத்த புலவர் பூரிக்கோ என்பவர். இந்த நூலில் உள்ள பாடல்களைப் பாடின புலவர்கள் இருநூற்றைந்து பேர் என்று ஒரு பழைய குறிப்பினால் தெரிய வருகிறது.

## 2

இந்தப் புத்தகத்தில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் பாரதம் பாடிய பெருந்தேவனார், இறையனார், தேவகுலத்தார், கோப்பெருஞ் சோழன், ஓதலாந்தையார், ஔவையார், அணிலாடு முன்றிலார் ஆகியவர். இவர்களுள் பாரதம் பாடிய பெருந்தேவ னார் என்பவர் சங்க காலத்தில் வழங்கிய பழைய பாரதத்தைப் பாடினவர். அந்த நூல் முற்றும் இப்போது கிடைக்கவில்லை. சில சில பாடல்களே கிடைக்கின்றன.

இறையனார் என்று வழங்கப்பெறும் புலவர் திருவாலவாய்ப் பெருமான் என்பதை முன்பே சொன்னேன்.

தேவ குலத்தார் என்ற பெயர் அந்தப் புலவருடைய இயல் பான பெயர் அல்லவென்று தோன்றுகிறது. தேவ குலம் என் பது கோயிலுக்குப் பெயர். "ஊரானோர் தேவ குலம்" என்ற சொற்றொடர் பழைய உரைகளில் காணப் பெறுகிறது. இப்புலவர் கோயிலில் வழிபாடு செய்வதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார் போலும்.

கோப்பெருஞ் சோழன் என்பவன் முடியுடை வேந்தர்களா கிய சோழ குலத்தில் உதித்தவன். வீரமும், அற நினைவும், புல மையும் உடையவன். அருள், அன்பு என்ற குணங்களைப்பற்றி இவன் பாடியிருக்கிறான். இவன் பாடிய பாடல்கள் வேறு தொகை நூல்களிலும் இருக்கின்றன.

ஓதலாந்தையார் என்ற புலவரின் இயற் பெயர் ஆந்தையார் என்பதாக இருத்தல் கூடும். ஓதல் என்பது அவருடைய தொழிலேயோ பிற சிறப்பையோ காட்டும் அடைமொழியாக இருக்குமென்று தோன்றுகிறது. ஓதல் என்பது வேதம் ஓதுவதைக் குறிக்கும். அவர் வேதத்திலும் தமிழிலும் ஒருங்கே சிறந்த புலமையுடையவர் போலும்.

ஔவையார் தமிழுலகம் நன்கறிந்த மூதாட்டியார். இவருடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ளுவதற்கு உதவியாக இருக்கும் பாடல்கள் பல புறநானூற்றில் உள்ளன. தமிழ்நாட்டில் இப்பெருமாட்டியாருக்கு இருந்த நன்மதிப்பு அளவற்றது. இவருடைய பெயரைக் கொண்டு வேறு ஒரு பெண் புலவர் பிற்காலத்தில் வாழ்ந்தார். அவர் இயற்றிய வாக்குண்டாம் முதலிய நீதி நூல்கள் மாணுக்கர்களுக்குப் பாடமாக உள்ளதை யாவரும் அறிவர்.

அணிலாடு முன்றிலார் என்பவருடைய இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை. பாழாய்ப் போன ஊரிலுள்ள வீட்டு முற்றத்தை 'அணிலாடு முன்றில்' என்று பாடியிருக்கிறார். அதனால் இந்தப் பெயர் அவருக்கு வந்தது.

★

இதில் உள்ள ஏழு பாடல்களிலிருந்து சங்க காலத்து மக்களின் வாழ்க்கையைப் பற்றியும், அக்காலத்து மக்களின் எண்ணங்களைப்பற்றியும் பல செய்திகளை அறிந்து கொள்ளலாம். தெய்வ நம்பிக்கையையுடைய தமிழர்கள் வணங்கிய கடவுளரில் முருகனும், இறையனாரும் இந்த நூலில் வருகின்றனர்.

சிற்றூர்களும் பேரூர்களுமாகப் பல ஊர்கள் தமிழ்நாட்டில் இருந்தன. சில காலங்களில் பாலை நிலத்திலுள்ள சிறிய ஊர்களில் வாழ்ந்த மக்கள் வேறு ஊர்களுக்குக் குடி போனார்கள். ஊர்களில் திருவிழா நடைபெற்றது. அப்போது ஊர் மிக அழகு பெற்று விளங்கும்.

ஆடவரும் மகளிரும் அன்பு செய்து இல்லறம் நடத்தினர். இல்வாழ்வு நிரம்புவதற்காக ஆடவர் வேற்றூர் சென்று பொருள் ஈட்டி வந்தனர். மகளிர் அவர்கள் பிரிந்த காலத்தில் மனம் வருந்தினர். மயில் போன்ற சாயலும் செறிந்த பற்களும் அடர்ந்த

கூந்தலும் நல்ல மகளிரின் இலக்கணம். அவர்கள் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் உண்டு. அந்தக் கூந்தலில் பொன்னு லான இழைகளை அணிந்து கொண்டார்கள்.

தெய்வங்களை அழைத்துப் பாடிக் குறி சொல்லும் ஒரு வகை மகளிரை அகவல் மகளிர் என்று வழங்கினர். அவர்கள் நெல்லி னுற் குறி பார்ப்பார்கள். அதைக் கட்டுப் பார்ப்பது என்று சொல் வார்கள். கட்டுப் பார்ப்பதனுல் அகவல் மகளுக்குக் கட்டுவித்தி என்ற பெயர் வழங்கும். அவள் மலைவளத்தைப் பாடுவாள். வீட் டில் யாருக்காவது நோய் வந்தால் கட்டுவித்தியை அழைத்து வந்து குறி பார்ப்பது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. கட்டுவித்தி சங்கு மணி மாலையை அணிந்திருப்பதுண்டு.

மடந்தை, அரிவை என்ற பெயர்கள் பெண்களின் பருவத் தைக் குறிக்கும் பெயர்களானுலும் பொதுவாக மகளிர் என்னும் பொருளில் அவை இப் பாடல்களில் வந்துள்ளன.

இயற்கை வளத்தை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டு வாழ்ந் தவர்கள் பண்டைத் தமிழர்கள். விலங்குகளும், மரஞ் செடி கொடி களும் அவர்களுடைய வாழ்க்கையினூடே கலந்து நின்றன. புல வர்கள் அவற்றின் இயல்புகளை நன்கு அறிந்திருந்தார்கள். அவர் கள் பாடிய பாடல்களில் அவற்றைப் பற்றிய செய்திகள் அங்கங்கே விரவி வரும்.

சேவல் முருகன் கொடியாக இருப்பதையும், பாழான வீட் டில் அணில் விளையாடுவதையும் புலவர்கள் பின் வரும் பாடல் களில் சொல்லியிருக்கிருர்கள். வண்டில் நறுமணம் தேரும் ஆற்ற லுடைய ஒரு சாதிக்குத் தும்பியென்று பெயர். பூந்தாதைத் தேர்ந்து உண்பது அது. நறுமணத்தைக் கண்டு உணர்வது. பூக் களில் உள்ள தேனை மொண்டு சென்று பெரிய தேனடைகளை மலைச் சாரலில் வண்டுகள் வைக்கும். குறிஞ்சிப் பூவில் உள்ள தேனைத் திரட்டும் வண்டுகளையும், கொன்றைப் பூவில் வந்து மொய்க்கும் வண்டுகளையும் புலவர்கள் நமக்குக் காட்டுகிருர்கள்.

தாமரை மிகச் சிறந்தது. அதன் மலரை இறைவன் திரு வடிக்கு ஒப்பாகக் கூறுவர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று அகப்பொருளில் ஐந்து திணைகள் உண்டு. ஒவ்

வொரு திணைக்கும் உரிய நிலமும் காலமும் உண்டு. திணைக்குரிய நிலங்களை அந்த அந்தப் பெயராலேயே குறிப்பர். குறிஞ்சித் திணைக்கு உரிய நிலத்துக்கும் குறிஞ்சி என்றே பெயர். முதலில் குறிஞ்சி என்பது நிலத்துக்குப் பெயராக வந்து பிறகு அங்கே நிகழும் ஒழுக்கத்துக்குப் பெயராயிற்று. தலைவனும் தலைவியும் ஒன்றுபடுவதும் அதற்கு முன்னும் பின்னும் நிகழ்வனவுமாகியவற்றைக் குறிஞ்சியின் ஒழுக்கமாகச் சொல்வார்கள். அந்த ஒழுக்கத்தையே உரிப்பொருள் என்று இலக்கண நூல் சொல்லும். நிலமும், காலமும் முதற்பொருள் என்ற பெயர் பெறும். அந்த நிலத்தில் உள்ள தெய்வம், விலங்கு, பறவை, பூ, மரம், மக்கள் ஆகிய எல்லாம் கருப்பொருள் என்று சொல்லப் பெறும்.

நாடகத்தில் இன்ன இடம் என்றும் இன்ன காலம் என்றும் இன்னார் பாத்திரங்களென்றும் ஒவ்வொரு காட்சிக்கும் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறே அகப்பொருள் நிகழ்ச்சிக்கு இவை உறுப்புக்களாக அமைகின்றன.

★

ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்களின் வரையறை உண்டு. உரிப்பொருள் என்பதுதான் முக்கியமானது. காதல் நாடகத்தின் இயக்கம் உரிப்பொருள். அந்த உரிப்பொருள் நிகழ மற்றவை துணையாக நிற்கின்றன.

முதற்பொருள்கள் நிலமும் காலமுமாம். குறிஞ்சி நிலத்துக்குப் பெயர் குறிஞ்சி மலரால் வந்தது. அது மிகுதியான தேனையுடைய மலர். அதன் தேனைப் பெருந்தேன் என்று ஒரு புலவர் சொல்கிறார். அதன் கோல்கள் கருமையாக இருக்கும். மலையிலும் மலையைச் சார்ந்த இடங்களிலுமே குறிஞ்சி வளரும். அந்தப் பகுதிகளே குறிஞ்சி நிலமாகும். குன்றி மணியை முருகன் உடைக்கு உவமையாக ஒரு புலவர் சொல்கிறார்.

பாலை நிலத்தைப் பற்றி ஒரே ஒரு செய்தி இதில் வருகிறது. நடப்பதற்கு அரிய வழியும் அதற்கருகே குடியிருந்தவர்கள் ஓடிப்போன பாழூரும் ஒரு பாட்டில் காட்சியளிக்கின்றன.

காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை நிலமாகும். முல்லைத் திணைக்குரிய பருவம் கார்காலம். தலைவி வீட்டில் இருந்து

தன் கடமையைச் செய்து தலைவன் வருமட்டும் பொறுத்திருப்பது முல்லைத் திணையின் ஒழுக்கம்; உரிப் பொருள். இதை இருத்தல் என்று சொல்வார்கள். முல்லை நிலத்தில் கொன்றை மரம் வளர்கிறது. அது அந்த நிலத்தின் கருப்பொருள்களில் ஒன்று. கார் காலத்தில் மலர்வது கொன்றை. அதன் மலர் பொன்னிறமானது. மிகச் செறிவாகத் தழைத்து நிற்கும் கொன்றை மரங்களுக்கு மகளிரை உவமை கூறுகிறார் ஒரு புலவர்.

கடலிலே தோன்றும் பவழத்தை முருகனுடைய திருமேனிக்கு உவமையாக்குகிறார் பெருந்தேவனார்.

மக்களின் உயர்வுக்குக் காரணமாகிய பண்புகளைப்பற்றி அங்கங்கே புலவர்கள் பாடுகிறார்கள். தொடர்பு இல்லாதாரிடம் செல்லும் அருளையும், தொடர்புடையவரிடத்துச் செல்லும் அன்பையும் ஒரு பாடல் சொல்கிறது. ஒருவர்பால் அன்பிருந்தால் அவருடைய மனத்துக்கு எது உவப்போ அதை அறிந்து அதற்கு ஏற்ப ஒன்றைக் கூறுதல் தவறு. உண்மையை உள்ளபடியே சொல்லவேண்டும். கண்டதைச் சொல்ல வேண்டுமே யொழிய, பழக்கத்தை நினைந்து உண்மைக்கு மாறாக ஒன்றைச் சொல்லக்கூடாது. பொய் வழங்குதல் தவறு; ஆடவர் பொய் வழங்கமாட்டார், குறித்த காலத்தில் வந்துவிடுவார் என்று நம்பி மகளிர் அவர் பிரிவைத் தாங்கியிருப்பார்கள்.

★

தலைவனுக்கும் தலைவிக்குமிடையே உள்ள காதலைத் தமிழ் நூல்கள் மிகச் சிறப்பாகப் பேசுகின்றன. அவர்களிடையே அமையும் நட்பு, கண்டமாத்திரத்தில் உண்டாவதல்ல. பிறவி தோறும் ஒன்றுபட்ட உயிரும் உள்ளமும் படைத்தவர்களே உண்மைக் காதலைப் பெறுகிறார்கள். பிறவிதோறும் பயின்ற பயிற்சியினால் காதலனும் காதலியும் ஒன்றுபடுகிறார்கள். அந்த உறவை, 'பயிலியது கெழீஇய நட்பு' என்று பாராட்டுகிறார் இறையனார். அதற்கு உவமையே இல்லை. அது நிலத்தினும் பெரியது; வானைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் ஆழமானது: மிக மிக இனியது.

## 3

இந்தக் காதல் வாழ்க்கையைச் சித்திரிக்கும் அகப் பொருட் பாடல் ஒவ்வொன்றும் யாரேனும் ஒருவருடைய கூற்றாக இருக்கும். நாடகத்தில் பாத்திரங்களின் பேச்சாகவே எல்லாம் அமைவதுபோல, இயற்கையின் எழில், விலங்குகளின் இயல்பு, மக்களின் உணர்ச்சி முதலிய எல்லாச் செய்திகளும் இந்தக் கூற்று வகைகளிலே இயைந்து வரும். இவற்றைக் கூறும் தலைவன், தலைவி, தோழி முதலியவர்கள் கற்பனை உலகத்து மக்கள். இன்னார் என்று பெயர் கூறி உணராதவர்கள். காதலை யாரோடும் சார்த்திச் சொல்லக்கூடாது, சொன்னால் அதன் தூய்மை கெட்டுவிடும் என்று பழந் தமிழர் எண்ணினார்கள். அதனால், குறிப்பிட்ட ஒருவரைப் பாட்டில் புகழ வேண்டுமானால் அவர் பெயரைப் பாட்டில் எங்கேனும் நுழைத்து விடுவார்கள். மேலே காட்டிய திப்புத் தோளார் பாட்டில் முருகன் வருகிறான். அந்தப் பாட்டில் அந்த மலை முருகனுடைய மலை என்று அவன் பெயரைச் சார்த்திப் பாடுகிறார் புலவர். இப்படிச் சார்த்து வகையினால் தெய்வங்களின் பெயர்களும், செல்வர்களின் பெயர்களும் பாட்டில் வருமேயன்றி அவர்களையே காதல் நாடகத்தின் பாத்திரங்களாக வைப்பதில்லை. அப்படி வைத்தால் அது அகப் பொருளாகாது. பிற்காலத்தில் கடவுளை நாயகனாக வைத்துப் பாடிய பாடல்கள் பல உண்டு. அவை யாவும் அகத்துறைக்குப் புறம்பாய், புறப்பொருளில் பாடாண்டிணை என்னும் பகுதியைச் சார்ந்தவை. காதலின் உயர்வையும் தூய்மையையும் காட்டவே இத்தகைய மரபைத் தமிழ்ப் புலவர்கள் வகுத்துக் கொண்டார்கள் என்று தோன்றுகிறது.

ஆகவே, அகப்பொருட் பாடல்களில் வரும் தலைவன், என்றோ ஒருநாள் ஓரிடத்தில் இருந்தவன் அல்ல; எந்தக் காலத்தும் எல்லா இடத்தும் நித்தியமாக இருப்பவன். காதல் நித்தியமானது; அதனோடு தொடர்புடைய காதலனும் காதலியும் அவரைச் சார்ந்தோரும் காதலிலக்கிய உலகத்தில் நித்திய பாத்திரங்களாக நிலவுகிறார்கள்.

★

இதிலுள்ள பாடல்களில் தலைவன் கூற்று ஒன்றும் (2), தலைவி கூற்று நான்கும் (3, 4, 5, 7), தோழி கூற்று ஒன்றும் (6) இருக்கின்றன. களவுக் காலத்து நிகழ்ச்சியைச் சொல்பவை மூன்று (2. 3, 6); கற்புக் காலத்து நிகழ்ச்சியைச் சொல்பவை மூன்று (4, 5, 7).

தலைவன் தன் முயற்சியில்லாமலே தலைவியைக் கண்டு காமுறுகிறான். இந்தப் பகுதியை இயற்கைப் புணர்ச்சி என்று இலக்கணம் கூறும். தலைவியோடு அளவளாவிய தலைவன் அவளுடைய அழகு முதலியவற்றில் ஈடுபட்டு அவளைப் பாராட்டுகிறான். நலம் பாராட்டல் என்னும் துறையாக இதைப் புலவர்கள் சொல்வார்கள். வண்டைப் பார்த்துச் சொல்பவனைப்போலத் தன் காதலியின் சிறப்பை எடுத்துச் சொல்கிறான் (2); தலைவியை மணம் புரிந்துகொண்டு இல்லறம் நடத்தும்போது, தன் வாழ்க்கையில் பின்னும் வளம் நிரம்பும் பொருட்டுப் பிரிந்து செல்கிறான் (4); கார் காலத்தில் வந்து விடுவேன் என்று தலைவியிடம் கூறிப் பிரிகிறான் (5).

தோழி தலைவனைக் குறை கூறியபோது அதை மறுத்துக் கூற வந்த தலைவி, அவனுக்கும் தனக்கும் உள்ள காதலின் உயர்வை எடுத்துச் சொல்கிறாள் (3); அருளையும் அன்பையும் மறந்து பொருள் தேடச் செல்லல் தக்கதன்று என்று தோழியிடம் கூறுகிறாள் (4); இன்னும் தலைவர் வரவில்லையே என்று தோழி வருந்தினாலும், அவர் வாய்ச்சொல் தவறமாட்டார் என்று கூறி ஆறுதல் பெற்றிருக்கிறாள் (5); அவன் உடன் இருந்தால் அழகும் ஊக்கமும் பெற்று விளங்குகிறாள்; அவன் பிரிந்தால் பொலிவிழந்து வாடுகிறாள் (7).

தோழி சில சமயங்களில் தலைவன் மறைவில் இருக்கும்போது அவனைப் பற்றித் தலைவியிடம் குறை கூறுவதுண்டு (3); இதை இயற்பழித்தல் என்று இலக்கணம் கூறும். இப்படிச் சொல்வது தலைவனைக் குறை கூறவேண்டுமென்பதற்காக அல்ல. தலைவன் காதில் இது விழுமானால், யாவரும் அஞ்சும்படி களவொழுக்கத்திலே நெடுநாள் ஈடுபடக் கூடாதென்று உணர்ந்து மணம் புரிவதற்

குரிய முயற்சிகளைச் செய்வான். அதற்காகவே இப்படிப் பேசுவாள். இது வரைவு கடாதல் என்ற பிரிவில் அடங்கியது.

தலைவன் பிரிய எண்ணும்போது அவன் பிரிவைத் தலைவிக்கு உணர்த்துகிருள் தோழி. அவன் பிரிந்து சென்ற பிறகு தலைவிக்கு ஆறுதல் கூறித் தேற்றுகிருள். பருவம் வந்துவிட்டதானல், 'அவர் வரவில்லையே! இனி இவளுக்கு ஆறுதல் கூறுவது எப்படி?' என்ற கவலையும் அவளுக்கு உண்டாகிறது (5).

களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் அடிக்கடி சந்திப்பதற்கு வேண்டிய துணை புரிபவள் தோழி. ஆயினும் அவன் அவளை மணந்துகொண்டு உலகறியக் கணவன் மனைவியாக வாழ வேண்டுமென்ற ஆர்வம் அவளுக்கு இருக்கும். தலைவனைக் காண முடியாமல் பிரிந்து வாழும் நேரம் அதிகமாக இருப்பதால் தலைவி வருந்துவாள். அதனால் அவள் உடல் மெலியும். வேறுபாடுகள் ஏற்படும். அவற்றைக் கண்டு தாய்மார் குறி பார்க்க முயல்வார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் எப்படியாவது அவர்களுக்குத் தலைவிக்கு ஒரு காதலன் இருக்கிறன் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துவாள் தோழி. அவ்வாறு செய்வதை அறத்தொடு நிற்றல் என்று வழங்குவர் புலவர். குறத்தியை அழைத்து வந்து கட்டுப் பார்க்கும்போது, "அவர் குன்றத்தைப் பாடிய பாட்டை இன்னும் பாடு, பெண்ணே" என்று அந்தக் குறத்தியினிடம் சொல்கிருள் தோழி. அவளைக் கேட்டாலும், அந்தப் பேச்சிலிருந்து தலைவிக்குப் பிரியமான ஆடவன் ஒருவன் இருக்கிறனென்பதை நற்றாயும் செவிலித் தாயும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே தோழியின் கருத்து.

★

காதல் நிகழ்ச்சிகளை ஐந்து வகையாகப் பிரித்தார்கள் தமிழர்கள். புணர்ச்சி, பிரிவு, இருத்தல், ஊடல், இரங்கல் என்ற ஐந்து பகுதிகளாகப் பிரித்து அவற்றையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று பெயரிட்டு வழங்கினர். இப்படி ஐந்தாகப் பிரித்தாலும் ஒவ்வொரு பிரிவிலும் பல பகுதிகளும் அப் பகுதிகளில் பல துறைகளும் உண்டு. கிட்டத்தட்ட நானூறு துறைகள் அகப் பொருளில் உள்ளன. இத்துறைகளில் ஒவ்வொன்றிலும் அமைந்த பல பாடல்களைச் சங்க நூல்களில் காணலாம்.

அப் பாடல்கள் ஒரே துறையில் அமைந்திருந்தாலும், அவற்றில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி ஒன்றேயாக இருந்தாலும், ஒவ்வொரு பாடலும் தனித் தனிச் சுவையோடு இருக்கும். இதற்குக் காரணம், ஒரே கருத்தைப் புலவர்கள் வெவ்வேறு வகையிலே சொல்வது தான். முதற் பொருள், கருப் பொருள் வகைகளின் வருணனை களில் வேறுபாடு இருக்கும்; சொல்லுகிற முறையிலே வேறுபாடு இருக்கும். உணவு வகைகளை ஆறு சுவைகளுக்குள் அடக்கினு லும் உலக மக்கள் நுகரும் பண்டங்களில் அந்த ஆறு சுவைகளும் எத்தனை எத்தனை உருவம் எடுக்கின்றன! அப்படித்தான் ஒரு குறிப்பிட்ட துறைக்கு உரிய நிகழ்ச்சி ஒன்றேயானுலும், அந்த நிகழ்ச்சிக்குரிய நிலைக்களத்தின் வேறுபாட்டாலும், சொல்லமைப் பின் வேறுபாட்டாலும் பலவகை உருவங்களைப் புலவர்கள் படைத்துக் காட்டுகிறுர்கள். அதனுல்தான் அகத்துறைகளை அமைத்து நூற்றுக்கணக்கான பாடல்களை அவர்களால் பாட முடிந்தது.

## 4

குறுந்தொகையை முன்பு தி. சௌ. அரங்கசாமி ஐயங்கார் என்ற புலவர் பதிப்பித்தார். போதிய அளவு திருத்தங்கள் அந்தப் பதிப்பில் இல்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய ஆசிரியப் பிரானுகிய மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அந்த நூலைப் பதிப்பித்தார்கள். பல ஆண்டுகள் செய்த ஆராய்ச்சி யின் பயனுக மிகவும் அற்புதமான உரை யொன்றை எழுதி, முகவுரை, அகராதி முதலிய அங்கங்களுடன் அதை வெளியிட் டார்கள். அந்தப் பதிப்பு, தமிழ்நாட்டாருக்குக் கிடைத்த அரிய கருவூலம் என்றே சொல்லவேண்டும்.

அதை ஆராயும் காலத்திலும் பதிப்பிக்கும் காலத்திலும் ஐயரவர்களுடன் இருந்து பாடங் கேட்டும், ஏவல் செய்தும் வாழும் பேறு எனக்குக் கிடைத்தது. சங்க நூற் செல்வத்தைத் தமிழுல குக்கு வழங்கிய அப் பெருமானுடைய திருவருளால் சங்கச் செய்யுட்களில் சிறிது ஆழும் வாய்ப்புப் பெற்றேன். அதன் பய ளுகவே 'சங்கநூற் காட்சிகள்' என்ற இந்தப் புத்தக வரிசையை வெளியிடலானேன்.

நற்றிணையிலிருந்து ஒன்பது செய்யுட்களை எடுத்து விளக்கம் எழுதி "மனை விளக்கு" என்ற பெயரோடு இந்த வரிசையில் முதற் புத்தகம் இரண்டு மாதங்களுக்கு முன் வெளியாயிற்று. அதைப் பார்த்த அன்பர்கள், 'பொருள் விளக்கம் செய்வதில் இது புதிய முறை; நல்ல முறை' என்று பாராட்டினார்கள். பத்திரிகைகள் புகழுரை கூறின. இவற்றைக் கண்டபோது முருகன் திருவருளை யும் என் ஆசிரியப் பிரானின் ஆசியையும் எண்ணி அவர்களை வழுத்தினேன். பாராட்டுக் கூறிய அன்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

சங்கச் செய்யுட்கள் அவ்வளவுக்கும் இப்படியே விளக்கம் எழுதுவது முடியும் காரியம் அன்று. இந்த வரிசையில் வரும் புத்த கங்களைப் படிக்கும் அன்பர்கள் மூல நூலிலுள்ள பாடல்களை யெல்லாம் படித்து இன்புறவேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறு வார்கள் என்று நினைக்கிறேன். அதனால் சில சில பாடல்களுக்கு மாத்திரம் புது முறையில் விளக்கம் எழுத முன் வந்தேன். 'மனைவிளக்கை' வரவேற்ற தமிழுலகம் 'குறிஞ்சித்தேனை'யும் சுவைத்து மகிழுமென்று நம்புகிறேன்.

மயிலாப்பூர்
10—2—52

கி. வா. ஜகந்நாதன்

## குறிப்பு

இப்போது இந்தப் புத்தகம் இரண்டாம் பதிப்பாக வருகிறது. முதற் பதிப்பில் உள்ளபடியே இதில் எல்லாக் கட்டுரைகளும் இருக்கின்றன. மாற்றம் ஒன்றும் செய்ய வில்லை. ஆனால் பின்னால் மூன்று புதிய பாடல்களின் விளக்கத்தைச் சேர்த்திருக்கிறேன். குருவிக் குடும்பம், அவள் ஆவல், மகன்றிலின் காதல் என்ற தலைப்புடன் உள்ள மூன்று கட்டுரைகளாக அவ் விளக்கம் இருக்கிறது.

கல்யாண நகர்,
1—9—56

கி. வா. ஜ.

# உள்ளுறை

★

| | | |
|---|---|---|
| | முகவுரை | ... i |
| 1. | சேவலங் கொடியோன் | ... 1 |
| 2. | கூந்தல் மணம் | ... 15 |
| 3. | குறிஞ்சித் தேன் | ... 34 |
| 4. | அருளும் அன்பும் | ... 49 |
| 5. | கொன்றைக் கானம் | ... 59 |
| 6. | அகவல் மகள் | ... 68 |
| 7. | அணில் ஆடும் முன்றில் | ... 77 |
| 8. | குருவிக் குடும்பம் | ... 91 |
| 9. | அவள் ஆவல் | ... 97 |
| 10. | மகன்றிலின் காதல் | ... 103 |

★

# சேவலங் கொடியோன்

உலகத்தைக் கப்பி நிற்கும் இருள் ஒழிந்தது; பனி மூட்டம் பறந்து போயிற்று. இளைப்பினுலும் களைப்பினுலும் உடம்பு நொந்து உறக்கத்தில் ஆழ்ந் திருந்த மக்கள் விழித்துக் கொண்டனர். எங்கும் மோனம் நிரம்பியிருந்த உலகத்தில் இப்போது எங்கும் விழிப்பும் கிளர்ச்சியும் தோன்றிவிட்டன. காக்கை கரைகிறது. கோழி கூவுகிறது. பறவைகள் தத்தம் கூடுகளிலிருந்து சிறகை அடித்துக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டன. சோம்பல் சிறிதும் இன்றி, அங் கும் இங்கும் பறந்து திரியும் சுறுசுறுப்பை அந்தப் பறவைகள் பெற்றுவிட்டன.

இதுகாறும் பொருளின் வடிவு தெரியாமல், நிறம் தெரியாமல், அழகு தெரியாமல் இருள் மூடிக் கிடந் தது. மனிதன் கண் இருந்தும் கண் இல்லாதவ ஞனன். எதிரே உள்ள பொருள்களின் வடிவத்தை யும் வண்ணத்தையும் காண அவனுல் முடியவில்லை. காணமுடியாத இந்த இரவு நேரத்தில் கண்ணைத் திறந்து வீணே விழித்திருப்பது ஏன் என்று அவன் கண் மூடி உறங்கச் சென்ருன். இப்போது விடிந்து விட்டது. உலகத்துக்கே கண்ணுகிய சூரியன் தோன் றினுன். எல்லோருடைய கண்களும் மலர்ந்தன.

பூம்பொய்கையில் தாமரை மலர் மலர்ந்து விரிந்து தன் இணையற்ற எழிலையும் நிறத்தையும் கண் உள் ளார் கண்டு களிக்கும்படி காட்டுகிறது. சூரியனைக்

கண்டு உயிர்க் கூட்டங்களின் அகமும் முகமும் மலர் கின்றன. அதற்கு அடையாளம் போலத் தாமரை மலர் மலர்கின்றது. தண்மையும் மென்மையும் நிற மும் வடிவும் பொலிவும் மணமும் உடைய தாமரை, காணும் கண்ணுக்கு எழிலையும் தொடும் கரத்துக்கு மென்மையையும் மோக்கும் நாசிக்கு மணத்தையும் வழங்குகிறது.

நம்முடைய பெரியோர்கள் தாமரையைக் கண்டும் தொட்டும் மோந்தும் அழகு பார்த்தார்கள். உயர்ந்த பொருளுக்குத் தாமரையை அடையாளமாக்கினார்கள். தொட்டால் உதிரும் இதழையுடைய ரோஜாப் பூ இன்று பூவுலகத்தில் தலைமை வகிக்கிறது. மரத்துப் போன மூக்குக்கு ரோஜாப் பூவின் மணந்தான் தெரி கிறதே யன்றித் தாமரையின் மென்மணம் தெரிவ தில்லை. தாமரையின் நிறமும் மணமும் அளவு கட வாமல், நுண்ணிய உணர்ச்சியுடையாருக்கு இன்பம் தருவனவாக இருக்கின்றன. ரோஜாப்பூ இன்று வந்தது; எந்தக் காலத்திலும் ராஜாப் பூவாக இருப் பது தாமரை. தாமரையைத் தெய்விகத் தன்மை உடையதாக முன்னோர்கள் போற்றி வந்தார்கள். திருமகளும் கலைமகளும் நான்முகனும் தாமரையிலே எழுந்தருளியிருக்கிறார்கள். இறைவனே அன்பர் களின் உள்ளமாகிய கமலத்தில் வீற்றிருக்கிறான். இவ் வளவு சிறப்பைத் தாமரைக்குக் கொடுப்பதோடு நின்றுவிடவில்லை. நமக்குப் பற்றுக்கோடாக இருக் கும் இறைவனுடைய பாதத்துக்குத் தாமரையை உவமை கூறினார்கள். திருவடிகளையே தாமரையாக உருவகம் செய்தார்கள். பாதாரவிந்தம், அடிக் கமலம்,

தாள்தாமரை என்றெல்லாம் போற்றினர்கள். கருணைத் தேன் பில்கும் கமல அடியுடையான் இறைவன் என்று எண்ணி எண்ணி இன்புற்ருர்கள்.

இதோ ஒரு நல்லிசைச் சான்ருேர் முருகனை நமக்குக் காட்டுகிருர். பாரதம் பாடிய பெருந் தேவனுர் என்னும் பெயருடைய அப் பெரியார் கடவுளைப் பாடுவதில் திறமை பெற்றவர். திருமாலையும், முருகனையும், சிவபிரானையும் பாடியிருக்கிருர். நற்றிணையில் வரும் கடவுள் வாழ்த்தைப் பாடினவர் அவரே. அங்கே வேத முதல்வனுடைய விசுவ ரூபத்தைக் காட்டிய அவர் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்தில் சேவலங் கொடியோனுகிய முருகனுடைய திருக்கோல எழிலைக் காட்டுகிருர். வேத முதல்வனுடைய சேவடியை முதலிலே காட்டிப் பின் ஏனைய அங்க விரிவைக் காட்டியதுபோல, இங்கும் முருகனுடைய சேவடியை முதலிலே காட்டிப் பின்பு ஏனையவற்றைத் தரிசனம் செய்யச் செய்கிருர். சேவடி என்ருலே தாமரைதானே உவமையாக முன்வந்து நிற்கிறது? ஆதலின் தாமரையை முன் வைத்துப் பாட்டைத் தொடங்குகிருர்.

★

முருகனுடைய சேவடி அழகு பொலிவது. சிவந்த நிறமுடையது; ஆதலின் சேவடி என்று சொல்லுகிருேம். செம்மை, இலக்கணங்களெல்லாம் நிரம்பியதற்கு அறிகுறி; நேர்மைக்கு அடையாளம்; நிறைவுக்குரியது; உயர்வைக் குறிப்பது; வளப்பத்தைப் புலப்படுத்துவது; நன்மையைக் காட்டுவது. நேராக

உயர்ந்த மலையைச் செங்குத்தான மலையென்பதும், நேர்மையான உள்ளமுடையவனைச் செம்மனத்தான் என்று சொல்வதும் மரபு. செம்மையாகச் செடி வளர்ந்திருக்கிறதென்றால் நன்றாக வளம் பெற அது வளர்ந்ததையே குறிக்கும். செம்மையாகச் செய்தான் என்றால் குறைவின்றி நிறைவாகச் செய்தான், திருத்தமாகச் செய்தான் என்று கொள்கிறோம். இப்படியே செம்மை யென்பது நிறத்தை மாத்திரம் குறிப்பதோடு நில்லாமல், பல சிறந்த பண்புகளைக் குறிக்கும் செஞ் சொல்லாக நிற்பதைச் செந்தமிழ் நாட்டு வழக்கும் செந்தமிழ் நூல் வழக்கும் காட்டுகின்றன. முருகனுடைய அடி, நிறைவானது, வளப்பமானது, சிவந்தது; தூயது, குறைவிலாதது; இன்னும் உயர்ந்த சிறந்த பண்புகளையெல்லாம் சேர்த்துச் சொல்லிக் கொண்டே போகலாம்.

திருவள்ளுவர் இறைவன் திருவடியை நற்றாள் என்றும் மாணடி என்றும் சிறப்பிக்கிறார். நற்றாள் என்பதற்கு, 'பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார்' என்று உரை வகுத்தார் பரிமேலழகர். மாணடி என்பதற்கு, 'மாட்சிமைப்பட்ட அடிகள்' என்று அவர் பொருள் கூறினார். செம்மை என்ற சொல் நன்மையையும் குறிக்கும்; மாட்சியையும் குறிக்கும். ஆதலின் நற்றாள், மாணடி என்ற இரண்டு தொடர்களுக்கும் பரிமேலழகர் சொன்ன பொருளைச் சேவடி என்ற தொடருக்கும் கொள்வதில் குற்றம் ஏதும் இல்லை.

முருகனுடைய அடி சேவடி; செம்மையான அடி என்று மாத்திரமா சொன்னார் புலவர்? காமர் சேவடி

என்கிருர். காமர் என்ற சொல்லுக்கு அழகு என்று பொருள். அழகையுடைய சேவடி முருகன் திருவடி. அவனுடைய அடியழகு பக்தர்களுடைய உள்ளத்தைக் கவர்வது. அன்பர்களுடைய மனமாகிய வண்டுகள் இடையருமல் மொய்த்து ஈடுபடுவது. அந்த அடியழகின் பெருமையைக் கந்தபுராண ஆசிரியர் மிகச் சிறப்பாக ஓரிடத்தில் எடுத்துக் காட்டுகிருர்.

சூரபன்மனேடு முருகன் போர் செய்து கொண்டிருக்கிருன். அவனுடைய மாயங்களையெல்லாம் மாய்த்துப் போர் செய்கிருன். அவனை ஆட்கொள்ள வேண்டும் என்ற பெருங் கருணையால் அவனுக்கு முன் விசுவ ரூபம் எடுத்துக்கொண்டு நிற்கிருன். அந்தப் பெருந் திருவடிவைக் கண்ட சூரன் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்து நிற்கிருன். முருகனுடைய அற்புதமான அழகைக் கண்டு கண்டு அவன் தன் கண்களால் விழுங்குகிருன். கருத்து அதில் ஈடுபடுகிறது. அவனுடைய வியப்பு மேலும் மேலும் ஓங்குகிறது. முருகனுடைய சரண தாமரையைப் பார்க்கிருன். அந்த விமலமாம் சரணந்தன்னில் மேவிய எழிலிலே அவன் கண்கள் சிக்கிக் கொள்கின்றன. 'ஆ! என்ன அழகு! என்ன அழகு! மன்மதனை அழகுக்குத் தலைவன், அழகன் என்று இந்தப் பைத்தியக்கார உலகம் பிதற்றி நிற்கிறதே! ஒரு மன்மதன் அல்ல, இரண்டு மன்மதர் அல்ல; ஒரு கோடி மன்மதர்கூட அல்ல; ஆயிரங் கோடி காமருடைய அழகையெல்லாம் பிழிந்தெடுத்துத் திரட்டினுலும் சரி, இந்த அழகனுடைய காலழகுக்கு ஈடாகுமா? இந்த விமலமாம் சரணந்தன்னில் மேய அவ்வெழிலுக்கு ஒப்பாகுமா? காலழகே இப்படியானுல்

இந்தப் பெரிய திருவடிவத்துக்கு உவமை கூற வழி ஏது?' என்று திகைத்து நிற்கிருன்.

*ஆயிரம் கோடி காமர்*
*அழகெலாம் திரண்டொன் ருகி*
*மேயின எனினும், செவ்வேள்*
*விமலமாம் சரணந் தன்னில்*
*தூயஅவ் வெழிலுக் காற்ருது*
*என்றிடின் இனைய தொல்லோன்*
*மாயிரு வடிவுக் கெல்லாம்*
*உவமையார் வகுக்கற் பாலார் ?*

பகைவனுடைய உள்ளத்தையே கொள்ளை கொண்டு மயக்கும் அழகுடையது முருகன் சேவடி என்ருல் அன்பர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? "தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானம் என்னும், தண்டையம் புண்டரிகம்" என்று அருணகிரி நாதர் சொல்வார்.

அந்த அழகான சிவந்த திருவடி, தாமரையைப் போல விளங்குகிறது. தாமரையைப் போன்ற காமர் சேவடியை உடையவன் முருகன். தெய்வத்தைத் தரிசிக்கும்போது முதல் முதலில் திருவடியைத் தரிசிக்க வேண்டும். அவனுடைய திருவடியே நமக்குப் பற்றுக் கோடு. ஆதலின் முருகனுடைய அழகிய கோலத்தை நமக்குச் சொல்லால் கோலம் செய்து காட்ட வந்த புலவர் முதலில் தாமரை புரையும் (ஒக்கும்) காமர் சேவடியைக் காட்டுகிருர்.

முருகனுடைய திருமேனி சிவப்பு நிறமுடையது. "செய்யன் சிவந்த ஆடையன்" என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் போற்றுகிருர். அதனுல் முருக

னுக்குச் செவ்வேள் என்று திருநாமம் உண்டு. அவனுடைய சேவடிக்குத் தாமரையை உவமை கூறித் தொடங்கினர் புலவர். தாமரையைக் காட்டி, இப்படித்தான் முருகன் சேவடி இருக்கும் என்றார். அப்படியே அவன் செம்மேனிக்கும் ஓர் உவமையைக் காட்டுகிறார். பவழம் போன்ற சிவந்த மேனியை உடையவன் முருகன் என்கிறார். செம்மைக்குப் பவழத்தை உவமை கூறுவது மரபு. அருணகிரி நாதர் முருகன் திருவடிச் செம்மைக்குப் பவழத்தை ஒப்பாக்குகிறார்.

*மாத்ருகாபுட்ப மாலைகோலப்ர வாளபாதத்தில்*
*அணிவேலே*

என்ற திருப்புகழில், 'அழகான பவழம் போன்ற பாதம்' என்று முருகன் திருவடியைப் பாராட்டுகிறார்.

தாமரைபோன்ற சேவடியையும் பவழம் போன்ற மேனியையும் படைத்த முருகனுடைய உருவம் ஒளிமயமாக இருக்கும். ஒளி படைத்தமையால்தான் வானவர்களுக்குத் தேவர் என்ற பெயர் வந்தது. தேவாதி தேவனாகிய முருகனே பேரொளி படைத்த திருவுருவம் பெற்றவன். அந்த ஒளியை, 'சேண் விளங்கு அவிர் ஒளி' என்று நக்கீரர் பாராட்டுகிறார். சேவடியின் செம்மையும் மேனியின் செம்மையும் மனிதர்களிடத்திலும் அருமையாகக் காணலாம். ஆனால் ஒளியை அவர்களிடம் காணமுடியாது. முருகன் இடையீடில்லாமல் விளங்கும் ஒளி உருவத்தான். கதிரவனுக்கும் இல்லாத சிறந்த ஒளி அது. சோதிப் பிழம்பாக நிற்கும் பெருமான் முருகன் ஆதலின் அவனுடைய ஒளிக்கு உவமையே

இல்லை. ஆசையினாலே ஒவ்வொன்றுக்கும் உவமை கூறப் புகுந்த புலவரால் இந்த ஒளிக்கு உவமை கூற முடியவில்லை. சேவடிக்குத் தாமரையைக் கூறியும் மேனிக்குப் பவழத்தைக் கூறியும் விளக்கினார். அவர் தம் அகக் கண்ணிலே சேவடியை நிறுத்திக் கண்டார்; திருமேனியை நிறுத்தித் தரிசித்தார்; நமக்கும் காட்டினார். அப்பால் அவனுடைய ஒளியை நினைத்தார். எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக்கொண்ட அந்த ஒளி வெள்ளத்திலே மூழ்கிப்போனார். அதற்கு உவமை கூற வேறு பொருள் ஏது? அந்த ஒளி வெள்ளத்தில் மூழ்கிவிட்டால் வேறு பொருளின் நினைவுதான் வருமா?

சிறிய விளக்கை ஏற்றும்போது அதன் திரியில் சுடர் தோன்றுகிறது; அந்தச் சுடரைச் சுற்றி ஓர் ஒளி வட்டம் தோன்றுகிறது; பிறகு அதன் ஒளி எங்கும் பரவி நிற்கிறது. அப்படி முருகன் திருவடியை முதலில் சுட்டிக் காட்டினார். அதிலிருந்து விரிந்த திருமேனிப் பரப்பின் செம்மையிலே நம் கருத்தை நாட்டினார். அதிலிருந்து பின்னும் விரிந்து திகழும் ஒளிமயமான சூழலைக் காட்டினார். சேவடியிலிருந்து முழுமையான மேனியையும் அதிலிருந்து அகண்டமான ஒளியையும் காணும் நெறியே அகன்று படரும் நெறி; வர வர விரியும் நெறி. அப்படியின்றி வர வரக் குறுகும் நெறியிலே செல்லுதல் தெய்வ நெறியன்று; உலக நெறி; மருள் நெறி. சேவடி பற்றினால் செம்மேனி காணலாம்; செம்மேனி கண்டால் திகழ் ஒளி தெரியும். சேவடிக்கு நிறமும் வடிவும் உண்டு; மனம் அந்த நிறத்தையும் வடிவையும் பற்றிப் படரும். அதன் பின்

வடிவு மறைந்து நிறம் மாத்திரம் பரந்து நிற்கும் மேனி தெரிகிறது. பின் வடிவும் நிறமும் மறைந்து வடிவற்ற, நிறமற்ற, எல்லையற்ற திகழ் ஒளி தெரிகிறது. எல்லை கடந்த விரிவிலே உள்ளம் சென்று கரைந்து விடுகிறது. அந்த ஒளியிலே எல்லாம் மறந்த இன்பத் தூக்கம் வந்துவிடுமாம்.

*ஓங்காரத்து உள்ஒளிக் குள்ளே முருகன்*
*உருவங்கண்டு*
*தூங்கார்*

என்பர் அருணகிரி நாதர்.

சிறிது நேரம் முருகனுடைய திகழ் ஒளியிலே நின்றோம். மறுபடியும் நினைவு பெற்றுப் பார்க்கச் செய்கிறார் புலவர். அவனுடைய திருக்கோலத்தின் இயற்கையான அழகை மூன்று வகையாகச் சொன்னார். அவனுடைய அங்கங்களுள் நமக்குப் பற்றுக் கோடாகிய பாதத்தைப் பற்றி மாத்திரம் சொன்னார்; மற்றவற்றைப் பற்றிச் சொல்லாமற் போனாலும் குறையில்லை. பின் அவன் திருமேனி நிறத்தைச் சொன்னார். பிறகு ஒளியைச் சொன்னார். இவை மூன்றும் முருகனுடைய திருவுருவச் சிறப்பு. இனி, அந்தத் திருவுருவத்தோடு ஒட்டியும் சார்ந்தும் உள்ள மூன்று பொருள்களைத் தரிசிக்கும்படி செய்கிறார் புலவர். முருகன் திருமேனியில் அணிகள் பல உள்ளன. எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்க நேரம் இல்லை. அங்கங்களையெல்லாம் சொல்லாமல் அடி ஒன்றையே சொன்னாரே, அதுபோல அணிகளையெல்லாம் சொல்லாமல் ஆடையை மாத்திரம் சொல்கிறார்.

*அணியெல்லாம் ஆடையின் பின்*

என்று சொல்வார்கள். ஆதலின் ஆடையைச் சொல்ல வருகிருர். அதற்கும் உபமானம் கண்டு சொல்கிருர். அவனுடைய ஆடைகூடச் சிவந்ததுதான். குன்றி மணியைப் போலச் சிவந்தது. 'குன்றி மணியை ஒக்கும் உடையை உடையவன் முருகன்' என்று பெருந்தேவஞர் கூறுகிருர்.

முருகன் திருக்கரத்தில் வேலை ஏந்தியிருக்கிருன். முருகன் என்று நினைத்தாலே வேலும் நினைவுக்கு வருகிறது. அவனுடைய திருக்கரத்தில் அமர்ந்த வேல் நீண்ட வேல். அவன் அடிதொட்டு இடை தொட்டு முடியளவும் நீண்டு நிற்கும் வேல். பகைவர் கள் எங்கேயிருந்தாலும் அவர்களைத் தேடிச் சென்று கருவறுக்கும் நெடுவேல். அது சுடர்விடுகிறது. அன்பர்கள் காணக் காண அழகு தரும் சுடர் வேல் அது. அஞ்சுடர் நெடுவேல்; வீரவிளையாடல்களைச் செய்த வேல்.

கிரவுஞ்சகிரியை ஊடுருவித் துளைத்த வேல் அது. அந்த மலை எங்கும் பறந்து சென்று மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தது. அதன்மேல் முருகன் வேலை ஏவிஞன். அதன் நடுவிடத்திலே சென்று ஊடுருவிப் பிளந்துவிட்டது வேல். குன்றினது நெஞ்சு பகும்படியாக எறிந்த அஞ்சுடர் நெடுவேல் அது. அதை முருகன் தன் திருக்கரத்திலே வைத் திருக்கிருன்.

வீரத்துக்கு அடையாளம் வேல். அந்த வீரத் தாற் பெற்ற வெற்றிக்கு அடையாள்ம் கொடி. முருகன் சேவற் கொடியை உடையவன். அடியார்களுடைய

துன்பத்தைப் போக்கி இன்பம் காட்டும் திறம் உடையவன் என்பதை வேலும் சேவலும் புலப்படுத்து கின்றன. அசுரர்களாகிய இருளைப் போக்கியது அஞ்சுடர் நெடு வேல். இருள் போனல் விடியும் அல்லவா ? 'இருள் அகன்றது ; இனிப் பயம் இல்லை; விடிந்து விட்டது' என்பதைத் தன் குரலால் எடுத்து இயம்புவது சேவல். துன்ப நீக்கத்தைக் காட்டுவது குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல். இன்ப ஆக்கத்தைக் காட்டுவது சேவலங் கொடி. துன்பத்தை நீக்கும் ஆற்றலும் இன்பத்தை ஆக்கும் அருளும் உடைய முருகனை அடைந்தால் நம் துயர்கள் நீங்கி இன்பம் உண்டாகும்.

தேவர்களைச் சிறையில் அடைத்து அவர்களுடைய நாட்டைப் பற்றிக் கொண்டு, யாவருக்கும் துன்பத்தை உண்டாக்கினன் சூரன். அவனுக்குத் துணைவர்களாகப் பல அசுரர்கள் இருந்தார்கள். முருகன் அவர்களை யெல்லாம் அழித்து யாவருக்கும் இன்பத்தை உண்டாக்கினன். இது எந்தக் காலத்தில் நிகழ்ந்ததோ தெரியாது. ஆனல் இன்றும் முருகனுடைய திருவருளால்தான் உலகமே வாழ்வைப் பெறுகிறது. உயிர்களுக்கு வரும் இன்னல்களைப் போக்கி நன்மையைத் தந்து என்றும் பாதுகாக்கும் காவற்காரனாக இருக்கிருன் முருகன். அவனுடைய அருட்காப்பு இல்லையானல் உலகம் ஒரு நாள் கூட வாழாது. ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்கிருன்; காற்று வீசுகிறது; நாம் மூச்சுவிடுகிறோம்; நம் கைகால்கள் இயங்குகின்றன ; மரம் செடி கொடி, பறவை விலங்கு, மக்கள் யாவரும் தங்கள் தங்கள் இயல்புக்கு

அமைய வாழ்கிருர்கள். இவ்வளவுக்கும் காரணமாக நிற்பது முருகனுடைய திருவருள். உயிர்கள் இன்பத்தை அடைவது அவன் திருவருளால்தான். அவன் காவல் இல்லையாளுல் உலகில் இருள் மண்டிவிடும்; துயர் சூழும். ஆகவே உலகம் இன்பத்தைத் தரும் நாட்களைப் பெறுகிறதென்ருல் அதற்குச் சேவலங் கொடியோன் காவல்தான் காரணம். உலகு ஏம வைகலை எய்துகிறது; நெடுவேலையும் சேவலங் கொடியையும் உடைய முருகன் காப்பதனுலேதான் எய்துகிறது.

இவற்றையெல்லாம் அமைத்துப் பெருந்தேவனுர் பாடுகிருர்.

*தாமரை புரையும் காமர் சேவடிப்*
*பவழத் தன்ன மேனித் திகழ்ஒளிக்*
*குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்*
*நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்*
*சேவலங் கொடியோன் காப்ப*
*ஏம வைகல் எய்தின்றல் உலகே.*

★ தாமரையைப் போன்ற அழகிய செம்மையான அடிகளையும், பவழத்தைப் போன்ற சிவந்த திருமேனியையும், விளங்கும் பேரொளியையும்,' குன்றிமணிபோன்ற சிவந்த உடையையும், கிரவுஞ்சமலையின் நடுவிடம் பிளக்கும்படியாக வீசிய வேலையும், சேவற் கொடியையும் உடைய முருகன் பாதுகாத்தருளுவதனுல், உலகில் உள்ள உயிர்களெல்லாம் இன்பத்தையுடைய நாட்களைப் பெறுகின்றன.

புரையும் - ஒக்கும். காமர் - அழகு. குன்றி - குன்றி மணி. ஏய்க்கும் - ஒக்கும். உடுக்கை – உடை. குன்றின் நெஞ்சு- மலையின் நடுவிடம். ஏமம் - இன்பம். வைகல் - நாள். எய்தின்று - எய்துகிறது; அடைகிறது. ஆல்: அசை. ★

கோழிக் கொடியையுடையவன் காப்பாற்றுகிருன்; உலகத்துக்கு நல்ல பொழுதாக விடிகிறது. இப்படிச் சொல்வதில் ஒரு நயம் இருக்கிறதல்லவா?

முருகன் ஆறு திருமுகங்களை உடையவன். அவனுடைய சம்பந்த முள்ள பொருள்களை ஆறு ஆருகச் சொல்வதில் இன்பம் காணுவது அன்பர்கள் இயல்பு. அவனுடைய மந்திரத்தில் ஆறு எழுத்துக்கள் உள்ளன. அவனை வழிபடுவோர் பூசிக்கும் சக்கரத்தில் ஆறு கோணங்கள் உள்ளன. அவனுக்குரிய படை வீடுகள் ஆறு. அருணகிரி நாதர் முருகன் அடியார்களைப் பற்றி ஓரிடத்தில் கூறுகிருர். அவர்கள் முருகன் திரு நாமத்தைச் சொல்லித் திருநீற்றை உடம்பு முழுவதும் பூசிக் கொள்கிருர்கள். ஆறு முகத்தை நினைந்து பூசிக் கொள்கிருர்கள்; ஆறுமுகத்தை ஆறு தடவை நினைந்து அணிகிருர்களாம்.

*ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்*
*ஆறுமுகம் ஆறுமுகம்—என்றுபூதி*
*ஆகம்அணி மாதவர்கள்*

என்று திருப்புகழில் அருணகிரி நாதர் பாடுகிருர்.

இந்தக் குறுந்தொகைப் பாட்டில் ஆறு அடிகள் அமைந்திருக்கின்றன. பெருந்தேவனுர் ஆறுமுகனுக்கு ஆறு அடிப் பாட்டாகப் பாட வேண்டுமென்று நினைந்து பாடினுரோ, இல்லையோ; பாட்டைப் படிக்கும் நமக்கு ஆறு அடிகள் அமைந்ததற்கு ஒரு பொருத்தம் தோன்றுகிறது. அதுமாத்திரம் அன்று. இந்தப் பாட்டில் முருகனை ஆறு வகையாகக் காட்டுகிருர். அவர் நினைந்திராவிட்டாலும் அந்தப்பாட்டின் அமைதி நம்மை அப்படி நினைத்துப் பொருத்தங்

கண்டு பூரிக்கச் செய்கிறது. முருகன் தாமரை போன்ற சேவடியை உடையவன், பவழம் போன்ற மேனியை உடையவன், திகழும் ஒளியை உடையவன், குன்றி மணியைப் போன்ற உடையை உடையவன், அஞ்சுடர் நெடுவேலையுடையவன், சேவலங் கொடியை உடையவன் என்று அவனைப் பற்றிய ஆறு செய்திகளை இந்தப் பாட்டிலே காண்கிறோம் அல்லவா? அடி, மேனி, ஒளி என்ற திருவுருவத்தோடு ஒட்டிய அகத் தொடர்புப் பொருள் மூன்றும், உடை, வேல், சேவல் என்ற திருவுருவத்தோடு ஒட்டாத புறத் தொடர்புப் பொருள் மூன்றுமாக ஆறு பொருள்களின் மூலம் முருகன் திருக்கோலத்தை நினைத்துப் பார்க்கும் வகையைப் பாட்டிலே பெறுகிறோம்.

அடியிலே வைத்த கண்ணை மெல்ல மெல்ல மேலேறச் செய்து, முருகன் ஏந்தி நிற்கும் சேவலங் கொடி உயரப் பறக்கும் நிலையைப் பெருந் தேவனார் காட்டினார். வரவர நம் பார்வை உயர வழி காட்டினார்.

இந்த அழகிய பாட்டை, 'எல்லாக்குற்றமும் தீர்ந்த செய்யுள்' என்று, யாப்பருங்கலக் காரிகை என்ற இலக்கண நூலுக்கு உரை வகுத்த குண சாகரர் என்ற புலவர் சொல்கிறார்.

# கூந்தல் மணம்

சங்கப்புலவர்கள் முகங்களில் ஈயாடவில்லை. அவர்கள் இவ்வளவு காலமாக இத்தகைய அவமானத்தை அடைந்ததே இல்லை. ஒவ்வொரு புலவரும் தத் தமக்குத் தோன்றிய கருத்தை வைத்துப் பாவைப் பாடிப் பாண்டிய மன்னனிடம் காட்டினர். முன்பெல்லாம் அவர்களுடைய பாடல்களைக் கண்டு களித்து இன்புறும் இயல்புள்ள அவனுக்கு இப்போது அவற்றைக் கண்டபோது திருப்தி உண்டாகவில்லை, "ஒன்றேனும் யான் உணர்ந்ததைப் புலப்படுத்தவில்லை" என்று சொல்லிவிட்டான். தெய்வப் புலமையை உடையவர்கள் என்று சங்கப் புலவர்களைப் பாண்டியன் எண்ணி வழிபட்டான். தமிழுலகமும் அவ்வாறே மதித்தது. இப்போது அந்தத் தெய்வப் புலமைக்கும் குறையுண்டு என்பது பாண்டியனுக்குப் புலப்பட்டது. 'நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தும் என் எண்ணத்தை உணர்ந்து கவிபாட இயலவில்லையே! புலமைக்குப் பேரரசர்கள் என்று மதிக்கும் இவர்களுக்கே இயலாதென்றால், தமிழுலகில் வேறு யார் இந்த எண்ணத்தை நிறைவேற்றப் போகிறார்கள்?' என்று ஒரு கணம் நினைத்தான். ஆனால் அவன் எண்ணம் அதோடு நிற்கவில்லை. 'தமிழுலகம் அவ்வளவு வறியதாகி விட்டதா? நமக்குத் தெரியாமல் எங்கேனும் ஒரு மூலையில் திருவருட் பலம் பெற்ற புலவன் ஒருவன் இருத்தல் கூடும். அவனைக் கண்டு பிடிக்க இப்போது

தக்க சமயம் கிடைத்திருக்கிறது' என்று சிந்தித்தான். உடனே ஆயிரம் பொன்னை எடுத்தான். ஒரு கிழியில் வைத்துக் கட்டினுன். சங்கமண்டபத்தின் எதிரே ஒரு கோல் நாட்டி அதில் அந்தப் பொற்கிழியைத் தொங்கவிட்டான். "என் கருத்தை அறிந்து கவிதை பாடுபவருக்கு இந்தப் பொற்கிழி உரியது" என்று பறை அறைவித்தான். புலவர்களின் புலமைச் செருக்கை அடக்க வந்தது போல அந்தக் கோலின் மேல் பொற்கிழி தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு கண்டு புலவர்கள் பொருமினுர்கள்.

பாண்டிய மன்னன் கருத்தை யாரும் உணர வில்லை. அவன் அன்று ஒரு நாள் மாலை தன் அரண் மனையின் மேல்மாடத்தில் உலவிக்கொண்டிருந்தான். அப்போது ஒரு நறுமணத்தை அவன் உணர்ந்தான். அதுகாறும் அவன் அறிந்திராத மணமாக இருந்தது. அது வந்த திசையை நோக்கினுன். அவனுடைய பட்டத்துத்தேவி அங்கே தன் கூந்தலை ஆற்றிக்கொண் டிருந்தாள். உத்தமப் பெண்மணியாகிய அவளுடைய கூந்தலிலிருந்து வந்த மணம் அது என்பதை அவன் உணர்ந்து வியந்தான். இறைவனுடைய படைப்பில் உள்ள அற்புதத்தை எண்ணி எண்ணிப் பரவசம் அடைந்தான். இந்த உண்மையைப் பாட்டிலே வைத்துப் பார்க்க வேண்டுமென்ற வேட்கை அவ னிடம் எழுந்தது. தன் மனைவியின் கூந்தல் மண முடையது என்பதை விளம்பரப்படுத்த அவன் விரும்ப வில்லை. இறைவனுடைய படைப்பில் நன்மங்கையர் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் உண்டு என்ற உண்மையை வெளிப்படுத்தவே அவன் விரும்பினுன்.

அதை வெளிப்படையாகச் சொல்லவும் நாணினன். ஆகவே, "நான் ஓர் அரிய மணத்தை உணர்ந்தேன். அது பற்றிய என் கருத்தைப் பாட்டிலே பாடிக் கொடுக்க வேண்டும்" என்ற வேண்டுகோளைச் சங்கப் புலவர்களிடம் சமர்ப்பித்தான். அவன் சிந்தை யில் எண்ணியதைப் பாடவேண்டும். இதைச் சிந்தா சமுத்தி என்று சொல்வார்கள்.

சங்கப் புலவர்கள் பாண்டிய மன்னன் கருத்தை உணர்ந்து பாடவில்லை. "நம்மினும் புலமையிற் சிறந்தவர் யாரும் இல்லை" என்ற தருக்கோடு இருந்த அவர்களுக்கு நாணம் உண்டாவதற்காக, இந்த நிகழ்ச்சி ஆண்டவனுல் அமைந்தது என்று அன்பர்கள் எண்ணினர்கள்.

அக் காலத்தில் மதுரைத் திருக் கோயிலில் சோம சுந்தரக் கடவுளைப் பூசிக்கும் ஆதி சைவர்களுக்குள் தருமி என்ற பிரமசாரி ஒருவன் இருந்தான். இறை வனுடைய பூசை வழிவழியாக நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தால், அவன் மணம் செய்துகொள்ள விரும்பினன். ஆனல் அவனிடம் போதிய பொருள் இல்லை. தனக்குரிய பெரும்பொருள் மதுரைப் பெரு மானே என்று எண்ணி வாழ்பவன் ஆகையால், அவன் தன் விருப்பத்தை அந்த இறைவனிடம் விண்ணப் பித்துக் கொண்டு வந்தான். இறைவன் தக்க தருணத்தை நோக்கி இருந்தான் போலும்!

பாண்டியன் கருத்தறிந்து பாடும் கவிக்கு ஆயிரம் பொன் கிடைக்கும் என்ற செய்தி தமிழுலகம் முழுவ தும் பரவியது. தெய்விகப் புலமையைத் தோல்வி யுறச் செய்த அந்தக் கிழி தெய்வத்தின் புலமையையே

எதிர்நோக்கித் தொங்கிக் கொண்டிருந்தது. பாண்டியன் எண்ணமும் தருமியின் எண்ணமும் ஈடேறவும், நக்கீரனென்னும் பெரும் புலவனுடைய அகந்தையைப் போக்கி ஆட்கொள்ளவும், திருமுருகாற்றுப் படை முதலிய நூல்கள் அப்புலவர் பெருமானல் தமிழுலகுக்குக் கிடைக்கவும், எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னுடைய தமிழ்க் கவி ஒன்றைத் தமிழ் உலகம் பெற்று உவக்கவும் திருவுள்ளம் கொண்டான் ஆலவாய்ப் பெருமான். “கொங்குதேர் வாழ்க்கை” என்று தொடங்கும் செய்யுள் ஒன்றை எழுதித் தருமியிடம் வழங்கி, “பாண்டியனிடம் காட்டிப் பொன் பெறுக” என்று தெரிவித்தருளினன்.

தருமி அந்தச் செய்யுளைப் பாண்டியனிடம் காட்டினன். மன்னன் அதைக் கண்டான்; தன் கருத்தைத் தமிழ் மரபுக் கேற்பப் பொதுவகையில் அமைத்துவைத்திருப்பதைக் கண்டான். அதைத் தலைமேல் வைத்துக் கொண்டான். “கிழியை எடுத்துக் கொள்க” என்ருன்.

தருமி விரைந்து தென்று கிழியை அறுக்கப் போகும்போது நக்கீரன் அவனைத் தடுத்து, “இந்தப் பாட்டில் குற்றம் உண்டு. உன்னைப் பார்த்தால் இதைப் பாடினவனுகத் தோற்றவில்லை. இதைப் பாடித் தந்த புலவனை அழைத்து வா” என்ருன். தருமி துயரம் அடைந்து இறைவனிடம் சென்று விண்ணப்பிக்க, ஆலவாய் அண்ணல் புலவன் வேடம் பூண்டு தமிழ்ச் சங்கத்துக்கு வந்து, அந்தப் பாட்டில் உள்ள குற்றம் யாது என்று கேட்டான்.

நக்கீரன், “இதில் சொற் குற்றம் ஒன்றும் இல்லை. பொருட் குற்றம் உண்டு. பெண்களின் கூந்தலுக்கு

மலராலும் எண்ணெயாலும் சாந்தாலும் நறுமணம் அமையுமேயன்றி இயற்கை மணம் இல்லை" என்றான். இறைவன், "உத்தம மகளிரின் கூந்தலுக்கு நறுமணம் உண்டென்ற உண்மையை நீ அறியாயோ?" என்று கேட்டான். நக்கீரன் அதை மறுத்தான். "தேவ மகளிர் கூந்தலுக்கும் மணம் இல்லையா ?" என்று இறைவன் கேட்க நக்கீரன், "அவர்கள் கூந்தலுக்கும் இல்லை" என்றான். வாதம் வளர்ந்தது. இந்திராணி, கலைமகள், திருமகள் ஆகியவர்களின் கூந்தலுக்கும் இயற்கையில் மணம் இல்லையென்று சாதித்தான் நக்கீரன். இறுதியில் உமாதேவியின் கூந்தலும் அத்தகையதே என்று சொன்னான். இறைவன் பாட்டுக்குக் குறை கூறியது பெரிதன்று. உத்தம மகளிரை இழித்துக் கூறிய பெருங் குற்றத்துக்கு ஆளானான் நக்கீரன். ஆலவாய்ப் பெருமான் அவன் செருக்கை நீக்கத் தன் நெற்றிக் கண்ணைக் காட்டினான். அப்பொழுதும் நக்கீரனுடைய வாதவெறி அடங்கவில்லை, அவனைத் தண்டித்து ஆட்கொள்ளலே நெறியென்று எண்ணிய இறைவன் அவன் உடம்பை வெதுப்பினான். அதனால் தொழுநோய் பெற்று, உணர்ச்சியும் பெற்று இறைவனை வணங்கினான் கீரன். பிறகு காளத்தியில் கைலாச தரிசனம் பெற்றுப் பழைய நிலையை அடைந்தான்.

இந்தக் கதை திருவிளையாடற் புராணம் முதலிய பல நூல்களில் வருகிறது. காளத்திக்குப் போகும் வழியினிடையே நக்கீரன் திருமுருகாற்றுப்படையைப் பாடியதாக ஒரு வரலாறு வழங்குகிறது.

இத்தனை கதைகளையும் தன்னோடு தொடர்புடையதாகப் பெற்ற, "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற

செய்யுள் குறுந்தொகையில் இரண்டாவது பாட்டாக அமைந்திருக்கிறது.

*பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்*
*கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்*
*பொற்குவை தருமிக் கற்புடன் உதவி*
*என்உளம் குடிகொண் டிரும்பயன் அளிக்கும்*
*கள்ளவிழ் குழல்சேர் கருணைஎம் பெருமான்*

என்று கல்லாடம் என்ற நூல் இந்த வரலாற்றைக் குறிக்கிறது. பிற நூல்களிலும் புலவர்கள் இந்த வரலாற்றைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

'ஆலவாய் இறையனார் தருமியென்னும் பிரம சாரிக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்த சிந்தா சமுத்தி அகவல்' என்று இந்தப் பாட்டைக் குறிப்பிடு வார், தமிழ் நாவலர் சரிதையைத் தொகுத்த புலவர்.

★

**பா**ண்டிமா தேவியின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென்று சொன்னால் அது உத்தம மகளிர் எல்லோருக்கும் சாராது. பாண்டிய மன்னன் அவ் வாறு ஒருவரைச் சுட்டிப் புகழ்வதை விரும்பவில்லை. ஆதலின் பொது வகையில் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும். உத்தம மகளிர் கூந்தலில் இயற்கையாகவே நறுமணம் உண்டு என்று பொது வகையில் சொல்லலாம். ஆனால் அது கவிதை ஆகாது. உள்ளதை உள்ளபடி சொல்வது மாத்திரம் போதாது. அதை அழகாகச் சொல்ல வேண்டும். கூந்தலின் இயற்கை மணத்தைப் பற்றிச் சொன்ன லும் அதற்கு நிலைக்களமாக ஒரு காட்சியை அமைத் துக் காட்டினால்தான் அழகு ஏற்படும்.

இந்தப் பாட்டு ஒரு நாடகக் காட்சியையே சித்திரிக்கிறது. காதலன் ஒருவன் தன் காதலியின் கூந்தல் நறுமணம் உடையதென்று வியக்கிருன். 'உன் கூந்தல் அதிசயமான மணம் உடையது' என்று அவளிடம் சொன்னுல் அவளுக்கு நாணம் உண்டாகும். நன்ருகப் பழகியவர்களை நேருக்கு நேர் புகழ்வது தக்கதன்று. ஆகவே, வேறு வகையில் அந்தப் பாராட்டை வெளியிடுகிருன். அங்கே அருகில் பறக்கும் வண்டைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்கிருன்.

நன்மலர் பூத்த கொடியும் செடியும் மரமும் அடர்ந்த சோலையில் முதல் முறையாக அந்தக் காதலனும் காதலியும் சந்தித்தார்கள். இந்தப் பிறவியில் அவர்கள் இதற்குமுன் சந்தித்தது இல்லை. ஆனுல் அவர்களிடையே உள்ள தொடர்பு பிறவிதோறும் இருந்து வருவது. ஒவ்வொரு பிறவியிலும் கணவன் மனைவியராக அவர்கள் இருப்பவர்கள். இந்தப் பிறவியில் அவனும் அவளும் சந்திக்கும் வரையில் தனியே வாழ்ந்தார்கள். அவன் அவளுக்காகக் காத்திருந்தான்; தன்னை அறியாமலே காத்திருந்தான். அவளும் அவனுக்காகக் காத்திருந்தாள்; அது அவளுக்கே தெரியாது. இருவரையும் இயக்கும் ஊழ்வினை நடு நின்று அவர்களைச் சேர்த்து வைக்கும் செவ்விக்காகக் காத்து நின்றது.

இன்று அந்தச் செவ்வி வந்துவிட்டது. இந்தக் குறிஞ்சி நிலச் சோலையிலே அவர்கள் சந்தித்தார்கள். இதற்குமுன் அவ்விருவரும் யார் யாரையோ சந்தித்திருக்கிருர்கள்; பார்த்திருக்கிருர்கள். ஆனுல் அந்தப்

பார்வை பொதுப் பார்வை. மரத்தையும் மட்டையை யும் மலையையும் ஆற்றையும் பார்க்கும் பார்வை; உள் ளத்தோடு ஒட்டாத பார்வை. இப்போது ஒருவரை ஒருவர் பார்த்த பார்வைதான் பார்வை. அவர்களு டைய கண்கள் ஒன்றையொன்று கவ்வின. கண்க ளென்னும் சாளரத்தின் வழியே உள்ளங்கள் பார்த் துக் கொண்டன ; ஒன்று பட்டன. இவ்வளவு காலம் காத்திருந்த உள்ளங்கள் கலந்தன. ஒன்றற்கு ஒன்று இன்றியமையாதவை அவை. ஒன்றுக்காகவே மற் ருென்று இணைப்பாகப் படைக்கப் பட்டது. ஆகையால் இரண்டு உள்ளமும் உடனே ஒன்றுபட்டன; இயற்கை யாக ஒன்றுபட்டன; பிரிக்க முடியாமல் இணைந்தன.

நல்ல நிலத்தில் விளைந்த மஞ்சளை அரைத்து வைக்கிருர்கள். எங்கோ கரம்புநிலத்தில் உள்ள சுக் காங் கல்லிலிருந்தோ, கடலில் தோன்றிய கிளிஞ்சிலி லிருந்தோ சுண்ணும்பை உண்டாக்குகிருர்கள். அரைத்த மஞ்சளும் நீருன சுண்ணும்பும் முன்பு சேர்ந்து ஒரு நிலத்தில் விளையவில்லை. ஆனுல் இரண் டும் இணைந்தபோது அங்கே செம்மை தோன்றுகிறது. அந்தச் செம்மை வண்ணத்தை உண்டாக்கும் பண்பு தனித் தனியே சுண்ணும்பிலும் மஞ்சளிலும் பிரிந்து நின்றது. இப்போது இணைந்தபோது அந்தச் செம்மை வெளிப்படுகிறது. ஆடவனும் மடமங்கை யும் ஒன்றுபடுவதற்கு முன் காதல் அவருடே ஒளித் திருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்த போது அது வெளிப்பட்டது. கலந்த மஞ்சளையும் சுண்ணும்பையும் பிரிக்க முடியாததுபோல அவ்விரு வரையும் இனிப் பிரித்தல் இயலாது.

தெய்வம் நடுநின்று கூட்டியமையால் இந்தக் கூட்டுறவைத் தெய்வப் புணர்ச்சி என்று சொல்வார்கள். தம்முடைய முயற்சியின்றியே சந்தித்து இயற்கையாக ஒன்றுபட்டமையால் இயற்கைப் புணர்ச்சி என்றும் சொல்வார்கள். அகப் பொருளில் களவு என்ற பெரும் பிரிவின் முதற் பகுதி இந்த இயற்கைப் புணர்ச்சிதான். இந்தப் பகுதியில் பல நிகழ்ச்சிகள் உண்டு. காதலன் காதலியோடு அளவளாவி இன்பம் துய்த்தபின் அவளுடைய பெருமையை எடுத்துச் சொல்வான். அப்படிச் சொல்வதை நலம் பாராட்டல் என்ற துறையாகக் கூறுவார்கள்.

'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் இந்தப் பாட்டு 'நலம் பாராட்டல்' என்னும் துறையில் அமைந்தது. காதலியினது நலத்தைப் பாராட்டிக் கூற வந்த தலைமகன் வண்டைப் பார்த்துச் சொல்வது போலப் பேசுகிறான்.

★

வண்டை நோக்கிக் கூறுவதற்குப் பொருத்த மான காரணம் ஒன்று உண்டு. காதலியின் கூந்தல் மணம் உடையது என்பதைச் சொல்ல வருகிறான். "ஏ வண்டே, நீயே சொல்: இவளுடைய கூந்தலைப் போல நறுமணம் உடைய பூவை நீ எங்காவது கண்டிருக்கிறாயா?" என்று கேட்கிறான். மணத்தைத் தேர்வதில் வண்டு சிறந்தது. மலர்களில் உள்ள பூந்தாதை ஆராய்ந்து கிண்டி உண்டு மகிழ்வது வண்டு. தலைவன் உயர்ந்த சாதி வண்டாகிய தும்பியைப் பார்த்துச் சொல்கிறான்.

வண்டு மணத்தைத் தேர்வதிற் சிறந்தது என்பதைச் சீவக சிந்தாமணி ஒரு நிகழ்ச்சியால் நன்ருகப் புலப்படுத்துகிறது. குணமாலே, சுர மஞ்சரி என்ற இரண்டு பெண்கள் வாசனைச் சுண்ணப் பொடியைக் கூட்டி அமைத்தார்கள். அந்த இரண்டு சுண்ணங்களுள் எது உயர்ந்தது என்ற வாதம் எழுந்தது. சீவகனிடம் காட்டினுல் அவன் உயர்ந்ததைத் தேர்ந்து கூறுவான் என்பதை உணர்ந்த தோழிமார் அவனிடம் இரண்டையும் காட்டினுர்கள். குணமாலேயின் சுண்ணமே சிறந்த தென்று அவன் கூறினுன். அது சிறந்த தென்பதைக் காரணத்துடன் அவன் எடுத்துக் கூறியதோடு, யாவரும் நேரில் அறியும்படி ஒரு காரியம் செய்தான். அந்தச் சுண்ணங்களே ஆகாசத்தில் தூவினுன். சுரமஞ்சரியின் சுண்ணத்தை வண்டுகள் தொடவில்லே. குணமாலேயின் சுண்ணத்தை வண்டுக் கூட்டங்கள் மொய்த்து விரைவில் உண்டன.

*வண்ண வார்சிலே வள்ளல்கொண் டாயிடை*
*விண்ணில் தூவியிட் டான்;வந்து வீழ்ந்தன*
*சுண்ணம் மங்கை சுரமைய; மாலேய*
*வண்ண வண்டொடு தேன்கவர்ந் துண்டவே.*

(சீவக. 894)

இங்கே, காதலன் ஒரு பொருளின் நறுமணத்தைப் பற்றிப் பாராட்ட வருகிருன். அவனுடைய அன்பு காரணமாக அப்படித் தோன்றலாம் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்க விரும்பவில்லே. ஆதலின் நறு மண ஆராய்ச்சியிலே துறைபோகிய நிபுணனுகிய வண்டைச் சாட்சியாக்கிச் சொல்கிருன்.

வண்டுகளுக்குள் தும்பி என்பது மணம் தேர்வதில் சிறந்தது. கோத்தும்பி என்றும் அதைச் சொல்வதுண்டு. தலைவன் தும்பியை நோக்கிக் கூறும் பொழுது அதற்குள்ள தகுதியை நினைவுறுத்துகிறான். வாழ்க்கை முழுவதும் பூந்தாதைத் தேர்வதையே தொழிலாக உடையது. கொங்கைத் தேரும் வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பது. ஓரிடத்தில் இருக்கும் கொங்கை மாத்திரம் தேர்ந்து மன நிறைவு கொள்வது அன்று. பல மலைச்சாரல்களுக்கும் அங்கேயுள்ள பூம் பொழில்களுக்கும் சென்று சென்று பூக்களை மொய்த்துக் கொங்கினை உண்ணும் இயல்புடையது அது. அப்படிப் பல இடங்களுக்கும் சென்று கொங்கைத் தேர்வதற்குத் துணையாக அதற்குச் சிறகு அமைந்திருக்கிறது. பறவைகளுக்கு அமைந்த சிறகுகள் வெளிப்படையாகத் தோன்றும். வண்டுக்கோ பறக்கும் பொழுதுதான் தெரியும்; மற்றச் சமயங்களில் அதன் மேல் உள்ள ஓடு போன்ற ஒன்று உடம்போடு உடம்பாக ஒட்டி இருக்கும். பூக்களில் மொய்க்கும் பொழுது பார்த்தால் அதற்குச் சிறகு இருப்பதே தெளிவாகத் தெரியாது. புற ஓட்டுக்கு உள்ளே, அகத்தே, சிறகு அடங்கியிருக்கும்; அகத்தே சிறகையுடைய தும்பியாதலால் அதை அஞ்சிறைத் தும்பி என்று கூறுவது உண்டு. (அகம் சிறை—அஞ்சிறை. அகம் என்ற சொல்லும் சிறை யென்ற சொல்லும் சேர்ந்தால் அஞ்சிறை யென்று ஆகும். இலக்கண நூலில் இதற்குத் தனியே விதி உண்டு.) அஞ்சிறைத் தும்பி பறக்கும் பொழுது பார்த்தால் அழகாக இருக்கும். ஆகையால் அழகிய சிறையையுடைய தும்பி என்று

சொல்லும்படியும் அந்தத் தொடர் அமைந்திருக்கிறது. இரண்டும் அதற்குப் பொருத்தந்தான். அகத்தே சிறையையுடையது, அழகிய சிறையையுடையது. காதலன் பார்த்துப் பேசும் தும்பி.

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!' என்று அழைத்தான் தலைவன். இங்கே உள்ள நறு மணத்தைத் தேர்ந்து சொல்ல அதற்கு வாய்ப்பு என்ன? முதல் முதலில் அவன் காதலியைக் கண்டான். இருவர் கண்களும் சந்தித்தன. பின் அவளை அணுகினான். அவள் உடம்பைத் தொட விரும்பினான். அதற்கு ஒரு தந்திரம் செய் தான். அவளுடைய கூந்தலில் வண்டு வந்து மொய்த் தது. அதை ஓட்டுபவனைப்போல அவளை நெருங்கி அவளைத் தொட்டான். இப்படித் தொடும் நிகழ்ச்சியை 'மெய்தொட்டுப் பயிறல்' என்ற துறையாகச் சொல்வர் புலவர். 'வண்டோச்சி மருங்கு அணைதல்' என்றும் சொல்வது உண்டு. அப்படி வண்டை ஓச்சி அணைந்து இன்புற்றவன் ஆதலின், வண்டு அவள் கூந்தலின் நறுமணத்தை உணர்ந்திருக்க வேண்டுமென்று அவன் கருதினான்.

இப்போது காதலனுக்கு மற்றோர் எண்ணம் வந் தது. அபிமானத்தால் காதலியின் கூந்தல் மணமுள்ள தாக அவன் நினைக்கலாம். ஆதலால் வேறு ஒரு சாட்சியை அவன் அணுகினான். ஆனால் அந்தச் சாட்சி நடுநிலையில் நின்று சொல்வதாக இருக்க வேண்டுமே! தலைவியின் ஊரும் தலைவனுடைய ஊரும் அடுத்தடுத்தே இருப்பவை. அந்த வண்டு தலைவனுடைய இடத்தி லிருந்து இந்த இடத்துக்குத் தேன் நுகர வந்திருக்க

லாம். அவனே அப்படி வந்தவன்தானே ? ஒருகால் அந்தத் தும்பி தலைவனுடைய மலைச்சாரல் வண்டாக இருந்துவிட்டால், அது அவனுடைய விருப்பத்தை அறிந்து அவன் உள்ளம் உவக்கும்படி சொல்லக்கூடும் அல்லவா ? அப்படி அவன் விருப்பத்தை நினைந்து உண்மையை மறைத்துச் சொல்லக்கூடாது. உண்மை எதுவோ, தும்பி தன் அநுபவத்திற் கண்டது எதுவோ, அதைச் சொல்லவேண்டும்.—இவற்றை எல்லாம் எண்ணி அவன் பேசுகிறான்.

"கொங்கைத்தேரும் வாழ்க்கையையுடைய தும்பியே, அழகிய உட் சிறகையுடைய தும்பியே, நான் உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். நீ அதற்கு விடை சொல்ல வேண்டும். என் நிலத்து வண்டாதலின் என் விருப்பத்தையே சொல்ல வேண்டும் என்று நினைத்துச் சொல்லாதே. நீ கண்டதைச் சொல்" என்கிறான் ; " என் விருப்பம், என் காமம், எதுவோ அதைச் செப்பாது கண்டதை மொழி" என்று வேண்டுகிறான்.

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ.*

இப்படிச் சொன்னதற்கு மற்றொரு காரணமும் உண்டு. காதலிக்குத் தன் இடம் அருகில் இருப்பது என்பதைக் குறிப்பாகத் தெரியப்படுத்த இது பயன் படும். காமம் செப்பத்தக்க நிலை அந்தத் தும்பிக்கு இருப்பதனால்தான், அவன் அப்படிச் சொல்கிறான் என்பதை நுண்ணறிவுடைய காதலி உணர்ந்து கொள்வாள். 'தம்முடைய நிலத்து வண்டாதலின் இவ்வாறு சொல்கிறார். இவர் நிலம் அருகில் உள்

ளது போலும்' என்ற நினைவு அவளுக்கு உண்டாகும். காதலன் சொல்வதை வண்டு கேட்டு மறுமொழி சொல்லப் போகிறதா, என்ன? இதனால் காதலியின் உள்ளத்தே மகிழ்ச்சி உண்டாக வேண்டும் என்பதும், தன் மகிழ்ச்சியையும் வியப்பையும் எப்படியேனும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுமே தலைவனுடைய நோக்கம்.

★

"இந்தப் பெண்மணியின் கூந்தலைப் போன்ற நறுமணம் உடைய பூவை நீ கண்டிருக்கிறாயா?" என்று கேட்க வருகிறான் தலைவன். கூந்தலின் நறுமணத்தை மாத்திரமா அவன் கண்டு இன்புற்று வியந்தான்? அவளுடைய இயல்புகள் எல்லாமே அவனுக்கு இன்பத்தைத் தந்தன. அவற்றை அவன் வெளிப்படுத்துகிறான். அவளிடம் இன்ன இன்ன இயல்புகள் உண்டென்று தனித்தனியாக எடுத்துச் சொல்லவில்லை. அவளைப் பற்றிச் சொல்லும்போது அடைமொழிகளைச் சேர்த்து அந்த இயல்புகளைப் புலப்படுத்துகிறான்.

*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்*
*செறிஎயிற்று அரிவை*

என்று பாராட்டுகிறான்.

அவனுக்கும் அவளுக்கும் அமைந்த தொடர்பு இன்று புதிதாகத் தோன்றியது அல்ல; இந்தப் பிறவியிலே தோன்றியதும் அன்று. பிறவிதோறும் இருவரும் காதலர்களாக ஒன்றிப் பயின்றார்கள். அவர்களிடையே இருக்கும் நட்புப் பல பிறவிகளிற் பயின்ற

நெருக்கத்தை உடையது. இதைக் காதலன் சொல்கிறான். அந்தப் பழைய தொடர்பு இருப்பதனால்தான் இப்போது இருவரும் கண்டு காதல் கொள்ள முடிந்தது. இந்தத் தொடர்பு யாராலும் புதிதாக அமைந்ததன்று; ஆதலின் என்றும் அறுதது.

இப்படிச் சொல்வதும் தலைவியின் உள்ளத்தே உறுதியை உண்டாக்கத்தான். "ஏதோ இன்று கண்டு அறியாமையால் இவருடன் காதல் செய்துவிட்டோமே! இவர் யாரோ?—என்று அஞ்சாதே. நான் அருகில் உள்ள மலையில் வாழ்பவன்; ஊழின் வலியால் உன்னைச் சந்திக்கப் பெற்றவன். இந்த நட்புப் பழமையானது; உடம்பு போனால் போகும் நட்பு அன்று. உயிரோடு ஒட்டியது. ஆதலின் எல்லாப் பிறப்புக்களிலும் தொடர்ந்து வருவது" என்று விரிவாகச் சொல்லவில்லை அவன். ஆயினும் அத்தனை கருத்தையும் உள்ளடக்கிப் பயிலியது கெழுமிய நட்பு இது என்று சுருக்கமாகச் சொல்கிறான்.

பழைய தொடர்பினால் காதலியைச் சந்தித்ததை எண்ணியவன், அவளை முதல் முதலிற் கண்டபோது அவள் உருவத்தின் முழுச் சாயலும் மயில் போல இருந்ததை உணர்ந்தான்; அதை இப்போது நினைக்கிறான். பயிலியது கெழீஇய நட்புக்குப் பின், அந்த மயில் இயல் நினைவுக்கு வருகிறது. மயிலியலைக் கண்டு அவள் கண்களோடு அவன் கண்கள் மோன மொழி பேசிக் குலாவின. அப்பால் அவளுக்கு அவனிடம் காதல் தோன்றியதை அவன் உணர்ந்து கொண்டான். அப்படி உணரத் துணையாக இருந்தது அவளுடைய புன்முறுவல். அந்த முறுவலே அவ

ளுடைய உள்ளத்துக்குள்ளே அரும்பிய காதற் குறிப்பை உணர்த்தி அவனுடைய உயிரைத் தளிர்க்கச் செய்தது. அந்த அழகிய முறுவலை நினைக்கிருன்.

அதன் பின்னர் அவளோடு இன்புற்றபோது அந்த முறுவலைச் செய்த எயிற்றின் இயல்பை நன்கு உணர்ந்தான். அவளோடு ஒன்றுபட்ட அவன் தான் பெற்ற நுகர்ச்சியை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்கிருன். அவள் எயிறு செறிவுள்ளவை என்று பாராட்டுகிருன். முறுவற் குறிப் புணர்ந்த போதும், இன்புற்ற போதும் அறிந்த அதுவே முதலும் முடிவுமாகிய நிலையைக் குறிக்கின்றது. அவன் அவளைப்பற்றிச் சொல்லும்போது இவை முறையாக வருகின்றன. அவளைச் சந்திக்கக் காரணமான பழைய நட்புரிமையும், அவளைச் சந்தித்த போது அவன் கண்ட சாயலும், அவள் காதலையறிந்து இன்புற்றபோது உணர்ந்த செறி எயிறும் ஒன்றன் பின் ஒன்ருக அவனுடைய பாராட்டில் இணைகின்றன. பிறவிதோறும் வந்த தொடர்புடையாள் என்பதனுல் உரிமையையும், மயில் போலும் சாயலுடையாள் என்பதனுல் அவளுடைய அழகையும், செறி எயிறுடையாள் என்பதனுல் தான் பெற்ற இன்பத்தையும் புலப்படுத்துகிருன். "இத்தகைய அரிவையினது கூந்தலின் நறுமணத்தை நீ கண்டாயே; கண்டதைச் சொல். நீ பல மலர்களைக் கண்டிருப்பாய். அவற்றின் தாதைத் தேர்ந்து மணத்தை அறிந்திருப்பாய். அத்தனை மலர்களிலும் இந்த அரிவையின் கூந்தலைப் போன்ற மணத்தை உடைய மலர்கள் எவையேனும் நீ அறிந்ததுண்டா? சொல்" என்று காதலன் கேட்கிருன். "இது

போன்ற மணமுடையது வேறு இல்லை'' என்று அவன் சொல்லவில்லை. ஆனால் கருத்து அதுதான். ஆயினும் அப்படிச் சொல்வதில் சுவை இராது. ஆகையால் கேள்வி கேட்பது போல வைத்தான்.

''இந்தப் பெண்ணின் கூந்தலுக்கு மலரால் மணம் வந்தது. இவள் மலர் சூடும் இயல்புடையாள்'' என்று யாரேனும் நக்கீரரைப் போலக் கூற முன் வந்தால், மலரால் வந்த மணம் என்றால், இன்ன மலரின் வாசனை வீசுகிறது என்று சொல்லிவிடலாம். நம்மால் சொல்ல இயலாவிட்டாலும் கொங்கு தேர் வாழ்க்கையை உடைய தும்பி பல பூவை அறியும் பழக்கமுடையதாதலின் அது தேர்ந்து சொல்லும். ஆகவே அதைக் கேட்கிறேன்'' என்று தலைவன் கேட்பது போலவும் அமைந்திருக்கிறது பாட்டு. "உலகில் உள்ள மலர்களின் மணத்தை உடையது அன்று இந்தக் கூந்தல். இந்தக் கூந்தலின் மணத்தை எந்த மலரிலும் காணவொண்ணாது. இது தனக்கெனத் தனியே இயற்கையாக ஒரு நறுமணத்தை உடையது'' என்ற கருத்தைப் பாட்டுச் சொல்கிறது.

உத்தம மகளிர் கூந்தலில் இயற்கையான மணம் உண்டு என்ற கருத்தை இந்தப் பாட்டு ஒரு நாடகத்தில் வரும் காட்சி போல அமைத்துக் காட்டுகிறது அல்லவா?

*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,*
*காமம் செப்பாது கண்டது மொழிமோ;*
*பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயற்*
*செறிஎயிற்று அரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோநீ அறியும் பூவே?*

★ பூந்தாதை (உண்பதற்காக) ஆராயும் வாழ்க்கையையும் உள்ளிடத்தே சிறகையும் உடைய தும்பியே, என் விருப்பத்தைச் சொல்லாமல் நீ அறிந்ததைச் சொல்வாயாக! (பிறவிதோறும்) பழகுவதைப் பொருந்திய காதலையும், மயிலின் சாயலையும், நெருங்கிய பற்களையும் உடைய என் காதலியினுடைய கூந்தலைப்போல நறுமணத்தை உடைய பூக்களும் நீ அறியும் மலர்களில் இருக்கின்றனவோ?

கொங்கு - பூந்தாது. அஞ்சிறை - அகத்தே உள்ள சிறகு. காமம் - விருப்பம். மொழிமோ - சொல்; மோ: முன்னிலையில் வரும் அசை. பயிலியது - பழகியது. கெழீஇய - பொருந்திய. இயல் - சாயல். செறி எயிறு - நெருங்கிய பல். கூந்தலின் - கூந்தலைப்போல. நறிய - நறுமணமுடையவை. பூவே - மலர்களுக்குள்ளே. ★

'இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற தலைமகன் தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு, மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் தன் அன்பு தோற்ற, நலம் பாராட்டியது' என்பது இந்தப் பாட்டுக்குரிய துறை. 'முதல் முதலில் தலைவன் தலைவியைக் கண்டு அவளை அணுக இயலாமல் தடைப்பட்டு நின்ற போது, காதலியை நாணத்தினின்றும் விடுவிக்கும் பொருட்டு வண்டை ஓட்டுவானைப்போல அவள் உடம்பைத் தொட்டுப் பழகியும் வேறு சில செயல் செய்தும் அவளோடு அளவளாவிய பின் தன் அன்பு புலப்படும்படியாக அவளுடைய அழகைப் புகழ்ந்து கூறியது' என்பது இதற்குப் பொருள்.

இதைப் பாடியவர் இறையனர். குறுந்தொகையில் இரண்டாவது பாட்டாக உள்ளது இது.

இந்தப் பாட்டில் உள்ள பொருளை எடுத்து அமைத்துப் பல பெரியோர்கள் பிற்காலத்தில் கவி

களைப் பாடியிருக்கிறார்கள். உதாரணமாக நம்மாழ்வார் இயற்றியுள்ள திருவிருத்தத்தில் 55-ஆம் பாடலாக இருக்கும் செய்யுள் ஒன்றை இங்கே காணலாம்.

*வண்டுக ளோவம்மின்; நீர்ப்பூ நிலப்பூ*
*மரத்தில்ஒண்பூ*
*உண்டு களித்துழல் வீர்க்குஒன்று உரைக்கியம்:*
*ஏனம்ஒன்றாய்*
*மண்துகள் ஆடிவை குந்தம்அன் னாள்குழல்*
*வாய்விரைபோல்*
*விண்டுகள் வாரும் மலர்உள வோநும்*
*வியலிடத்தே.*

# குறிஞ்சித் தேன்

காதலன் காதலியை நாள்தோறும் தினைப்புனத்திலோ வேறு இடங்களிலோ கண்டு அளவளாவிச் சென்றான். தினைப்புனத்தைக் காக்கும் வேலை இல்லாமல் காதலி வீட்டிலே தங்கினால் இராக்காலங்களில் வீட்டுக்குப் புறம்பே யாரும் அறியாதபடி அவளைச் சந்தித்து வந்தான். பகலிலே சந்திக்கும் நிகழ்ச்சியைப் பகற் குறியென்றும், இரவிலே சந்திப்பதை இரவுக் குறியென்றும் சொல்வார்கள். பகலிலே இன்ன இடத்திலே சந்திப்பது என்று குறிப்பிட்டுக் கொண்டு வந்து சேர்தலால் பகற்குறி என்ற பெயர் வந்தது. அப்படியே இரவிலே குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதால் இரவுக் குறி என்ற பெயர் வந்தது. அவ்வாறு சந்திப்பதற்கு உரியதாகக் குறிப்பிடும் இடத்தைக் குறியிடம் என்று சொல்வார்கள்.

பகற் குறி, இரவுக் குறி என்ற இரண்டும் களவுக் காதல் நிகழும்போது அமைவன. அக் காலங்களில் காதலிக்கு உறு துணையாக அவளுடைய ஆருயிர்த் தோழி உடன் இருப்பாள். காதலியினுடைய குறிப்பறிந்து அவள் விருப்பத்தைத் தலைவனுக்குத் தெரிவிப்பதும், அவ்விருவரையும் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதற்கு வேண்டியவற்றைச் செய்வதும் போன்ற உதவிகளை அவள் செய்வாள்.

ஒருவரும் அறியாமல் களவொழுக்கத்திலே எவ்வளவு நாளைக்கு ஈடுபட முடியும்? சில சமயங்களில் தலைவன் தலைவியைச் சந்திக்கமுடியாமல் போய்விடும். அப்பொழுதெல்லாம் அவள் மிக்க துன்பத்தை அடைவாள். 'இப்படி எவ்வளவு நாளைக்குப் பிறர் அறியாமல் நட்புச் செய்வது? உலகம் அறிய மணந்துகொண்டு வாழ்ந்தால் எப்போதும் பிரியாமல் இருக்கலாமே!' என்ற எண்ணம் அவளுக்கு உண்டாகும். அந்தக் குறிப்பைத் தோழி உணர்ந்து கொள்வாள். அவ்விருவரும் சந்திப்பதில் பல இடையூறுகள் நேர்வதையும், தலைவனுடைய பிரிவினுல் தலைவி செயலழிந்து நிற்பதையும் தோழி தலைவனிடம் கூறுவாள். அவற்றை அவன் கேட்டு, 'இத்தகைய இடர்ப்பாடுகள் இல்லாமல் இருக்க வேண்டுமானுல் காதலியை மணந்து கொள்வதுதான் தக்கது' என்று நினைப்பான். அதற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்யப் புகுவான். இவ்வாறு, திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைத் தலைவனுடைய கருத்திலே தோன்றும்படி தோழி கூறுவனவற்றை வரைவுகடாதல் என்று சொல்வார்கள். வரைவு என்பது மணத்தைக் குறிப்பது. கடாதல்-செலுத்துதல். களவுக் காதலில் ஈடுபட்டிருக்கும் தலைவனுடைய மனத்தில் திருமணத்தைப் பற்றிய எண்ணத்தைப் புகுத்துவதால் வரைவு கடாதல் என்ற பெயர் வந்தது. களவு என்னும் ஒழுக்க வகையில் வரைவு கடாதல் என்பது ஒரு பகுதி. ஒழுக்க வகையைக் கைகோள் என்று இலக்கணம் கூறும். வரைவு கடாதலைப் போன்ற பகுதியைக் கிளவித் தொகை என்று பிற்கால இலக்கணங்கள் கூறும். களவு என்னும்

கைகோளில் வரைவு கடாதல் என்னும் கிளவித் தொகையில் பல துறைகள் உண்டு. ஒவ்வொரு துறையும் யாரேனும் ஒருவருடைய கூற்றாக இருக்கும். இப்போது வரப்போகும் கூற்றுத் தலைவியினுடையது.

*

வழக்கம்போல் தலைவியைச் சந்திப்பதற்காகத் தலைவன் வந்து மறைவில் நிற்கிறான். தலைவி அவனைச் சந்திக்கும்பொருட்டுத் தோழியுடன் வருகிறாள். தலைவன் வந்து மறைவில் நிற்பதை அவ்விருவரும் தெரிந்துகொள்கிறார்கள். அவனை எப்படியாவது திருமணத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யத் தூண்ட வேண்டுமென்று தோழி எண்ணியிருந்தாள். அதை அவனிடம் நேரில் தெரிவிப்பது மரியாதையாக இராதே என்று நினைத்தாள். மறைமுகமாகவாவது சொல்லத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தாள்.

இப்போது அவன் மறைவில் இருப்பது தெரிந்து, அவன் காதிலே படும்படி தலைவியை நோக்கிப் பேசுவது போலப் பேசத் தொடங்கினாள்.

"உன்னுடைய காதலர் செய்யும் காரியம் ஒன்றும் நன்றாக இல்லை. உன்னை யாரும் அறியாமல் சந்தித்து அளவளாவும் இந்தச் செயல் எவ்வளவு நாளைக்கு நடக்குமென்று அவர் நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் நீ படும் துன்பத்தை நான் அல்லவா அறிவேன்? அவரை நீ சந்திக்கும்போதெல்லாம் உனக்கு உலகமே மறந்து போகிறது. இன்பக் கடலில் துளைந்து மகிழ்கிறாய். அப்போது அவர்

உன்னைப் பார்ப்பதால் உன்னுடைய துன்பத்தை அவரால் அறிய முடிவதில்லை. அவர் உன்னைச் சந்தித்து விட்டுப் போன பிறகு நீ அவர் பிரிவால் படும் இன்னலை நான் ஒவ்வொரு கணமும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர் வருவதற்குச் சிறிது தாமதம் ஆகுமானால் நெருப்பிலே விழுந்த புழுவைப் போல நீ துடிதுடித்து வாடுகிறாயே! அந்த நிலையை அவர் எண்ணிப் பார்க்கிறாரா?"

தோழி சொல்வது அத்தனையும் உண்மை என்பதைக் காதலி அறிவாள். ஆகவே அவள் விடை கூறாமல் மௌனமாக நிற்கிறாள்.

"அவர் ஆடவர். எதற்கும் அஞ்சாதவர். நாமோ பெண்டிர். எது வந்தாலும் அவருக்குக் கவலை இல்லை. நமக்கோ ஒவ்வொரு கணமும் அச்சமாக இருக்கிறது. பெண்டிருடைய மன நிலையை உணர்ந்துகொள்ளாத ஆடவரை என்னவென்று சொல்வது?"

இதுவரை காதலி படும் துன்பத்தைப் பற்றிப் பேசிய தோழி, இப்போது காதலனைக் குறைகூறத் தொடங்குகிறாள். அவனுடைய இயல்பை இழிவாகக் கூற முற்படுகிறாள். இப்படிப் பேசுவதற்கு இயற்பழித்தல் என்று இலக்கணத்தில் பெயர் வைத்திருக்கிறார்கள். தோழி தலைவனுடைய இயல்பைப் பழிக்கிறாள்.

"அவர் உண்மையாக உன்னிடத்தில் அன்புடையவராக இருந்தால் உன் மன நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? மலரைப் போல மெல்லிய உள்ளம் படைத்தவர் மகளிர் என்ற உண்மையை அவர் தெரிந்துகொள்ளவில்லையோ? தெரிந்தும்

அதைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்கிருரோ? இந்தக் களவொழுக்கத்தையே என்றைக்கும் மேற்கொள்வது என்பது முடிகிற செயலா? வாழ்வு முழுவதும் துணைவியாக உன்னை ஏற்றுக்கொள்வது அவருடைய கடமை அல்லவா? அவருக்கும் உனக்கும் உள்ள நட்பை உரனுடையது என்று நம்ப என் உள்ளம் துணியவில்லையே! சிலகாலம் கண்டு பழகிப் பிரிபவர் செய்வதுபோல அல்லவா இருக்கிறது இது?'' என்ருள் தோழி.

இதுவரையில் தோழி சொல்வனவற்றைப் பொறுமையாகக் கேட்டு வந்த தலைவி, அவள் தலைவனுடைய இயல்பைப் பழித்தபோது, அதைக் கேட்கப் பொறுக்கவில்லை. அது மாத்திரம் அன்று. தெய்வத்தின் திருவருளால் அவர்கள் ஒன்றுபட்டார்கள். அவர்களிடையே அமைந்த நட்பைத் தோழி நன்கு தெரிந்துகொள்ளவில்லை. அந்த நட்பின் உயர்வை அவளும் அவனுமே அறியமுடியும். ஆ! அதற்கு இணையாக இந்த உலகில் ஒரு பொருளும் இல்லையே! அது எத்தனை சிறந்தது! எவ்வளவு உறுதியானது! தோழி அதன் சிறப்பை உணராமல் அல்லவா பேசுகிருள்? தலைவி இப்போது உணர்ச்சியினுல் உந்தப்பட்டுப் பேசத் தொடங்கிவிட்டாள்.

"தோழி, நீ அந்த நட்பைப்பற்றிச் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை. என்னுடைய துன்ப நிலையை மாத்திரம் நீ உணர்ந்தாய். என் இன்ப நிலையை மாத்திரம் அவர் உணர்ந்தார். இந்த இரண்டு நிலையிலும் பிரிவின்றி நின்றிருக்கும் எங்கள் காதலின் திறத்தை நீ அறியவில்லை. அதை அறியும்

படி சொல்ல வார்த்தை இல்லை. நான் அதை உனக்கு எப்படிச் சொல்வேன்! உலகத்தில் எந்தப் பொருளைப் பற்றியாவது சிறப்பித்துச் சொல்லவேண்டுமானால், அதன் அளவைக் குறித்துப் பேசுகிறார்கள். உவமை கூறிப் பாராட்டுகிறார்கள். காதல் அளவுக்கு அப்பாற் பட்டது; உவமைக்கு அடங்காதது. உரைக்கே அடங்குவதல்லவே! கடவுளைப் பற்றிச் சொல்ல வருப வர்கள், அவர் எல்லையில்லாதவர், உவமானம் இல்லா தவர், உணர்தற்கு அரியவர், உணர்ந்தவராலே பிற ருக்கு உணர்த்துவதற்கு அரியவர் என்று பலபடியாகச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இந்தக் காதல் கடவுளைப் போன்றது; கடவுளால் அமைந்தது; கடவுள் தன்மை உடையது. இதைக்காட்டிலும் பெரியது ஒன்று இல்லை. இதைக்காட்டிலும் உயர்ந்தது இல்லை. இதைக்காட்டிலும் உறுதி யானதும் இல்லை. இதைக்காட்டிலும் இனிமை யானது முக்காலும் இல்லை. பரந்து விரிந்தது, உயர்ந்து சிறந்தது, ஆழ்ந்து உறுதி பெற்றது, உயி ரிலே இனிப்பது என்று சொல்லுகிறேன். என் வார்த்தைகள் உனக்கு விளங்குமென்று தோன்ற வில்லை. நான் என் செய்வேன் தோழி!"

தோழி அவளைக் கூர்ந்து கவனிக்கிறாள். மறை வில் நின்ற தலைவனும் கவனிக்கிறான். இதற்கு முன் தோழி பேசிய வார்த்தைகள் அவன் காதில் விழுந் தன. அப்பொழுது அவன் மனம் வேதனைப்பட்டது. தான் செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்ய வில்லை என்று அறிந்து வருந்தினான். தோழியின்மேல் அவனுக்குக் கோபம் வரவில்லை. காதலியை மணந்து

47269

கொள்ளாமல் காலம் கடத்துவது பிழை என்ற உணர்ச்சி அவனுக்கு வந்தது.

இப்போது தலைவி தங்களிடையே அமைந்த காதலைப்பற்றிச் சொல்வது அவன் செவிகளில் இனிதாக விழுந்தது. அவள் வார்த்தையினூடே இழையும் உணர்ச்சியை அவன் ஒருத்தனால்தானே நன்றாகத் தெளிய முடியும்? அவன் கூர்ந்து கேட்கிறான். தலைவி மேலே பேசுகிறாள்.

"பெரிய பொருள் என்று ஒன்றைச் சொல்வதானால் உலகத்தைப்போலப் பெரியது என்று சொல்கிறார்கள். எங்களிடையே அமைந்த காதல் உலகத்தினும் பெரியது. நிலத்தினும் பெரியதாகிய இந்தக் காதல் இல்லையானால் எனக்கு உலகமே இல்லையே! உலகத்தைப் பயனுடையதாக ஆக்கும் இந்தக் காதல் உலகத்தைவிடப் பெரியதுதானே? என் உடலையும் உள்ளத்தையும் உயிரையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் இந்தக் காதலுக்கு நிலத்தை உவமை சொல்லலாமா? நிலம் பெரிதுதான். ஆனால் இந்தக் காதல் நிலத்தினும் பெரிது. எங்களிடையே அமைந்த இந்த நட்பு மிக உயர்ந்ததென்று சொல்கிறேன். உயரம் என்றவுடன் மலையும் மரமும் நினைவுக்கு வருகின்றன. யான் பெற்ற பொருள்களில் இந்தக் காதல் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்து நிற்கிறது. மலையைவிட உயர்ந்த பொருள் இல்லையா ? அதோ மலைக்கு மேலே மேகம் இருக்கிறது. மலை உயர்ந்த தென்றால் அதைவிட உயர்ந்தது மேக மண்டலம் என்று சொல்லலாம். அதையும் விட உயர்ந்தது சந்திர மண்டலம்; அதையும் விட உயர்ந்தது சூரிய

மண்டலம்; பின்னும் உயர்ந்தது நட்சத்திர மண்டலம். இவ்வளவு மண்டலங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அவற்றிற்கும் மேலே உயர்ந்து நிற்பது ஒன்று உண்டு. அதைத்தானே நாம் வானம் என்று கூறுகிறோம்? எட்ட எட்ட எட்டாமல் உயர்ந்து நிற்கிறது அல்லவா அது? அந்த வானத்தைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்றை நான் அறிவேன். அதுதான் என் காதலரோடு நான் கொண்ட நட்பு; எங்கள் தெய்விகக் காதல். வானத்தையும்விட உயர்ந்தது அது. வானம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு ஓங்கி நிற்கிறது என்று சொல்வார்கள். எங்கள் காதலும் அப்படியே, எங்கள் நன்மைகள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி மேல் ஓங்கி நிற்கிறது. நன்மைகள் மாத்திரமா? நீ இவ்வளவு நேரம் சொன்னாயே, அந்தத் துன்பங்களைக்கூட அடக்கிக்கொண்டு, அவற்றிற்கு மேலே உயர்ந்து நிற்கிறது அந்த இணையற்ற காதல். நிலத்தினும் பெரிய காதல், வானினும் உயர்ந்த காதல் என்று சொல்வதனால் நான் அதன் இயல்பு முழுவதையும் சொல்லிவிடவில்லை. அது சொல்ல முடியாத தொன்று.

"இது உறுதியானதா என்று நீ ஐயுற்றாய். எங்கள் நட்பு ஆழ்ந்தது என்று சொன்னால் உன்னால் அறிந்துகொள்ள முடியாது. ஆழமானது என்று சொல்பவற்றுள் மிகச் சிறந்தது கடல். அதனால்தான் அதற்கு ஆழி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதைவிட ஆழமான பொருள் உலகத்தில் இல்லை. அத்தனை ஆழம் இருப்பதனால்தான் அது வற்றவில்லை. உலகில் மழை பெய்யாமல் ஆறுகள்

வற்றினாலும் கடல் நீரின் அளவு குறைவதில்லை. அது ஆழமாக இருப்பதனால்தான் உலகுக்கே நீர் கிடைக் கிறது. மழை பெய்கிறது. எங்கள் காதல் கடலைவிட ஆழமானது; உறுதியானது. மழை பெய்த நீர் குழி யில் தேங்கி மறுநாள் உலர்ந்துவிடுவது போன்ற தன்று. பிறவிதோறும் அமைந்த தொடர்பு இது. இதன் ஆழத்தை, எத்தனை காலமாக இந்த நட்பு ஏற் பட்டது என்ற அளவை, அறிய எங்களாலே முடியாது. தெய்வத்துக்குத்தான் தெரியும். கடல் நீரினும் ஆழம் மிக்கது இக் காதல் என்று சொல்வதற்கு மேலே எனக் குச் சொல்லத் தெரியவில்லையே! பெரியதும் உயர்ந்த தும் ஆழ்ந்ததுமாகிய இந்த நட்பின் சிறப்பை நீ தேர்ந்து உணரவில்லை.''

இப்படிக் காதலின் பெருமையைச் சொல்லிக் கொண்டே வந்தவள், அதன் இனிமையைச் சொல்ல வந்தாள். அதற்கு, உவமை அகப்படவில்லை. காத லால் பெறும் இன்பத்தை வெளிப்படையாகச் சொல்ல வும் நாணினாள். ஆனால் காதலின் உயர்வு ஆழம் முதலியவற்றைக் காட்டிலும் அதன் இனிமைதானே தலைமையானது? காதலின் உயர்வு அதைப் போற்றச் செய்கிறது. அதன் இனிமைதானே அவனைப் பிரியா மல் இருக்கும்படி நாடச் செய்கிறது? ஆதலின் அந்த இனிமையைச் சொல்ல எண்ணினாள். வெளிப்படை யாகச் சொல்ல மனம் வரவில்லை. குறிப்பாகச் சொல்ல நினைக்கிறாள்.

தன் காதலனுடைய நாட்டில் உள்ள இனிய பொருள் ஒன்று அவள் நினைவுக்கு வருகிறது. அதை அவள் நேரே பார்த்திராவிட்டாலும் தன் காதலனும்

மற்றவர்களும் சொல்லிக் கேட்டிருக்கிருள். அந்த இனிய பொருள் என்ன தெரியுமா? தேன்; பெருந் தேன்; குறிஞ்சித் தேன்.

நிலப் பரப்பைக் குறிஞ்சி, பாலே, முல்லே, மருதம், நெய்தல் என்று ஐந்து வகைகளாகத் தமிழ் மக்கள் பகுத்தார்கள். இந்த ஐந்திலும் முதல் நிலம் குறிஞ்சி; உயர்ந்த நிலம். மலேயும் மலேசார்ந்த இடமும் குறிஞ்சி யாகும். குறிஞ்சி நிலத்துக்கு மலே சம்பந்தமான பெயரை வைக்கவில்லே. மலரால் பெயர் வைத்தனர். ஐந்து நிலங்களுக்குமே மலரால் பெயர்கள் அமைந் திருக்கின்றன. குறிஞ்சிக்கும் குறிஞ்சிப் பூவால் பெயர் ஏற்பட்டது.

குறிஞ்சிப் பூ நீல நிறம் உடையது. அது ஒவ் வோர் ஆண்டும் பூப்பது இல்லே. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அது பூக்கும். மல ரும் பருவத்தில் மலேப் பகுதிகள் முழுவதும் ஒரே குறிஞ்சி மலர்க் காடாக இருக்கும். நீலகிரியில் இந்தக் குறிஞ்சி மலர்வது உண்டு. நீல மலராகிய குறிஞ்சி எங்கும் மலர்ந்து காணப் பெற்றதனுல்தான் அதற்கு நீலகிரி என்ற பெயர் வந்தது. நீலகிரியில் வாழும் பழங்குடி மக்களாகிய தொதுவர்கள் குறிஞ்சி மலர் பூக்கும் பருவத்தை நன்கு நினேவில் வைத்துக் கொண்டிருப்பார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் என் பது இயற்கையிலே அமைந்த ஒரு காலவரையறை. வியாழன் ஒருமுறை பன்னிரண்டு ராசிகளேயும் சுற்றி வரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. மகாமகம் என்ற திருவிழாப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. அந்த விழாவில் அமையும் கோள்

களின் நிலை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் காணப்பெறும்.

தமிழ் நாட்டில் 'ஒரு மாமாங்கம்' என்று பேச்சு வழக்கில் பன்னிரண்டு வருஷ காலத்தைக் குறிக்கும் வழக்கம் இருக்கிறது. சில கிழவர்கள், "நான் ஏழு மாமாங்கம் கண்டவனப்பா!" என்று தம்முடைய முது மையை எடுத்துச் சொல்வார்கள். அது போலவே நீலகிரியில் உள்ள தொதுவர்கள் தங்கள் பிராயக் கணக்கைக் குறிஞ்சி மலரைக் கொண்டு கணக்கிடுவார் கள்; குறிஞ்சி மலரும் பருவம் இத்தனை கண்டவன் என்று சொல்வார்களாம்.

குறிஞ்சி மலரில் தேன் மிகுதியாக இருக்கும். குறிஞ்சி மலரும் பருவத்தில் வண்டுகளுக்குக் கொண் டாட்டம். எங்கே பார்த்தாலும் வண்டுகள் அக்காலத் தில் பெரிய பெரிய தேன் கூடுகளைக் கட்டும். குறிஞ் சித் தேன் அருமையானது; மிகுதியானது; சிறந்தது.

இத்தகைய குறிஞ்சித் தேனைத் தலைவி நினைவுக் குக் கொண்டு வருகிறாள்.

"நம்முடைய ஊரிலும் தேன் அடைகளை நாம் பார்த்திருக்கிறோம். அதோ மரத்திலும் மலை முழைஞ் சிலும் வண்டுகள் தேனைக் கூட்டி வைத்திருக்கின் றன. மரத்திலே காணும் தேனடையிலும் மலையிலே காணும் தேன் அதிகம்; ஆனால் அந்தத் தேனிலும் குறிஞ்சி மலர்த் தேனை வண்டுகள் தொகுத்து வைத்த இறால் மிக மிகப் பெரியது. என்னுடைய காதலருடைய நாட்டில் குறிஞ்சித் தேன் மிகுதியாக உண்டு. குறிஞ் சிப் பூ மலரும் பருவத்தில் மலைச் சாரலெல்லாம் நீல மலர்க் கடல்தான். எங்கும் குறிஞ்சி மலர் மயம்.

கரிய கொம்புகளையுடைய குறிஞ்சியிலே மலர்கள் மலர்ந்து வண்டினங்களை வா வா என்று அழைக்கும். தேன் எங்கே எங்கே என்று தேடும் வண்டுகள் குறிஞ்சி மலர் இதழ் திறந்து அழைக்கும் அழைப்புக் காகவா காத்திருக்கும்? அது மலரும் பருவத்தை எதிர் நோக்கி வந்து காத்துக் கிடக்கும். வேறு எங்கும் காணுத தேன் அது; எந்த மலரிலும் கிடைக் காத பெரிய தேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கிடைக்கும். அந்தத் தேனை ஆவலுடன் மொண்டு கொண்டு சென்று மலை முழைஞ்சுகளிலும் பாறைகளிலும் பெரிய பெரிய தேனடைகளை வைக்கும். ஆ! என்ன இனிமையான தேன் அது! கருங்கோலையுடைய குறிஞ்சிப் பூவைக் கொண்டு இழைத்த பெருந் தேன் அல்லவா அது?"

இப்போது தலைவி வாயினுல் குறிஞ்சித் தேனைப் பற்றி வருணித்தாலும் அவள் மனத்தில் தேனின் நினைவு இல்லை. தலைவனுடைய காதலால் பெற்ற இன்பத்தை அவள் எண்ணுகிருள். உள்ளத்தினூடே உணர்ந்த அந்த இன்பத்தைச் சொல்ல முடியவில்லை; சொல்லவும் நாணுகிருள். சொல்ல வேண்டும் என்ற ஆர்வமும் எழுகிறது. ஆகவே குறிஞ்சித் தேனை, தன் னுடைய காதலனுடைய நாட்டிலே உண்டாகும் குறிஞ்சிப் பெருந்தேனைச் சிறப்பித்துச் சொல்லும் போதே, அவள் தான் பெற்ற இன்பத்தைப் பற்றியே அப்படிச் சொல்வதாக நினைத்துக் கொள்ளு கிருள்.

"அப்படி வண்டுகள் குறிஞ்சிப் பூக்களில் உள்ள தேனைத் தேர்ந்து தொகுத்துப் பெருந் தேன்

இழைக்கும் நாட்டை உடையவர் அவர். இனியதிலும் இனிய பொருள் தம் நாட்டிலே எங்கும் இருக்கப் பெற்றவர். அவர் நாட்டை நினைக்கும்போதே இனிக்கிறது.”

‘ஆம்! அந்த நாட்டை நினைக்கும்போது மாத்திரமா ? அந்த நாடனை நினைக்கும்போதுகூட; அப்போதுதான் மிக மிக இனிக்கிறது’ என்று தோழி மனத்துக்குள் சொல்லிக் கொள்கிறாள். அவள் முகத்தில் புன்னகை தோன்றுகிறது.

தலைவி அந்தப் புன்னகையைப் பார்த்தாள். தான் சொன்னதைத் தோழி உணர்ந்து கொண்டாள் என்று தெரிந்து நாணி முகம் கவிழ்ந்தாள்.

“அத்தகைய நாடனோடு நான் செய்த நட்பு நிலத்தைக் காட்டிலும் பெரியது; வானைக் காட்டிலும் உயர்ந்தது; கடலைக் காட்டிலும் ஆழமானது. இதை உன்னால் உணர முடிகிறதா?” என்று கேட்டு நிறுத்தினாள் தலைவி. “நன்றாக உணர முடிகிறது. அன்றியும் அது குறிஞ்சித் தேனைவிட இனிமையானது என்பதையும் தெரிந்துகொண்டேன்” என்று கூறிச் சிரித்தாள் தோழி. அந்தச் சிரிப்புத் தலைவிக்கு மாத்திரம் நாணத்தை உண்டாக்கவில்லை; மறைவாகப் புறத்தே ஒரு பக்கத்திலே நின்றுகொண்டு இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த தலைவன் முகத்தில் புன்னகையையும் உள்ளத்தில் பெருமிதத்தையும் மனத்தில் உறுதியையும் உண்டாக்கிற்று. ‘இனி இவளை மணந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்’ என்பதுதான் அந்த உறுதி.

தலைவியின் கூற்றாக அமைந்திருக்கிறது பாட்டு.

*நிலத்தினும் பெரிதே ; வானினும் உயர்ந்தன்று ;*
*நீரினும் ஆரள வின்றே ; சாரற்*
*கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே !*

★ *மலைச் சாரல்களில் உள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சியின் மலர்களைக் கொண்டு (வண்டுகள்) பெரிய தேனைக் கூட்டுகின்ற மலை நாடனோடு (நான் செய்த) நட்பு, நிலத்தைக் காட்டிலும் அகலமானது; வானைக் காட்டிலும் உயர்ந்தது; கடல் நீரைக் காட்டிலும் (அளத்தற்கு) அரிய ஆழமாகிய அளவை யுடையது.*

*நீரைச் சொன்னமையால் அளவு என்றது ஆழத்தைக் குறித்தது. உயர்ந்தன்று - உயர்ந்தது. அரு அளவு - ஆரளவு; அளத்தற்கு அரிய ஆழம் என்பது பொருள். அளவின்று - அளவினை யுடையது. நாடன் என்பது குறிஞ்சி நிலத் தலைவனைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று.* ★

தொல்காப்பியத்துக்கு உரை வகுத்த பேராசிரியர் இந்தப் பாட்டைத் தம் உரையில் ஓரிடத்தில் உதாரணமாகக் காட்டுகிறார் (மெய்ப்பாட்டியல், 7.) அங்கே இந்தப் பாட்டுக்கு உரை செய்வதுபோலச் சிலவற்றை எழுதியிருக்கிறார். 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந் தேன் இழைத்தாற் போல, வழிமுறையாற் பெருகற்பாலதாகிய நட்பு, மற்று அவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தினது அகலம் போலவும், விசும்பின் ஓக்கம் (உயர்வு) போலவும் கடலின் ஆழம் போலவும் ஒருகாலே பெருகிற்று' என்று எழுதியுள்ளார்.

துறை : தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்த வழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

இயற்பட மொழிவதாவது, அவனுடைய இயல்பு பொருத்தமானது, குறை கூறுவதற் குரியதன்று என்று சொல்வது. தோழி இன்னும் அவன் மணம் செய்து கொள்ளவில்லையே என்ற நினைவினால் தலைவனைக் குறை கூறியபோது, அவனுடைய நட்பின் பெருமையைக் கூறிக் குறை காணாமற் செய்தாள் தலைவி.

இது குறுந்தொகையில் மூன்றாவது பாட்டு.

இதனை இயற்றியவர் தேவகுலத்தார் என்னும் புலவர். தேவகுலம் என்பது இறைவன் திருக்கோயிலுக்குப் பெயர். இப் புலவர் ஏதேனும் கோயிலோடு தொடர்புடையவராக இருத்தல் கூடும்.

# அருளும் அன்பும்

பொருள் ஈட்டும் பொருட்டுத் தலைவன் வேற்றூருக்குச் செல்ல நினைத்தான். மணம் புரிந்து கொண்ட பின் ஒரு நாளேனும் பிரிவின்றித் தன் காதலியுடன் வாழ்ந்து வருகிறான் அவன். இல் வாழ்விலே இணையற்ற இன்பம் கண்டாலும், அந்த இன்பம் நெடுங்காலம் இருக்க வேண்டும் அல்லவா? கையில் போதிய பொருள் இருந்தால் அச்சமின்றி இல்லற வாழ்வை நடத்தலாம்; சோர்வின்றி வாழலாம். ஆகவே பொருள் தேடும் பொருட்டு வேற்றூர் செல்ல கொண்டான்.

பொருள் தேடுவதற்கென்று திட்டமிட்டுச் செல்லும்போது ஒரு நாள் இரு நாள் மட்டும் இருந்து, ஏதோ கிடைத்தது போதும் என்று வந்துவிடலாமா? அப்படிக் கொண்டுவரும் பொருள் எத்தனை காலத்துக்குப் பயன்படும்? 'போகிறதுதான் போகிறோம். நிரம்பிய பொருளை ஈட்டிக்கொண்டு வரவேண்டும். அதற்கு ஏற்றபடி சில காலம் நாம் வேற்றூரில் இருக்கத்தான் வேண்டும்' என்று அவன் எண்ணினான். ஆனால் அவ்வளவு காலமும் தன்னைத் தன் காதலி பிரிந்து அமைதியாக வாழ்வாளா என்ற ஐயம் உண்டாயிற்று. அவளுடைய உயிர்த் தோழி துணைக்கு இருப்பதால் அவள் தக்க வண்ணம் ஆறுதல் கூறித் தேற்றுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

ஆனால் இப்போது ஒரு பெரிய சங்கடம் முன் நின்றது. " நான் போய்விட்டு வருகிறேன் " என்று காதலியிடம் சொல்ல வேண்டுமே ! அவள் அப்போது படும் துன்பத்தைக் கண் கொண்டு பார்க்க முடியாதே!

பொருள் தேடத் தான் செல்ல இருப்பதைத் தோழியின் மூலமாக உணர்த்தலாம் என்று முடிவு கட்டினான். அவளிடம் தன் கருத்தைக் கூறி, எப்படி யாவது தலைவியின் உடம்பாட்டைப் பெற வகை செய்ய வேண்டுமென்று வேண்டினான்.

தோழி முதலில் தியங்கினாலும் பொருள் அவசியம் என்பதை உணர்ந்து ஒருவாறு, தலைவன் பிரியப் போவதைச் சொல்வதாக ஏற்றுக் கொண்டாள். தலைவியை அணுகினாள்.

★

தோழி : தோழி, இறைவனுடைய திருவருளால் உங்கள் இல்லறம் இனிது நடைபெறுகிறது. இதை அறிந்து ஊரில் உள்ளவர்கள் யாவரும் பாராட்டுகிறார்கள்.

தலைவி : யாரைப் பாராட்டுகிறார்கள் ?

தோழி : உன்னையும் உன் காதலரையுந்தான்.

தலைவி : என்னைப் பாராட்டுவதற்குப் பொருள் இல்லை. நான் என்ன செய்தேன் ? எனக்கு ஆசைப்படத் தெரியும். என் ஆசையை நிறைவேற்றினவர் யாரோ அவரைத்தான் பாராட்ட வேண்டும். இல்லறம் சிறப்பாக நடப்பது எம்பிரானுடைய முயற்சியினாலே யன்றி என்னால் அன்று.

தோழி : அது உண்மைதான். உன் காதலர் நெடு நாளாகவே இல்லற வாழ்வை இப்படி நடத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்க வேண்டும்.

தலைவி : அதனை நீ எப்படி உணர்ந்தாய்?

தோழி : இல்வாழ்வுக்கு வேண்டிய பொருள்களையெல் லாம் நிரப்பி வைத்திருக்கிறார். உன் மனம் கோணு மல் நடக்கிறார். களவுக் காலத்தில் பிறர் அறியாத படி வந்து உன்னைச் சந்தித்தபோதும் அவர் எவ் வளவோ தந்திரமாக வந்தார். அவருடைய கூரிய அறிவை அன்றே உணர்ந்தேன். இன்று பின்னும் நன்றாக உணர்கிறேன்.

தலைவி : ஆடவர் அறிவு உயர்ந்ததென்பதை இன்று தான் புதிதாக உணர்ந்தனையோ ?

தோழி : இப்போது புதிதாக உணர்ந்து கொண்ட செய்தி ஒன்று உண்டு. அதன் பின்னர் அவருடைய பேரறிவை நன்கு உணர்ந்து வியந்தேன். அவரு டைய தீர்க்க தரிசனம் புலனாயிற்று.

தலைவி : தீர்க்க தரிசனமா ? அது என்ன ?

தோழி : பின்னால் வருவனவற்றை முன் கூட்டியே அறிவதும், அப்படி அறிந்ததற்கேற்பச் செயல் செய்வதும் எல்லோரிடமும் காண இயலாத பண்பு கள். மகிழ்ச்சியாக இருக்கும்போது, உள்ள பொருளையெல்லாம் செலவழித்து விட்டு, பின் கையிலே பொருள் இல்லாமற் போனால் வாடுவது மடமையுடையோர் செயல். அறிவுடையாரோ பின் வருவனவற்றை முன் அறிந்து அதற்கு ஏற்ற படி வேண்டிய பொருள்களைத் தேடிச் சேமித்து வைத்துக் கொள்வர்.

தலைவி : அது உண்மைதான்.

தோழி : நம்முடைய தலைவர் அறிவை என்னவென்று சொல்வேன் ! குந்தித் தின்றால் குன்றும் மாளும் என்று சொல்வார்கள். இப்போது எவ்வளவுதான் மிகுதியாகப் பொருள் இருந்தாலும் இது ஒரு காலத்தில் செலவழிந்துவிடும் என்றும், அப்படிச் செலவான காலத்தில் மீட்டும் பொருளை ஈட்டும் வன்மையும் செவ்வியும் இருக்கும் என்பது நிச்சயம் அன்று என்றும் அவர் நினைக்கிறார். ஆகையால் இப்பொழுதே இன்னும் நிறையப் பொருளைச் சேமித்து வைக்க வேண்டும் என்று கருதுகிறார். வருமுன் காக்கும் அறிவுடையவராதலின் பொருள் தேடும் முயற்சியிலே அவர் எண்ணம் இப்போது செல்கிறது.

தலைவி : என்ன ! பொருள் தேட வேண்டுமா ? இங்கிருந்தபடியேதானே?

தோழி : இல்லை, இல்லை. இங்கே எத்தனை பொருள் கிடைக்கப் போகிறது? சில காலம் வேற்று நாட்டுக்குச் சென்று பொருளைத் தேடிக் கொண்டுவந்து சேர்த்துவிட்டால் அப்புறம் கவலையின்றி வாழலாம்.

தலைவி : வேற்று நாட்டுக்கா போக வேண்டும் ? அப்படியானால் என்னையும் அழைத்துச் செல்வாரா ?

தோழி : என்ன அறியாமை உனக்கு ? ஆடவர்கள் பொருள் ஈட்டச் சென்றால் நாமும் உடன் போக முடியுமா ? அவர் போய் விரைவில் வந்துவிடுவார்.

தலைவி: அறிவுடையவர்கள் இனிமேல் வருவனவற்றை ஆராய்வார்கள் என்று சொல்கிறாயே. இனிமேல்

என்று சொல்வது அடுத்தபடி நிகழும் எல்லாவற்றையுந் தானே ?

தோழி : ஆம்.

தலைவி : பொருளுக்காகச் செல்பவர் நம்மைப் பிரிந்து செல்வதனால் நமக்கு உண்டாகும் துன்பத்தை அறியமாட்டாரோ ?

தோழி : வறுமையால் வரும் துன்பம் பின்னும் பெரிதல்லவா ?

தலைவி : என்னை வாழ்க்கைத் துணையாக அவர் ஏற்றுக் கொண்டார். துணை என்றால் எப்போதும் உடன் இருப்பவள் என்றுதானே பொருள் ?

தோழி : ஆம்.

தலைவி : பிரிவில்லாமல் துணைவியருடன் வாழ்வோர் அறிவுடையவரா ? துணைவியரைப் பிரிந்து செல்வோர் அறிவுடையவரா?

தோழி : அவர் பொருள் ஈட்டத்தானே செல்கிறார் ?

தலைவி : மனிதனுடைய வாழ்வில் வேண்டிய வசதிகளைப் பெறுவதற்குப் பொருள் உதவும் என்பது உண்மை. பொருள் வந்தால் லாபம் என்றும், போனால் நஷ்டமென்றும் சொல்வார்கள். பொருள் பற்றிய எண்ணம் உடையவர்கள் லாப நஷ்டம் பார்க்க வேண்டும் அல்லவா ?

தோழி : பொருள் பெற்று வருவது லாபந்தானே ?

தலைவி : கையிலே உள்ள பொருளை இழப்பது லாபமா, நஷ்டமா ?

தோழி : நஷ்டந்தான்.

தலைவி : இப்போது தலைவர் தம்மிடம் உள்ள பொருளை இழந்து விட்டு, தாமே துறந்து விட்டு, புதிய பொரு

ளைத் தேடிச் செல்லப் போகிருர் என்று சொல் கிருய்.

தோழி : அவர் ஒன்றையும் இழக்கவில்லையே !

தலைவி : ஆக்கத்தைக் கருதி முதலை இழக்கும் வியாபாரத்தை அறிவுடையோர் மேற்கொள்ளமாட்டார்கள்.

தோழி : ஆக்கம் எது? முதல் எது?

தலைவி : அவர் என்னை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிருர். நான் அவரைத் துணைவராகப் பெற்றிருக்கிறேன். நான் எப்போதும் பிரியவொண்ணுத துணைவி என்ற உண்மையை மறந்து என்னைத் துறந்து செல்லப் போகிருர். உண்மையை மறப்பது ஒரு நஷ்டம் அல்லவா ?

தோழி : உன் பெருமையை அவர் மறந்தா செல்கிருர்?

தலைவி : சற்றுப் பொறு ; முழுமையும் கேள். நான் அவருக்குத் துணைவியென்பதை அவர் மறந்து போவது கிடக்கட்டும். எனக்கு அவரே உயிர். அவரால் புரக்கப்படும் நிலையில் நான் இருக்கிறேன். தொடர்புடையவர்களிடத்தும் தம்மால் புரக்கப்படுபவர்களிடத்தும் இருக்கும் ஒட்டுணர்ச்சியை அன்பு என்று சொல்வார்கள். இதுகாறும் தலைவருக்கு என்னிடம் அன்பு இருந்தது என்று நினைத்தேன். அந்த அன்பை அவர் நீக்கிவிட்டால்தான் என்னைப் பிரிவதற்கு மனம் வரும். அன்பை இழந்து விடுவது லாபமா, நஷ்டமா ?

தோழி : அவர் அன்பு அவ்வளவு எளிதில் நீங்கி விடுவதா ?

தலைவி : என்னைத் துணைவி என்று எண்ணாமற் போனாலும் போகட்டும். தம்மை அண்டி வாழ்பவள் என்ற அன்பு இல்லாமற் போனாலும் போகட்டும். நான் ஒரு மெல்லியல். பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள். அவருடைய பிரிவால் நான் எத்தனை துன்பத்தை அடைவேன் என்பதை அவர் அறிய மாட்டாரா? ஒரு பெண் துன்பப்படும்படி செய்வது நல்லதா? எல்லோரிடத்தும் இரக்கம் உண்டாக்கும் பண்பை அருள் என்று சொல்வார்கள். அந்த அருளையும் அவர் இழந்து விட்டுப் புறப்படப் போகிறாரா?

தோழி : இது என்ன? மேலும் மேலும் அடுக்குகிறாயே!

தலைவி : வேறு உயிருக்குத் துன்பம் உண்டானால் இரங்கும் அருள் தன்மைதான் அறிவுடைமைக்குப் பயன். "அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின் நோய், தம் நோய்போற் போற்றாக் கடை" என்பது எவ்வளவு உண்மை! நான் உலகில் வாழும் ஓர் உயிர். அவர் பிரிவால் நான் நொந்து போவேன். என் துன்பத்தை நினைந்து இரக்கம் கொள்வதுதான் அறிவுக்கு அடையாளம். என் துன்பத்துக்கு இரங்காமல் இருப்பது அறிவாகுமா?

தோழி : அவர் இரக்கமற்றவர் என்றா சொல்கிறாய்?

தலைவி : அன்போடும் அருளோடும் வாராத பொருளை அறிவுடையவர் விரும்பமாட்டார்களாம். ஆனால் நம் தலைவரோ அன்பையும் அருளையும் நீக்கிவிட்டுத் துணைவியைத் துறந்து பொருளுக்காகப் பிரியப் போகிறார். நீ அவரை அறிவுடையவர், உரவோர் என்று சொல்கிறாய்; அவர் உரவோராகவே இருக்

கட்டும். அவர் வன்கண்மை உடையவரென்று நான் கருதுகிறேன். அவர் மனம் உரமுடையது; வன்மையை உடையது; இரக்கம் இல்லாத வன்மையை உடையது. அவர் அருளை நீக்கும் மனவுரம் பெற்றவர்; துணையைத் துறக்கும் உரவோர். அவரை அறிவுடையவர் என்கிருய். இத்தகைய மன வன்மை பெற்ற உரவோர், அறிவு படைத்த உரவோராகுல் அப்படியே உரவோராகட்டும். நாம் அறிவில்லாதவர்களாகவே இருப்போம். மடமையுடையோராக இருப்போம். மடந்தையே, நாம் மடம் உடையவர்களாகவே இருப்போமாக! லாப நஷ்டம் தெரியாத மடமையுடையோராக இருப்போம். அவர் அறிவுடையவராகவே இருக்கட்டும்.

தலைவியின் உள்ளத்திலே தோன்றிய வருத்தம் இவ்வாறு பொங்கி வருகிறது.

***அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து***
***பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்,***
***உரவோர் உரவோர் ஆக!***
***மடவம் ஆக, மடந்தை நாமே!***

★ மடந்தையே, (தம்மோடு தொடர்பு இல்லாதவர்களிடத்தும் செல்லும்) அருளையும், (தொடர்புடையவர்கள்பாற் செல்லும்) அன்பையும் போக்கி, தம் வாழ்க்கைத் துணைவியையும் விட்டுப் பொருளின் பொருட்டுப் பிரிந்து செல்பவர் அறிவுடையவராளுல், (அந்த) மன வன்மை உடையவர் அறிவுடையவராகவே இருக்கட்டும்! நாம் அறியாமையை உடையவர்களாகவே இருப்போமாக.

பொருள் வயின் - பொருளை ஈட்டும் பொருட்டு. உரவோர் — அறிவுடையவர், ஆற்றல் உடையவர். மடவம் - மடமையை உடையோம். ★

துறை: செலவு உணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

'பொருள் ஈட்டுவதற்காகத் தலைவன் செல்ல எண்ணுகிறானென்று அவனது பயணத்தைத் தெரிவித்த தோழியைப் பார்த்துத் தலைவி கூறியது' என்பது இதன் பொருள்.

அன்பையும் அருளையும் விட்ட பின்புதான் தலைவன் தன்னைப் பிரிய முடியும் என்று தலைவி கூறுகிறாள். இங்கே, சீதையின் கூற்றாகக் கம்பர் பாடும் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

சீதை அசோக வனத்தில் துயரமே வடிவாக இருந்தபோது அநுமன் வந்து இராமன் திருநாமத்தைச் சொல்லி அவளைக் காண்கிறான். சீதை தன் உள்ளத்திற் பொங்கி வரும் துயரத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறாள்; பல பல சொல்கிறாள்.

'இராமபிரான் என்னை உலகறிய மனைவியாக ஏற்றுக்கொண்டார். நான் இட்ட மணமாலையை அவர் தம் திரு மார்பில் ஏற்றுக்கொண்டார். அந்த ஆரம் தாழும் திரு மார்பையுடைய பிரானுக்கு இப்போது என்னிடம் பழைய அன்பு இருக்கிறதோ இல்லையோ யான் அறியேன். அன்பு இருந்தால் என்னை அவர் காப்பாற்ற வேண்டும். தம்மோடு தொடர்புடைய தாரம் என்ற நினைவை அவர் இப்போது ஒருகால் மறந்திருக்கலாம். நான் அவருக்கு ஏற்ற தாரம் அல்லளென்று எண்ணலாம். அதனால் அவருக்கு என்னிடம் அன்பு இல்லாமல் இருக்கலாம். அது போகட்டும் எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டும் கருணையுடையவர் அவர்; அருளாளர்; தயாநிதி. அந்தத் தயையை முன்னிட்டேனும் என்னைப் பாதுகாக்க

வேண்டும். அதுவும் இல்லையானால் அவர் ஆண்மை யுடையவர் என்பதையாவது நிலை நாட்டட்டும். தம் பொருளை வேறு ஒருவர் கைப்பற்ற, அதனை மீட்டும் பெற வழியில்லாத கோழை என்ற பழியை மேற்கொள் ளாமல் தம் வீரத்தையாவது காப்பாற்றிக் கொள்ளட் டும். இதை அநுமனே, நான் வேண்டினேன் என்று விண்ணப்பம் செய்வாயாக' என்று சொல்கிறாள்.

*ஆரந் தாழ்திரு மார்பற்கு அமைந்ததோர்*
*தாரந் தான்அல ளேனும், தயாளனும்*
*ஈரந் தான்அகத்து இல்லையென் றாலும், தன்*
*வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்.*

அன்பையும் அருளையும் சுட்டிப் பேசுகிறாள் சீதை.

முன்பு உள்ளது குறுந்தொகையில் இருபதாவது பாடல். இதைப் பாடியவர் கோப்பெருஞ் சோழன் என்னும் அரசன்.

# கொன்றைக் கானம்

வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கிறது. அடிக்கடி மழை பெய்கிறது. கார்காலம் வந்துவிட்டது. அதன் விளைவாக அந்தப் பருவத்திலே மலரும் மலர்கள் வளம்பெற்று மலர்கின்றன. கடம்ப மரம் மலர்ந்து நிற்கிறது. முல்லை பூத்துச் சொரிகிறது. சரம் சரமாகக் கொன்றை மலர் பூத்துத் தொங்குகிறது.

அவர்களுடைய வீடு முல்லை நிலத்திலே அமைந்திருக்கிறது. அடர்ந்து மரங்கள் வளர்ந்த இடம் அது. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலமென்று சொல்வார்கள் தமிழர்கள். முல்லை நிலம் கார்காலத்தில் மிகச் செழிப்பாக இருக்கும். மழை பெய்யப் பெய்ய மண் வளம்பெறும்; காடு கவின் பெறும்; மரம் செடி கொடிகள் மலர்ந்து மாண்பு பெறும்.

காதலனும் காதலியும் மணந்து இல்வாழ்வை நடத்தி வந்தார்கள். கடமையை நினைந்து காதலன் வேற்றூர் சென்றான். "நான் விரைவில் வந்துவிடுவேன்" என்று சொல்லிப் பிரிந்து சென்றான். "எப்பொழுது வருவீர்கள்? விரைவு என்பது ஒரு கணத்தையும் குறிக்கலாம்; ஒரு மாதத்தையும் குறிக்கலாம்" என்று கேட்டாள் தலைவி. "கார் காலம் வரும்போது நானும் வந்துவிடுவேன். மாரி வளம் சுரக்கும் காலத்தில் என் முயற்சியும் பழுத்துச் செல்வத்தைத் தர, நான் அதைப் பெற்று வருவேன்" என்றான் அவன். அவன் சொல் திறம்பாத சான்றோன் ஆதலின் காதலி அவன்

சொல்வதை நம்பி விடை கொடுத்தாள். அவன் புறப்பட்டான்.

இப்போது கார்காலம் வந்துவிட்டது. இன்னும் காதலன் வரவில்லை. நேரத்தைக் காட்டும் கடிகாரத்தை நாம் வைத்திருக்கிறோம். இறைவன் உலகத்தில் பொழுதையும் பருவத்தையும் காட்டும் இயற்கைக் கடிகாரங்களை வைத்திருக்கிறான். அவற்றிற்கு யாரும் சாவி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்த அந்தப் பொழுதில் மலர்கின்ற மலர்கள் நமக்குப் பொழுதைக் காட்டுகின்றன. காலையில் சூரியன் வெளிப்படத் தோன்றினாலும் மேகத்தில் மறைந்துவிட்டாலும் தாமரை மலர்ந்து விடுகிறது. மாலையில் முல்லை மலர்கிறது; குமுதம் மலர்கிறது. நள்ளிருளில் இருள்வாசி (இருவாட்சி) மலர்கிறது. அந்தியில் அந்தி மந்தாரை மலர்கிறது. இப்படியே ஒவ்வொரு போதிலும் மலரும் மலர்களைச் சங்ககாலப் புலவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். "பொழுதில் முகமலர் வுடையது பூவே" என்று இலக்கணச் சூத்திரம் ஒன்று சொல்கிறது. தனக்குரிய போதில் மலர்வதனால்தான் மலரும் பருவத்தி லுள்ள பேரரும்புக்குப் போது என்ற பெயர் வந்தது.

காலை, நண்பகல், மாலை முதலியவை சிறு பொழுதுகள். இவற்றைக் காட்டும் மலர்கள் இயற்கையில் அமைந்திருப்பது போலவே பெரும் பொழுதுகளாகிய ஆறு பருவங்களில் மலரும் மலர்களும் இருக்கின்றன. சங்கச் செய்யுட்களிலிருந்து இந்தச் செய்தியைத் தெரிந்துகொள்ளலாம்.*

* **கன்னித் தமிழ்** என்னும் நூலில் உள்ள 'போதும் பொழுதும்' என்ற கட்டுரையைக் காண்க.

முல்லை நிலத்தில் இருக்கும் இந்தக் காதலரின் வீட்டுக்கு எதிரே அழகிய காடு ஒன்று இருக்கிறது. கொன்றை மரங்கள் பல அக் கானத்தில் இருக்கின்றன. வேறு மரங்கள் சில இருந்தாலும் மிகுதியாகக் கொன்றையே இருந்தமையால் அங்குள்ளவர்கள் அதைக் கொன்றைக் கானம் என்று வழங்குவார்கள். இப்போது அந்தக் கொன்றைக் கானம் மலர்ந்து விளங்குகிறது. மஞ்சள் நிறம் பெற்ற கொன்றை மலர்களை நெடுந்தூரத்திலிருந்து பார்த்தால் எத்தனை அழகாகக் காட்சி அளிக்கின்றன! கதிரவனுடைய கதிர் அந்த மலர்த் தொகுதியின்மேல் வீசும்பொழுது பொன்னைப் போலப் பளபளக்கின்றன. செறிந்து தழைத்து நிற்கும் கொன்றை மரங்கள் அழகிய பெண்களைப் போல நிற்கின்றன. குறைவின்றி வாழும் பெண்களின் உடம்பு வளப்பமும் வனப்பும் பெற்று விளங்குவது போல அவை தோன்றுகின்றன. தலை நிறையக் கருகருவென்று செறிந்து அடர்ந்த கூந்தலையுடைய மடமகளைப்போல ஒவ்வொரு மரமும் இருக்கிறது. கரும் பச்சை நிறமுடைய தழைகள் அடர்ந்து செறிந்து மரத்தின் வளப்பத்தைக் காட்டுகின்றன. அவற்றின் ஊடே பொன்னிற மலர்கள் திகழ்கின்றன. கூந்தலினிடையே பொன்னரி மாலை முதலிய அணிகளை மகளிர் புனைந்துகொள்வது உண்டு. கருங் கூந்தலினிடையே அவை மின்னும். அப்படி இந்தத் தழைச் செறிவினூடே கொன்றை மலர்கள் மின்னுகின்றன. மலர் மலர்ந்தால் வண்டுகள் வந்து அவற்றை மொய்ப்பது இயற்கை அல்லவா? பொன்னிறம் பெற்ற அம் மலர்களில் நீலமணி வண்டுகள் வந்து படிகின்றன;

மொய்க்கின்றன. கொன்றைப் பூ நீண்ட கொத்தாகப் பூக்கும்; கொடிபோல நீண்ட இணரை (பூங்கொத்தை) உடையது கொன்றை மரம். வண்டு படும் படியாகத் ததைந்து (செறிந்து) மலர்ந்த கொடியிணர்கள் அவை. அவை இடையிடையே தழைச் செறிவினூடே தோன்றுகின்றன. பொன்னுற் செய்த அலங்காரமான இழைகளைக் கட்டிய மகளிரின் கூந்தலைப்போல அந்தக் காட்சி இருக்கிறது. மகளிர் கதுப்பைப் (கூந்தலைப்) போலத் தழைச் செறிவும், இழையைப் போலக் கொன்றையின் பூவும் தோற்றுகின்றன.

காதலிக்கு ஓர் உயிர்த் தோழி உண்டு. காதலியின் இன்ப துன்பங்களைத் தன்னுடையனவாகவே உணருகிறவள் அவள். 'கார் காலம் வந்தால் காதலர் வருவாரோ, வரமாட்டாரோ!' என்ற ஐயம் காதலிக்கு உண்டாவதற்கு முன் அவளுக்கு உண்டாகிவிடும். 'கார் காலம் வந்துவிடுமே! ஒருகால் அவர் வராவிட்டால் நம்முடைய தோழிக்குத் துன்பம் உண்டாகுமே. அவருடைய பிரிவினுல் உண்டாகும் வருத்தத்தை ஆற்றும் வகை யாது?' என்று அவள் அஞ்சுவாள். கார்காலம் வருவதற்கு முன்பே கவலை கொள்ளும் அவளுக்கு, வந்த பிறகு உண்டாகும் கலக்கத்தைக் கேட்க வேண்டுமா? அழகிய மகளிரைப் போலப் பூத்து நிற்கும் கொன்றைக் கானத்தைப் பார்க்கிருள். அந்த மலர்கள் அவள் கண்களை உறுத்துகின்றன. மழை பெய்து நிலம் குளிர, எங்கும் தண்மை நிலவுகிறது. அதைக் கண்ட அவளுக்கோ உள்ளம் குமுறி வெதும்புகிறது. வீட்டுக்கு முன்னுலே தோன்றும் கொன்றைக் கானம், தன் மலர்

களைக் காட்டி, "இதோ கார்காலம் வந்துவிட்டது; கார்காலம் வந்துவிட்டது" என்று பேசாத பேச்சினுல் சொல்வது போல இருக்கிறது. "இன்னும் அவர் வரவில்லையே!" என்று பரிகசிப்பது போலக் கூடத் தோன்றுகிறது. அந்தக் கானத்தைப் பார்க்கும் போதெல்லாம் தோழி பெருமூச்சு விடுகிருள். ஏங்குகிருள். உள்ளம் சாம்புகிருள். இவ்வளவும் தலைவி மனம் குழைவாளே என்ற நினைப்பிலே எழுபவை.

★

தூன் தோழி வாசலிற் போய் எதிர்தோன்றும் கொன்றைக் கானத்தைப் பார்க்கும்போதெல்லாம் நெடுமூச்செறிவதைத் தலைவி கவனித்தாள். கார்ப் பருவம் வந்துவிட்டதே என்பதை எண்ணி அவள் கவலைப்படுவதாகத் தெரிந்தது. தலைவனுடைய பிரிவு தலைவிக்குத் துன்பத்தை உண்டாக்கியது உண்மையே. ஆனுல் இல்வாழ்வில் ஆடவர்கள் தம் கடமையை நிறைவேற்ற வேற்றூர் செல்வது அவசியம் என்பதை அவள் உணர்ந்தவளாதலின் ஒருவாறு அந்தத் துன்பத்தை அடக்கி வைத்திருந்தாள். இருப்பினும் துன்பம் மிகுதியாகும்பொழுது அவளையும் அறியாது வெளிப்படும். அப்பொழுதெல்லாம் தோழி அவளுக்கு ஆறுதல் சொல்வாள். "இதோ இன்னும் சில நாட்களில் கார்காலம் வந்துவிடும். அப்போது அவர் வந்து விடுவார்" என்று சொல்லித் தேற்றி வந்தாள். கார்காலம் வரும் வரைக்கும், "கார்காலம் இன்னும் வரவில்லை; வந்தால் அவர் உடனே வந்துவிடுவார்" என்று ஆறுதல் கூறினவள், கார்காலம் வந்துவிட்ட

பிறகு என்ன சொல்லி ஆற்றுவது ? இதனால்தான் தோழி கவலைப்படுகிறாள் என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொண்டாள் தோழி.

ஆற்றிலே படகில் ஏறிப் போகிறோம். படகு வன்மையுடையதென்ற உறுதி இல்லை. காற்றும் வீசுகிறது. ஆற்றைக் கடக்குமட்டும், படகைச் செலுத்த வேண்டுமே என்ற கவலை இருக்கும். கரையை எப்போது அடைவோம் என்ற ஏக்கம் உண்டாகும். கரையைப் படகு அடைந்தவுடன் படகிலிருந்து இறங்க வேண்டியதுதான். 'படகிலிருந்து இறங்க வேண்டுமே!' என்று கவலைப்படலாமா? நிச்சயமாக இறங்கி விடலாம். அதில் ஒன்றும் இடையூறு இல்லை.

தலைவி கரையை அடைந்த படகில் இருப்பவளைப் போல இருந்தாள். கார்காலம் வருமட்டும் தலைவனது பிரிவினால் மிக்க துன்பத்தை அடைந்திருந்தாள். ஆனால் கார்காலம் வந்துவிட்ட தென்று உணர்ந்தவுடன் அவர் வந்துவிடுவார் என்ற உறுதியினால் அவள் துன்பம் நீங்கியிருந்தாள். தோழியோ, 'இதுகாறும் கார்ப் பருவம் வரும் வரும், அவர் வருவாரென்று ஆறுதல் சொன்னேன். இனி என்ன சொல்வேன்!' என்று அஞ்சினாள்.

தலைவி அவள் நிலையை ஊகித்து உணர்ந்தாள். தோழியை அணுகினாள். தான் கவலைப்படவில்லை என்பதைப் புலப்படுத்தத் தொடங்கினாள்.

"தோழி, கார்காலம் வந்துவிட்டதென்று நீ அஞ்சுகிறாய்போல் இருக்கிறது" என்றாள்.

தோழி தன் வருத்தத்தை மறைத்துக்கொண்டு, "அப்படி ஒன்றும் இல்லையே!" என்றாள்.

தலைவி : இதோ நம் வீட்டுக்கு முன்னுலே உள்ள கொன்றைக் கானத்தைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிருயே !

தோழி : அதன் அழகைப் பார்த்து மகிழ்ந்தேன்.

தலைவி : ஆம்; அழகாகவே இருக்கிறது. மரத்தில் மலர் மலர்ந்தால் எப்படியோ இந்த வண்டுகளுக்குத் தெரிந்து விடுகிறது. அவை மலர்களைத் தேடி வந்து வீழ்கின்றன. வண்டுகள் வீழும்படி தகைந்து மலர்ந்த கொடியிணர்களை இடையிலே பெற்றுத் தழைச் செறிவோடு கொன்றை மரங்கள் தோன்றுகின்றன. நானும் அவற்றின் அழகில் ஈடுபடுகிறேன். கொன்றைக் கானம் பொன்னுற் செய்த புனையிழையைக் கட்டிய மகளிரின் கதுப்பை (கூந்தலை)ப் போலத் தோன்றுகின்றது. இப்போதுதான் மலர்கள் மலர்ந்திருக்கின்றன. புதுப் பூங்கொன்றை இது. இந்தக் கொன்றைக் கானத்தைக் கண்டு நீ கவல்கின்ருய்.

தோழி : நீ எவ்வாறு..........?

தலைவி : நான் உன் பார்வையையும் நெடுமூச்சையும் கவனித்துத்தான் சொல்கிறேன். இந்தக் கொன்றைக் கானம் இப்போது கார்காலம் வந்துவிட்டதென்று உனக்குக் கூறுகின்றது. நீ அதை மெய்யென்று நம்புகிருய். ஆனுல் நான் நம்பவில்லை. கொன்றைக் கானம் இது கார்காலம் என்று கூறினும் யானே தேறேன். புதுப் பூங்கொன்றையாதலால் இன்னும் கார்காலம் வந்து கொலு வீற்றிருக்கவில்லை என்று நினைக்கிறேன். இந்தக் கொன்றை கூறுவதைத் தேருததற்குக் காரணம் என் காதலர்

கூறியதைத் தேறியதுதான். ஆம்; அவர் கார்காலத்தில் வந்துவிடுகிறேன் என்றார். அவர் பொய் வழங்காத மெய்ம்மையாளர். தலை போனாலும் பொய் வழங்கலர். அவர் சொன்னது தவறாது. ஆறறிவும் அன்பும் உயர் பண்பும் வாய்ந்த அவர் கூறியதைத் தெளிவேனா? இந்தக் கொன்றை மரம் சொல்வதைத் தெளிவேனா? அவர் வராமல் இருப்பதனால் இன்னும் கார்காலம் வந்து நிலைகொள்ளவில்லை என்று தான் கொள்கிறேன். அவர் வார்த்தையை உறுதியாக நம்புகிறவள் நான். ஆகவே இந்தப் புதுப் பூங்கொன்றைக் கானம் கார் எனக் கூறினும் யான் தேறேன். பழம் பெருங் காதலர் கூறியதையே தேறியிருக்கிறேன்.

தோழிக்கு உண்டான வியப்புக்கு எல்லையில்லை. 'நாம் இவளைத் தேற்றுவதுபோய் இவளல்லவா நம்மைத் தேற்றுகிறாள்? தன் காதலரிடத்தில் இவளுக்கு இருக்கும் அன்பும் நம்பிக்கையும் எவ்வளவு சிறந்தவை! அவை வாழ்க! இக் காதலர் வாழ்க!' என்று அவள் வாழ்த்துகிறாள்.

தலைவி கூறியது வருமாறு:

*வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு*
*பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்*
*கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்*
*கானம் கார்எனக் கூறினும்,*
*யானோ தேறேன்; அவர் பொய்வழங் கலரே.*

★ *வண்டுகள் (வந்து) வீழும்படியாகச் செறிந்து மலர்ந்த நீண்ட பூங்கொத்துகளை நடுநடுவே பெற்று, பொன்னாற் செய்த அலங்கரிப்பதற்குரிய அணிகளைக் கட்டிய மகளி*

ருடைய கூந்தலைப் போலத் தோன்றும் புதிய பூவையுடைய கொன்றை மரங்கள் அடர்ந்த காடு, ('இப்போது வந்தது) கார் காலம்' என்று புலப்படுத்தினாலும், நான் அதை (ஒப்புக்கொண்டு) தெளிய மாட்டேன்; (ஏனெனின்) என் காதலர் பொய்யைச் சொல்ல மாட்டார்.

படுதல் - மொய்த்தல். ததைந்த - செறிந்த, மலர்ந்த; இங்கே இரண்டு பொருளையும் கொள்வது சிறப்பு. கொடி - நீட்சி. இணர் - பூங்கொத்து. இடையிடுபு - இடையிட்டு; நடுவிலே இட்டு. புனை - அலங்கரிக்கும். இழை - ஆபரணம். கதுப்பின் - கூந்தலைப்போல. தேறேன் - தெளியமாட்டேன். அவர் - காதலர். வழங்கலர் — சொல்லமாட்டார். ★

துறை : பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, அவர் வரக் குறித்த பருவ வரவின்கண், 'இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு!' என்று தன்னுள்ளே கவன்றாட்கு, அவளது குறிப்பறிந்த தலைமகள், "கானம், அவர் வருங்காலத்தைக் காட்டிற்றாயினும், யான் இது கார்காலம் என்று தேறேன், அவர் பொய் கூறாராத லின்" எனத் தான் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.

[வருந்துணையும் - வருமட்டும். ஆற்றுவித்த - ஆறுதல் செய்த. கவன்றாட்கு - கவலைப்பட்டவளுக்கு. ஆற்றுவல் - ஆறுதல் பெற்றிருப்பேன். என்பது பட - என்னும் கருத்துத் தோன்ற.]

'கொன்றை மகளிரைப் போலத் தோற்றினும் மகளிர் அல்லவென்று தெளிவதுபோல, இது கார்ப் பருவமென்று தோற்றினும் அன்றென்று தெளிந்தேன் என்றபடி' என்று இப்பாட்டின் உரையில் மகாமகோ பாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் நயம் காட்டியிருக்கிறார்கள்.

குறுந்தொகையில் இருபத்தோராவது பாடல் இது. இந்தப் பாடலைப் பாடியவர் ஓதல் ஆந்தையார் என்னும் புலவர்.

# அகவல் மகள்

குறத்தி வந்துவிட்டாள். நரைத்த மயிர், பழுத்த உடல், சங்குமணி மாலை அணிந்த கழுத்து ஆகியவற்றோடு அவள் குறி பார்த்துச் சொல்வதற்காக வந்திருக்கிறாள். அவள் கையில் ஒரு முறமும் ஒரு கோலும் உள்ளன. அவளோடு தலைவியைப் பெற்ற தாயும் வளர்த்த செவிலித் தாயும் பேசுகிறார்கள்.

செவிலி: ஏ குறத்தி, நீ குறி பார்த்துச் சொல்வாயா?

குறத்தி: அதுதானே என் தொழில்?

செவிலி: என்ன என்ன குறி பார்த்துச் சொல்வாய்?

குறத்தி: நோய் நொடிக்குக் காரணத்தைச் சொல்வேன். தெய்வத்துக்கு அபசாரம் செய்து அதனால் கெடுதல் வந்திருக்கலாம். அதை ஆராய்ந்து எந்தத் தெய்வக் குற்றமென்று சொல்வேன். உடம்பிலுள்ள குறி, முகத்திலுள்ள குறி, கையிலுள்ள ரேகை இவற்றைப் பார்த்துப் பலன் சொல்வேன். உங்களுக்கு எத்தகைய குறி வேண்டும்?

செவிலி: எங்கள் பெண்ணுக்குச் சில காலமாக உடம்பு சரியில்லை. இளைத்து வருகிறது. என்ன நோயென்று தெரியவில்லை. அதற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

★

தோழியும் தலைவியும் உள்ளே மிக மெல்லிய குரலில் பேசிக்கொள்கிறார்கள்.

தலைவி: கேட்டாயா உன் தாய் சொல்வதை? எனக்கு ஏதோ நோய் வந்து விட்டதாமே!

தோழி: உன் நோய் இன்னதென்று அவர்கள் தெரிந்து கொள்ள இயலாமல் தடுமாறுகிறார்கள். இந்தக் கிழக் குறத்தி கண்டு சொல்லப் போகிறாளோ!

தலைவி: தோழி, ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடப் போகிறது. இவள் என் மெலிவுக்குரிய காரணத்தைத் தெளிந்து சொல்வாளா?

தோழி: பார்க்கலாமே: இவள் என்ன செய்யப் போகிறாளென்று நமக்குத் தெரியாமலா போகப் போகிறது?

★

வெளியே நற்றாய் குறத்தியிடம் பேசுகிறாள்.

நற்றாய்: இப்போது நீ எந்த மாதிரி குறி பார்க்கப் போகிறாய்?

குறத்தி: கட்டுப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

நற்றாய்: அதற்கு என்ன செய்ய வேண்டும்?

குறத்தி: சாமிக்குப் பூசை போட்டுவிட்டுப் பாட்டுப் பாடுவேன்; இதோ என் முறம் இருக்கிறதே, இதில் நெல்லை வைத்துக் குறி பார்ப்பேன். நெற் குறி பார்ப்பதைத்தான் கட்டுப் பார்ப்பது என்று சொல்வார்கள். உங்களுக்குத் தெரியாதா? எனக்குக் கட்டுவிச்சி என்ற பேர் வழங்குவதை நீங்கள் கேட்டதில்லையோ?

நற்றாய்: இதைப் போன்ற துன்பம் இதுவரையில் எங்களுக்கு வந்ததில்லை. நோய் வந்தால்தானே

வைத்தியரைத் தேடவேண்டும்? கட்டுப் பார்க்கிற தென்று யாரோ சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆனால் தெளிவாகத் தெரியாது. சரி, உன் பூசையைத் தொடங்கு.

குறத்தி பூசை போடத் தொடங்குகிறாள். தன் குல தெய்வத்தையும் மலையைக் காக்கும் தெய்வங்களையும் பாட்டுப் பாடி அழைக்கிறாள்.

உள்ளே தோழியும் தலைவியும் பேசிக்கொள்கிறார்கள்.

தலைவி : இதென்ன? ஊரிலுள்ள தெய்வங்களையெல்லாம் அழைக்கிறாளே! எத்தனை விதமாக அழைக்கிறாள்! இத்தனை தெய்வங்களில் ஒன்றாவது இவளுக்கு உண்மையைச் சொல்லுமா? என் உடல் மெலிவுக்கு இன்ன காரணம் என்று உணர்த்துமா?

தோழி : நீ ஏன் கவலைப்படுகிறாய்? அந்தத் தெய்வங்கள் உணர்த்தாவிட்டால் நான் இருக்கிறேன். எப்படியாவது தெரிவித்து விடுகிறேன். எத்தனை நாளைக்கு நீ உன் காதலருடன் ஒருவரும் அறியாமல் அளவளாவுவது? ஒவ்வொரு நாளும் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு அவரைச் சந்திக்க வேண்டியிருக்கிறதே!

தலைவி : அவர்கள் இந்தப் பைத்தியக்காரக் கிழக் குறத்தியைக் கூட்டிக்கொண்டு வந்து அமர்க்களப் படுத்துகிறார்களே! உன்னைக் கேட்டால் உண்மையைச் சொல்லுவாயே!

தோழி : இருக்கட்டும், இருக்கட்டும். வெளிப்படையாக உண்மையைச் சொல்லிவிட முடியுமா? சமயம் பார்த்துக் குறிப்பாகத் தெரிவிக்க வேண்டும். தெரி

விக்காமலா இருக்கப் போகிறேன்? அதோ அவள் பாடுகிறாளே!

தலைவி: ஆம்; என்ன என்னவோ பாடுகிறாள். மலைகளைப் பற்றியல்லவா பாடுகிறாள்?

தோழி: தான் அறிந்த மலைகளைப் பற்றிப் பாடுகிறாள். பச்சை மலை, பவள மலை, கொச்சி மலை, குடகு மலை என்று அடுக்குகிறாளே!

தலைவி: இரு; சற்றுக் கவனித்துக் கேட்கலாம். அருகே உள்ள நம் தலைவருடைய மலையையும் பாடுகிறாளே. அங்கேயும் இவள் போயிருக்கிறாளா? அப்படியானால் இவளுக்கு அவரைத் தெரிந்திருக்குமா?

தோழி: இவளுக்கு மலை தெரியும்; ஆறு தெரியும்; சுனை தெரியும்; சோலை தெரியும். குரங்கும் மயிலும் தெரியும். அங்குள்ள குறவாணர்களைத் தெரியும். நம் பெருமானைத் தெரிய வகையில்லை. எப்படியானால் என்ன? இவளுக்கு நம் தலைவருடைய மலை நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதன் வளத்தை அழகாகப் பாடுகிறாளே!

தலைவி: மிகவும் அழகான மலையென்றல்லவா பாடுகிறாள்? சுனை வறண்டு போகாத மலையாம்; தேனும் தினையும் செழிக்கும் மலையாம்; மானும் மயிலும் வளரும் மலையாம்; அழகும் வளப்பமும் உள்ள மலையாம். இத்தனை சிறந்த மலை நாடர் நம்முடைய தலைவர் என்று உணரும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! ஆனால்—

தோழி: ஆனால் என்ன? அதற்குள் ஏன் உன் முகத்தில் வாட்டம் படர்கிறது?

தலைவி : நம் தலைவர் மணத்துக்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்யவேண்டும். அவர் எனக்கு ஏற்றவ ரென்று உணர்ந்து நம்முடைய தாய் தந்தையர் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறகல்லவா எனக்கு அமைதி பிறக்கும் ?

தோழி : ஏற்றுக் கொண்டால்தான் நல்லது. ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாம் விடுவோமா? அறத்தோடு பொருந்திய வாழ்வு நமக்கு வேண்டும். நீ உன் காதலரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாய். அவரே உனக்குத் தெய்வம். வேறு யாரையும் நீ மனத்தாலும் நினைக்கப் போவதில்லை. ஆதலின் அவர் மணம் பேசுவதற்கு முதியோர்களை வரவிடுத் தால் இவர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவரே உன் காதலர் என்பதை நாம் இவர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். அப் போதுதான் அறத்தின் வழி நின்றவர்கள் ஆவோம். அறத்தின் சார்பில், கற்புநெறி வழுவாத நிலையில், நின்று உண்மையைத் தெரிவிக்க நான் துணிந்து விட்டேன். கற்புக்கு இழுக்கு வரும்படி வேறு யாரை யேனும் மணம் செய்விக்க இவர்கள் ஏற்பாடு செய் தாலும் செய்யலாம். அதற்கு முன்பே உண்மையை நாம் தெரிவித்துவிட வேண்டும்.

தலைவி : எப்படி நீ உண்மையைத் திடீரென்று தெரி விப்பாய் ?

தோழி : இது வரையில் அதற்குரிய செவ்வி கிடைக் காமல் இருந்தது. இப்போது கிடைத்துவிட்டது. அறத்தோடு நிற்பதற்கு இதுதான் தக்க தருணம்.

தலைவி : இப்போது வேறு மலைகளைப் பாடுகிறுள், அக

வல் மகளாகிய குறத்தி. பூசை வேளையில் கரடியை விட்டாற்போல் இந்தப் பாட்டுக் கிடையிலே நீ எப்படி உண்மையைத் தெரிவிக்க முடியும் ?

தோழி : பாட்டுப் பாடும் இந்தச் சந்தர்ப்பந்தான் ஏற்றது. இதோ இப்பொழுதே செல்கிறேன்.

★

குறத்தி பாடிக் கொண்டிருக்கிருள். அவள் தெய்வத்தை அகவி (அழைத்து)ப் பாடுவதால் அகவல்மகள் என்ற பெயரால் அவளை வழங்குவார்கள். அவள்பாடிக் கொண்டிருக்கும் இடத்துக்குத் தோழி போகிருள்.

தோழி : அகவல் மகளே, அகவல் மகளே! பல காலமாக நீ தெய்வங்களை அழைத்துப் பாடும் பழக்கம் உடையவள் என்று தெரிகிறது.

குறத்தி : ஆம் அம்மா. உனக்கு எப்படித் தெரியும் ?

தோழி : உன் நல்ல நீண்ட கூந்தலைப் பார்த்தாலே தெரிகிறதே! வெள்ளை வெளேரென்று கூந்தல் முழுவதுமே நரைத்திருக்கின்றதே! நீ கழுத்தில் அணிந்திருக்கிருயே சங்கு மணி மாலை; அது மாதிரி சுத்த வெள்ளையாக இருக்கிறது உன் நன்னெடுங் கூந்தல். உனக்கு எத்தனை வயசு ஆயிற்று ?

குறத்தி : எனக்கு ஆன வயசு எனக்கே நினைவில்லை அம்மா. நான் பல காலமாக மலைகளையெல்லாம் சுற்றி வருகிறேன்.

தோழி : உன் பாட்டே அதைத் தெரிவிக்கிறதே. நீ போன மலைகளைப்பற்றியெல்லாம் பாடுகிருயே! எத்தனையோ மலைகளைப் பார்த்திருக்கிருய்போல் இருக்கிறது. நன்ருகப் பாடுகிருயே! பாடு, பாடு; இன்னும்

உன் பாட்டையெல்லாம் பாடு. இப்போது ஒரு பாட்டை மறுபடியும் பாடு பார்க்கலாம்.

குறத்தி : பாடிக்கொண்டுதானே வருகிறேன் ?

தோழி : இந்தப் பாட்டு அல்ல. முன்பு ஒரு தடவை அவர் மலையைப் பாடினாயே; அந்தப் பாட்டை மறு படியும் பாடு. இன்னும் பாடுக பாட்டு; அவர் நன் னெடுங் குன்றம் பாடிய பாட்டு. என் தோழி அதைக் கேட்க வேண்டுமாம்.

நற்றாய் : (தனக்குள்) அவர் குன்றமா? அவர் யார்? அவர் குன்றத்தைப் பாட வேண்டுமாம்; என் மகள் கேட்க வேண்டுமாம் ; அவருக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு ?

செவிலி : (தனக்குள்) இதென்ன இந்தப் பெண் குறுக்கே வந்து பேசுகிறாளே; அவர் குன்றத் தைப் பாட வேண்டும் என்கிறாளே! அவர் யார்? (வெளிப்படையாகத் தோழியைப் பார்த்து) பெண்ணே, அவர் நன்னெடுங் குன்றம் என்றாயே! அவர் யார்? நாங்கள் அறியாதவர்போல் இருக் கிறதே!

தோழி : ஒரு நாள் என் தோழி தினைப்புனத்தில் காவல் காத்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு யானை வந்து புனத்தை அழிக்கத் தொடங்கியது; அதைப் பார்த்து இவள் அஞ்சி நடுங்கினாள். அப் போது அழகும் திறலும் உடைய மன்னன் ஒருவன் அந்த யானையின்மேல் வேல் எறிந்து ஓட்டி இவ ளைக் காப்பாற்றினான். அவனுடைய வீரத்தை என்னவென்று சொல்வது! அன்று முதல் இவள் அம் மன்னனுடைய நினைவாகவே இருக்கிறாள்.

இவளுடைய உடம்பு மெலிவு முதலியவற்றிற்குக் காரணம் அதுதான்.

★

இவ்வாறு தோழி உண்மையைக் கூறினாள். இப்படிக் கூறுவதை அறத்தொடு நிற்றல் என்று புலவர்கள் சொல்வார்கள். கற்பாகிய அறத்தோடு பொருந்த, காதலன் இன்னான் என்ற உண்மையைச் சொல்லுதல் ஆதலின், இப் பெயர் வந்தது. அறமென்பது கற்பையும் உண்மையையும் குறிக்கும். அகவல் மகள் பாடும்போது, 'அவர் நன்னெடுங் குன்றத்தை இன்னும் பாடுக' என்று தோழி சொன்னாள். 'அவர்' என்றது யாரை என்ற கேள்வியைச் செவிலித் தாய் கேட்டாள். அப்படிக் கேட்கும்படியாக அவள் குறத்தியிடம் பேசினாள். அவள் கூற்றாக இருப்பது பின் வரும் பாட்டு.

**அகவல் மகளே, அகவல் மகளே,**
**மனவுக்கோப்பு அன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவல் மகளே, பாடுக பாட்டே;**
**இன்னும் பாடுக, பாட்டே; அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.**

★ *தெய்வங்களை அழைத்துப் பாடும் குறப் பெண்ணாகிய அகவல் மகளே, அகவல் மகளே, சங்கு மணியைக் கோத்த கோவையைப் போன்ற வெள்ளையான நல்ல நீண்ட கூந்தலையுடைய அகவல் மகளே, நீ பாட்டுப் பாடுவாயாக! இன்னும் பாட்டுப் பாடுவாயாக! அவருடைய நல்ல உயர்ந்த மலையை முன்பு பாடினாயே, அந்தப் பாட்டைப் பாடுவாயாக!*

*அகவல் - அகவுதல்; அழைத்தல். மனவு - சங்கு மணி. கோப்பு - கோத்த மாலை. அன்ன - போன்ற. நன்னெடுங் கூந்*

*தல் என்றது பரிகாசத்துக்காகச் சொல்லியது. நெடுங்குன்றம் - உயரமான மலை.* ★

துறை : கட்டுக் காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது.

'குற மகளைக் கொண்டு நெற்குறியாகிய கட்டுப் பார்க்கத் தாயர் நின்றபோது தோழி உண்மையைக் கூறியது' என்பது இதன் பொருள். காணிய - காண.

இந்தப் பாடல் குறுந்தொகையில் 23-ஆவது பாட்டு. இதனைப் பாடியவர் ஔவையார்.

# அணில் ஆடும் முன்றில்

திருமணம் ஆகிவிட்டது. காதலனும் காதலியும் இல்வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். மணம் ஆவதற்கு முன் களவுக் காலத்தில் அவர்கள் சந்தித்து அளவளாவினார்கள். அப்போதெல்லாம் அவர்கள் உள்ளத்தில் அமைதி இல்லை. மறுமுறை சந்திப்பதற்கு இடையூறு நேராமல் இருக்க வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. சந்திக்கும் நேரம் சிறிதாகவும் பிரிந்து வாழும் நேரம் பெரிதாகவும் இருந்தன. அப்போதெல்லாம் காதலியின் மலர் போன்ற உள்ளம் பட்ட பாட்டைப் பஞ்சுதான் படுமோ!

கற்பிற் சிறந்த மங்கையாக இல்வாழ்க்கையில் ஒரு கணமும் பிரியாமல் தன் தலைவனுடன் வாழத் தலைப்பட்டாள் அவள். அவள் முன்பே மிக்க எழிலுடையவள்; அறிவுடையவள்; குண நலம் சிறந்தவள். அவளுடைய எழிலை அப்போது தலைவன் நன்குணர்ந்தான். அறிவும் குணங்களும் ஓரளவே புலப்பட்டன. இல்வாழ்க்கையில் ஈடுபட்டு மனைக்கு அரசியாக அவள் வாழும் இக்காலத்தில் ஒரு காலைக்கு ஒருகால் அவளுடைய அழகு பொலிவு பெறுகிறது. உள்ளத்தில் எந்த விதமான கவலையும் இல்லாமையால் அவள் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறாள். அதனால் உண்டான பூரிப்பு அவள் உடம்பிலும் தெரிகிறது. இப்போது

அவள் எழில் நிரம்பிய மோகினியாகத் திகழ்கிருள். இந்த அழகின் முழு விளக்கத்தைக் காதலன் உணர்ந் தானே, இல்லையோ; தோழி மிக நன்ருக உணர்ந் தாள். களவுக் காலத்தில் அவளுடைய முகமும் உடம் பும் ஒருகால் விளக்கம் பெற்றும் ஒருகால் வாட்டம் பெற்றும் இருப்பதைக் கவனித்திருக்கிருள். இயற்கை யெழில் நிரம்பியிருந்தும் களவுக் காதலுக்கு ஏதேனும் இடையூறு நிகழுமோ என்ற அச்சத்தால் அந்த எழி லிலே சில சமயங்களில் வாட்டம் தோன்றும். இப் போது அந்த மாறுதல் இல்லாமல் வர வர எழில் விளக்கத்தையே கண்டு வருகிருள் தோழி. 'இத்தனை அழகை இறைவன் எப்படிப் படைத்தான்!' என்று வியக்கிருள்.

அதுமட்டுமா ? சின்னப் பெண்ணுகச் சிற்றில் இழைத்தும் சிறு சோறு அட்டும் சில ஆண்டுகளுக்கு முன் தோழியோடு விளையாடிக் கொண்டிருந்தவள் தலைவி. அதிகமாகப் பேசாமல் சில சொற்களை மழலை யாகப் பேசி வந்தாள். இன்று மனையறத்தின் தனி யரசியாக இலங்கும் பொழுது, அவளுடைய அறி வும் குணங்களும் எவ்வளவு நன்ருக வெளிப்படு கின்றன !

ஆலம் விதையைக் காணும்போது அது மிகமிகச் சிறியதாகத் தோற்றுகிறது. அது முளைத்து மரமாகிப் பூவும் பழமுமாக நிற்கும்போது எத்தனை வியப்பாக இருக்கிறது! மரங்களிலெல்லாம் பெரிய மரமாக அப் போது அது விளங்குகிறது. அடிமரம் பருத்துக் கிளை பல கிளைத்துக் கோடும் வளாரும் இலையும் விரித்துப் பழம் பழுத்து விழுது விட்டுப் பல பறவை

யினங்கள் குடும்பங்களுடன் தன் மேலே தங்கவும், அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு மன்னர் தன் நிழலில் தங்கவும் ஏற்ற வகையில் நிற்கிறது. 'முன்பு இருந்த சின்னஞ் சிறிய விதையா இப்படி வளர்ந்துவிட்டது!' என்று ஆச்சரியப்படுகிறோம்.

தலைவியைப் பார்க்கப் பார்க்கத் தோழிக்கு உண்டான வியப்பும் அத்தகையதாகவே இருக்கிறது. எழில் நிறைந்து நிற்பதுபோலவே அறிவும் ஆற்றலும் பண்பும் அமைதியும் அவள்பால் நிரம்பியிருக்கின்றன. ஊராரெல்லாம் போற்றும்படி வாழ்கிறாள். தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவை அமைத்துக்கொண்டு வர வர மனையிலே செல்வம் மிகும்படியாகச் செய்கிறாள். விருந்தினர்களை உபசரித்து மகிழ்வூட்டுகிறாள். உற்றார் உறவினருக்கு வேண்டியவற்றைச் செய்து பாதுகாக்கிறாள். எந்த இடர்ப்பாடு வந்தாலும் மனம் கலங்காமல் முன்யோசனையுடன் நடந்து தைரியத்தோடு நின்று அந்த இடையூற்றை வெல்கிறாள். அவளோடு பழகினவர்களுக்கும் அவள் இயல்புகள் புதியனவாக இருக்கின்றன. 'இத்தனை சதுரப்பாடும் இவளிடம் எவ்வாறு அமைந்தன?' என்று பாராட்டுகிறார்கள். வயசு வந்த செவிலிகூட, 'இவ்வளவு சிறிய பெண்ணுக்கு இவ்வளவு பேரறிவு எங்கிருந்து வந்தது?' என்று நினைக்கிறாள்.

'இத்தனை மாட்சியும் இவளிடம் புதியனவாக வந்தனவா ? இல்லை ; ஆலம் விதையில் மரம் முழுவதும் கருவாக அடங்கிக் கிடந்தது போல இந்த உயர் நலங்கள் யாவும் இவள்பால் முன்பே அடங்கி அமைந்திருக்க வேண்டும்.'

இவ்வாறு நாளுக்கு நாள் தோழியின் வியப்பு மிகுதியாகிக் கொண்டே வந்தது.

★

அன்று ஊரில் ஏதோ திருவிழா. வெளியூர்களி லிருந்து ஊரில் உள்ளவர்களின் உற்றூர் உறவினர் கள் வந்திருந்தார்கள். ஊர் முழுவதும் ஒரே ஆர வாரம். மக்களின் ஆரவாரப் பேச்சும் ஆடலும் பாட லும், இசைக் கருவிகளின் இன்னொலியும் எங்கும் முழங்கின. ஊருக்கே புதிய அழகு ஒன்று வந்து விட்டது போல இருந்தது.

வீட்டுத் திண்ணைகளை மெழுகிச் சுண்ணம்புப் பட்டை செம்மண் பட்டை தீற்றினார்கள். வாசலில் அழகிய கோலங்களைப் போட்டார்கள். வீடுகளிலும் வீதிகளிலும் மாவிலை முதலியவற்றால் தோரணம் கட்டி னார்கள். வாழை, கமுகு, கூந்தற்பனை ஆகியவற்றைக் கொண்டுவந்து கட்டினார்கள். வீடுகள் யாவும் அலங் காரம் பெற்றுக் கல்யாணப் பெண்களைப் போலத் தோற்றின.

ஊரில் வாழும் மக்களைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? மகளிரும் மைந்தரும் குழந்தைகளும் புதிய ஆடைகளை அணிந்து அணிகள் பலவற்றைப் பூண்டு முகத்தில் புன்னகையும் வாயில் இன்னுரையும் தவழ உலவினார்கள். அவர்கள் வீட்டுக்குள் அது காறும் மறைந்திருந்த ஆடைகளும் அணிகளும் அலங் காரப் பொருள்களும் வெளி வந்து மக்கள் மேனியை யும் வீடுகளையும் அலங்கரித்தன. விருந்தினர் பலர் வந்தமையால் பரண்மேலே போட்டிருந்த பெரிய

பெரிய பாத்திரங்களெல்லாம் வெளிவந்தன. அத்தனை பேருக்கும் விருந்து சமைக்க வேண்டும் அல்லவா? சேமித்து வைத்திருந்த உணவுப் பண்டங்கள் இப் போது பயன்பட்டன. நாள்தோறும் உண்ணும் உணவு ஒரு வகை. திருவிழாவில் சமைக்கும் உணவு மிக மிகச் சிறந்தது; அறு சுவையும் பல் வகை யும் அமைந்தது. பருப்பும் பாயசமும், வடையும், இனிப்புப் பண்டமும், காயும், கறியுமாக விருந்துணவு விரிந்தது.

ஊரில் திருவிழா. அதனால் இத்தனை சிறப்புக்கள் நிகழ்ந்தன. இதற்கு முன் வெளிப்படாத அலங்காரங் களும் அரும் பண்டங்களும் உவகையும் உணவு வகை யும் இன்மொழியும் வெளிப்பட்டன.

விழாக் கொண்ட ஊரின் அழகைத் தோழி கவ னித்தாள். இத்தனை விரிவான அலங்காரப் பொருள் களும் பிற பண்டங்களும் இதற்குமுன் கண்ணில் பட வில்லை. விழா வந்தமையால் இவை வெளி வந்தன. நேற்று வரையில் அந்த ஊர் இருந்த நிலையை அவள் அறிவாள். நல்ல ஊர்தான். எல்லா வசதிகளும் உள்ளதுதான். ஆனாலும் இன்று ஊரின் தோற்றமே தனிக் களையோடு இருக்கிறது. எங்கே பார்த்தாலும் ஆரவாரமும் சுறுசுறுப்பும் வேகமும் இயக்கமும் அதிக மாக உள்ளன. மக்களின் தோற்றத்தில் தனி அழகு பொலிகிறது.

இவற்றை யெல்லாம் தோழி கண்டு கண்டு வியந்தாள். தலைவியைப் பார்த்துத் தன் வியப்பைத் தெரிவித்தாள். "இதற்கு முன் ஊர் இருந்த நிலைக்கும் இப்போது உள்ள நிலைக்கும் எத்தனை

வேறுபாடு! இவ்வளவு பண்டங்களும் வெளி வராமல் உள்ளே அடங்கியிருந்தன போலும்!" என்று கூறினாள்.

"விழாவின் பெருமையே அதுதானே? ஏனைய நாட்களில் இல்லாத இயக்கமும் மகிழ்ச்சியும் ஊக்கமும் ஊரார் எல்லோருக்கும் உண்டாக வேண்டும் என்று தானே நம் முன்னோர்கள் விழாவை அமைத்திருக் கிறார்கள்? ஒரு வீட்டில் திருமணம் நடந்தால் அந்த வீட்டைச் சார்ந்தோர் மாத்திரம் ஆடை யணி புனைந்து விருந்துண்டு மகிழ்வார்கள். திருவிழாவிலோ ஊரில் உள்ள அத்தனை பேரும் மகிழ்கிறார்கள். தங்கள் தங்கள் ஆற்றலுக்கு இயைந்த அளவு அலங்காரம் செய்து கொண்டும், விருந்தினரைப் பேணியும் இன் புறுகிறார்கள். நெடுந் தூரத்தில் உள்ள உறவினர்களை யும் அழைத்து அவர்களோடு பேசிப் பழகி மகிழ்ச்சி அடைகிறார்கள். கடவுளுக்குத் திருவிழா என்று சொல்கிறோம். எப்போதும் ஆனந்த வடிவாய் இருக்கும் அவருக்குப் புதிதாக மகிழ்ச்சி வர வேண்டும் என்பது இல்லை. கடவுளை நினைந்து விழாக் கொண்டாடினாலும், மக்கட் கூட்டம் முழுவதும் வேறுபாடின்றி, தனியுரிமை கொண்டாடாமல் யாவ ரும் கலந்துகொண்டு இன்புறுவதனால், மக்களுக் காகவே திருவிழா வருகின்றது என்று சொல்லவேண் டும். கடவுளின் பெயரைச் சொல்லி மக்கள் மகிழ் கிறார்கள். தனித் தனியே ஒவ்வொருவருக்கும் இருக் கும் கவலைகளை அன்றைக்கு ஓரளவு மறந்து யாவரும் ஊக்கம் பெறுகிறார்கள்" என்று தலைவி விழாவின் தத்துவத்தை எடுத்துரைத்தாள்.

தோழி தலைவியின் பேச்சிலே ஈடுபட்டாள். அவள் அறிவையும் அழகையும் வியந்தாள். அவள் உள்ளத்தே ஒரு புதிய எண்ணம் ஓடியது. 'நம்முடைய தலைவியின் அழகும் அறிவும் பண்பும் இப்போது மலர்ச்சி பெற்று நிறைந்திருப்பதைக் கண்டு வியந்தோம். இதுவும் ஒரு திருவிழாத்தானே? திருவிழாக் காலத்தில் ஊர் எவ்வளவு அழகாக இருக்கிறது! மறைந்திருந்த அழகுப் பொருள்களும் உணவுப் பொருள்களும் மற்றவையும் விழாவிலே வெளிப்படுகின்றன. தலைவியினிடம் இப்போது அழகும் அறிவும் பண்பும் தோன்றியதைப்போல அல்லவா அவை வெளியாகின்றன? நம் தலைவி இப்போது திருவிழா நடக்கும் ஊரைப்போல இருக்கிருள். மகிழ்ச்சியின் உச்சியிலே பொலிவுடன் விளங்குகிருள். இதற்குமுன் விழா இல்லாத ஊரைப் பார்த்தோம். இவள் முன்பு இருந்த நிலை அதைப் போன்றதாகத் தோன்றியது. இப்போது விழாவைப் பெற்ற ஊரைப் பார்க்கிறோம். இவள் எழிலும் அறிவும் பண்பும் பொங்க நிற்கிறதற்கு அதை உவமை கூறலாம். முன்பு காணுத சிறப்புக்களெல்லாம் இப்போது இரண்டிடங்களிலும் வெளிப்படுகின்றன.'

விழாக்கொண்ட ஊரையும் எழில் நிறைந்த தலைவியையும் பார்த்துப் பார்த்துத் தோழி ஆனந்தம் அடைந்தாள்.

*

அன்று வெளியூரிலிருந்து ஒரு விருந்தினர் வந்திருந்தார். தலைவியும் தலைவனும் அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தார்கள். அவர் தமிழ்நாட்டில்

உள்ள பல ஊர்களுக்கும் போய் வந்தவர். பல ஊர்ச் செய்திகளையும் அறிந்தவர். தாம் கண்ட கேட்ட செய்திகளை மிகவும் சுவையுடன் கூறுபவர். விருந் துணவை உண்டுவிட்டு அவர் பேசிக் கொண்டிருந் தார். வீட்டுத் தலைவனும் தலைவியும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தோழியும் கேட்டாள்.

"மிகவும் பரிதாபமான காட்சி ஒன்றை நான் பார்த்தேன். அதை நினைத்தாலே இரக்கம் உண்டாகி றது; உள்ளம் நைகிறது" என்று அவர் தொடங்கினர்.

"என்ன அது?" என்று கேட்டான் தலைவன்.

"மனிதனுடைய வாழ்வு எவ்வளவு நிலையற்றது என்பதை நினைக்கும்போது வருத்தம் உண்டாகிறது. பல மாதங்களுக்கு முன் நான் வடக்கே ஓரூருக்குப் போய்க் கொண்டிருந்தேன். போகும் வழியில் ஒரு சிறிய ஊர் இருந்தது. சில குடும்பங்கள் சின்னஞ் சிறிய வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்திருந்தன. அப்போது மழை பெய்த காலம். ஏதோ பயிர் செய்து உண்டு மகிழ்ச்சியோடு அந்தக் குடும்பங் களைச் சார்ந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த ஊர் வழியே நான் போனேன். மரமும் செடியு மாக வழியெல்லாம் நன்ருக இருந்தது. அந்த ஊரில் ஒரு நாள் தங்கி விட்டும் போனேன். நான் தங்கின வீட்டில் இருந்தவர்கள் மிக்க அன்போடு என்னை உபசரித்தார்கள்."

"அந்த ஊரில் இருந்த தங்கள் நண்பர் யாரே னும் இறந்துவிட்டார்களோ?"

"இருங்கள்; சொல்லுகிறேன். ஒரு நண்பரைப் பற்றி நான் சொல்ல வரவில்லை. ஊர் முழுவதையும்

பற்றியே சொல்லுகிறேன். சில நாட்களுக்கு முன் வடக்கேயிருந்து மீண்டு வந்தேன். மறுபடியும் நான் முன்பு போன வழியிலே வந்தேன். 'முன்பு தங்கினோமே, அந்த ஊரையும் பார்த்துவிட்டுப் போகலாம்' என்ற ஆசை எனக்கு இருந்தது. அந்த வழி எது வென்று தேடிக் கண்டு பிடித்தேன். அதன் வழியே வந்தேன். வர வர எனக்குச் சற்று மயக்கம் உண்டா யிற்று. நான் முன்பு போனபோது அங்கே கண்ட காட்சிகளில் ஒன்றேனும் இப்போது இல்லை. வழியில் இருமருங்கும் பச்சைப் பசேலென்று மரங்கள் முன்பு இருந்தன. இப்போது எல்லாம் கரிந்து போய் மொட்டை மரங்களும் முட்செடிகளுமாக இருந்தன. பல மாதங்களாக மழை இல்லாமையால் காடெல்லாம் அழிந்து ஒரே பாலை நிலமாகிவிட்டது. வழியிலே நடக்க முடியவே இல்லை. நடப்பதற்கு அரிய வழி யாக மாறிப் போயிருந்தது. ஒன்றிலே ஆசை வைத்து விட்டால், அது அரிதென்று தெரியத் தெரிய நம் முடைய ஆசை அதிகமாகிறதே ஒழியக் குறைவ தில்லை. எப்படியாவது முன்பு சென்று தங்கின ஊரை யும் வீட்டையும் பார்த்து விட்டுப் போகவேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று."

"ஊருக்குப் போய்ப் பார்க்க முடிந்ததா?"

"என்ன துன்பம் அடைந்தாலும் சரியென்று அந்த வழியே நடந்தேன். எளிதிலே போக முடிய வில்லை. கடைசியில் அந்த ஊர் இருந்த இடத்துக்கு வந்தேன். எத்தனை அழகிய குடிகள் அந்தச் சிற் றூரில் இருந்தார்கள்! அந்த அங்குடிச் சீறூர் இப்போது எப்படி இருந்தது தெரியுமா? ஒரு மனிதர் இல்லை.

மக்கள் யாரும் ஊரை விட்டுப் போய்விட்டார்கள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் நீரும் நிழலும் இல்லாத பாலை நிலமாகிவிட்டது அந்தப் பகுதி. அங்கே மக்கள் எப்படி வாழ முடியும்? வீடுகள் குட்டிச் சுவர்களாக நின்றன. வீட்டு முற்றங்களில் அன்று சின்னஞ் சிறு குழந்தைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இன்றோ அணில் ஓடியது. அதற்கு அங்கே என்ன கிடைக்கப் போகிறது? அங்கு வாழ்ந்திருந்த மக்கள் என்ன ஆனார்களோ! என்ன என்ன துன்பப் பட்டார்களோ! பல காலம் வாழ்ந் திருந்த இடத்தை விட்டுப் போவதென்பது எளிதா? அந்த அருவழியாகிய அத்தத்தில் நண்ணிய சீறூர், முன்பு அழகிய குடிகளுடன் இருந்த ஊர், இப்போது வெறும் மயானமாக இருந்தது. அணில் ஆடும் முன் றில் இருந்தது. வீடுகள் விளக்கமின்றி, மனிதர் நட மாட்டமின்றி இருந்தன. அதைப் பார்த்தபோது என் கண்களில் நீர் சுரந்தது. பாலை நிலத்தின் வெம் மையை எண்ணி மறுகினேன். 'முன்பு இருந்த நிலை என்ன! இப்போதுள்ள நிலை என்ன!' என்று நினைக் கும்போது இரங்காமல் என்ன செய்வது?"

விருந்தினர் இந்தச் செய்தியைச் சொல்லச் சொல்லக் கவனமாக யாவரும் கேட்டார்கள். பாலை நிலத்தைப் பார்த்திராத தலைவியும் தோழியும் மக்கள் போகிய அணிலாடு முன்றிலையுடைய வீடுகளை மனத்தாலே கற்பனை செய்து பார்த்தார்கள். அவர்களுக்கும் மனத் தில் வருத்தம் உண்டாயிற்று. தங்கள் உறவினர் களுக்குத் துயரம் வந்ததுபோல வருந்தினார்கள்.

★

தலைவன் ஏதோ வேலையாகச் சில காலம் வெளியூருக்குப் போயிருந்தான். அப்போது தலைவி அவனைப் பிரிந்து வாழ்ந்தாள். அவனுடைய பிரிவினால் அவளுக்குத் துயரம் உண்டாயிற்று. அதனால் அவள் உடம்பு மெலியத் தொடங்கியது. அவளுடைய பேச்சில் சுவை இல்லை. உடம்பில் துடி துடிப்பில்லை. நடையில் சுறுசுறுப்பில்லை. முகத்தில் ஒளி இல்லை.

தோழி இந்த நிலையைப் பார்த்தாள். 'முன்பு எப்படி இருந்தாள்! இவளைக் கண்டு வியந்தோமே! இப்போது ஏன் இப்படியாகி விட்டாள் ? நம்முடைய கண்ணே பட்டுவிட்டதோ?' என்று தானே கேட்டுக் கொண்டாள்.

'தலைவர் இன்னும் சில நாளில் வந்து விடுவார். அப்படி இருக்க, இவள் ஏன் இப்படி வாடுகிறாள் ?' என்று யோசித்தாள். அவளையே கேட்டுவிட்டாள்.

"நீ இல் வாழ்க்கை நடத்துவதைக் கண்டு எவ்வளவு இன்புற்றேன் ! உன் அழகும் அறிவும் பண்பும் சிறந்து விளங்குவதைக் கண்டு வியப்புற்றேனே ! ஆனால், என்ன இப்படித் திடீரென்று மாறிவிட்டாயே! உன் உடம்பிலே வாட்டமும் உள்ளத்திலே சோர்வும் வரக் காரணம் என்ன ?" என்று தோழி தலைவியைக் கேட்டாள்.

அவள் விடை சொன்னாள் :

"தோழி, நான் வேண்டுமென்று இந்த வாட்டத்தை வருவித்துக்கொள்ளவில்லை. என் காதலர் என் அருகில் இருந்தால் இயல்பாகவே என் உயிரும் உள்ளமும் உடம்பும் தளிர்த்துச் சிறக்கின்றன. அவர் அருகில் இல்லாமல் சென்றாலோ எல்லாம் மாறிவிடு

கின்றன. நாஞக நினைந்து செய்வதல்ல இது. காதலர் தம் கடமையைச் செய்வதற்கே சென்ருர், மீண்டு வருவாரென்பது எனக்குத் தெரியும். ஆயினும் என் உள்ளம் வாடுகிறதே! என் செய்வேன்! காதலர் என்னுழை இருந்தால் நான் நிச்சயமாக மகிழ்ச்சி அடைகிறேன். என்னைப் பார்த்து யாவரும் வியக்கும் வண்ணம் நான் பெரிதும் உவந்து விளக்கம் பெற்றிருக்கிறேன். அன்று, இவ்வூரில் திருவிழா வந்த போது இந்த ஊரைக் கண்டு நீ வியந்து நின்ருய் அல்லவா? காதலர் உழையில் இருந்தால் விழாவைக் கொண்ட ஊரைப் போல நான் பேருவகையுடன் விருப்பத்தோடு வாழ்வேன். இதில் யாதும் தடையில்லை."

"நானும் அன்று அப்படித்தான் நினைத்தேன். ஊரில் விழவுக் காட்சியும் உன் அழகுக் காட்சியும் ஒன்றையொன்று உவமையாகச் சொல்லும்படி இருந்தன."

"ஆனால் என் காதலர் என்னை அகலும் ஞான்றே நான் வருத்தம் அடைகிறேன். மற்ருெரு நாள், நம்முடைய வீட்டுக்கு வந்த விருந்தினர், அரிய வழியில் நண்ணிய சிறிய ஊரைப்பற்றிச் சொன்ஞரே, நினைவிருக்கிறதா? மக்கள் போய்விட்ட அணிலாடு முன்றிலைப் பற்றியும் அதையுடைய தனி வீட்டைப் பற்றியும் சொன்ஞர் அல்லவா? என் காதலர் என்னை விட்டு அகன்ருல், மக்கள் போய்விட்ட அணிலாடு முன்றிலையுடைய அந்த இல்லைப் போலப் பொலிவழிந்து புல்லென்று அலப்பேன் (வருந்துவேன்.) இது நாஞகச் செய்து கொள்வதல்ல. என் இயற்கை இது. எனக்குப்

பழைய வளப்பமும் ஊக்கமும் வரவேண்டுமானால் தலைவர் வரவேண்டும். அவர் வந்துவிட்டாரானால் அவை தாமே வந்து நிரம்பும்."

*காதலர் உழையர் ஆகப் பெரிதுஉவந்து*
*சாறுகொள் ஊரிற் புகல்வேன் மன்ற;*
*அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்*
*மக்கள் போகிய அணில்ஆடும் முன்றிற்*
*புலப்பில் போலப் புல்லென்று*
*அலப்பென், தோழி, அவர் அகன்ற ஞான்றே.*

★ தோழி, என்னுடைய காதலர் என் பக்கத்தில் இருந்தால் மிகவும் மகிழ்ந்து, திருவிழாவை யுடைய ஊர் விளக்கம் பெற்றிருப்பது போல விரும்பி மகிழ்வேன்; இது நிச்சயம். ஆனால் அவர் என்னைப் பிரிந்த காலத்தில், நடத்தற்கு அரிய வழியில் உள்ள, முன்பு அழகிய குடிகள் வாழ்ந்த சிறிய ஊரில், மக்கள் போய்விட்ட, அணில் ஓடி ஆடுகிற முற்றத்தையும் தனிமையையும் உடைய வீடு போலப் பொலிவழிந்து வருந்துவேன்.

உழையர் - பக்கத்தில் உள்ளவர்; உழை - பக்கம். பெரிது - மிகுதியாக. சாறு - விழா. ஊரின் - ஊரைப்போல. புகல்வேன் - விரும்பி மகிழ்வேன். மன்ற - நிச்சயமாக. அத்தம் - கடத்தற்கு அரிய பாலை நில வழியில். சீறூர் - சிறு ஊர். போகிய - போய் விட்ட. முன்றில் - முற்றத்தை உடைய. புலப்பில் - புலம்பு இல்; தனிமையையுடைய வீடு; தனிமை யென்றது மக்கள் இல்லாத தன்மையைச் சுட்டியது. புல்லென்று - பொலிவை இழந்து. அலப்பென் - வருந்துவேன். அவர் - காதலர். அகன்ற ஞான்று - பிரிந்து சென்ற காலத்தில். ஏ: அசை நிலை. ★

துறை: பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[வேறுபாடு - மாறுதல். கவன்ற - கவலைப்பட்ட. கிழத்தி - தலைவி.]

இது குறுந்தொகையில் நாற்பத்தோராவது பாட்டு.

இதனைப் பாடிய புலவருக்கு இயல்பாக அமைந்த பெயர் இன்னதென்று தெரியவில்லை. அவர் தாம் பாடிய இந்தப் பாட்டில் அணிலாடு முன்றில் என்ற தொடரால் அழகிய உவமை ஒன்றைப் புலப்படுத்துகிறார். இந்தப் பாட்டைப் படிக்கிறவர்களுக்கு அணிலாடு முன்றில் எப்போதும் நினைவில் இருக்கும்.

இதைப் பாடின புலவர் பெயர் இன்னதென்று தெரியாவிட்டாலும், இந்த அழகிய தொடர் ஒன்றே அவரை நினைவூட்டப் போதுமானது. ஆகவே பழங் காலத்தில், இந்தப் பாட்டைப் பாடிய அவரை அணிலாடு முன்றிலார் என்றே வழங்கலானார்கள். இப்படித் தாம் பாடிய பாடல்களில் வரும் சொற்றொடர்களால் பெயர் பெற்ற சங்கப் புலவர்கள் பலர் உண்டு.

# குருவிக் குடும்பம்

தோழி : அதோ பார் அந்தக் குருவியை. எவ்வளவு அழகாக இருக்கிறது! தத்தித் தத்திக் குதிக்கிறது.

தலைவி : அதைப் பார்த்தால் எனக்கு வாடிய ஆம்பற் பூ நினைவுக்கு வருகிறது.

தோழி : சரியான உவமை. சிறகுகளை விரிக்காமல் அது கீழே நிற்கும் பொழுது வாடிய ஆம்பற் பூவைப் போலவேதான் தோன்றுகிறது. கூம்பிய (மூடிய) சிறகுடன் இருக்கும்போது அதற்கு நீ சொன்ன உவமை மிக மிகப் பொருத்தமாக இருக்கிறது.

தலைவி : அதற்குத்தான் எத்தனை சுறுசுறுப்பு!

தோழி : கடமையுடையவர்கள் சுறுசுறுப்பாக இராமல் இருந்தால் எப்படிக் குடும்பத்தை நடத்த முடியும்?

தலைவி : குடும்பமா ?

தோழி : மனிதன் மட்டுமா குடும்பம் நடத்துகிறான்? குருவிக்குக் கூடக் குடும்பம் உண்டு.

தலைவி : ஆனால் அதற்குக் கவலை இல்லை. நாளைக்கு வேண்டுமே என்ற கவலையே இல்லை. அதோ முற்றத்தில்உலர்த்தியிருக்கிறதானியத்தைக் கொத்தி உண்டு வயிற்றை நிரப்பிக் கொள்கிறது.

தோழி : தான் நிரப்பிக் கொள்வதோடு நில்லாமல் தன் குழந்தைகளுக்கும் கொண்டு போய்க் கொடுக்கிறது.

தலைவி : இதற்குக் குடும்பம் இருக்கிறதா?

தோழி : உலகம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. வழி வழியே உயிரினங்கள் பெருகி வருகின்றன. மனித இனம் பெருகுவது போலவே மற்ற இனங்களும் பெருகுகின்றன. குடும்பம் இல்லாமல் இனம் பெருகுமா ?

தலைவி : ஆண், பெண், குழந்தைகள் என்ற குடும்பம் குருவிக்கும் உண்டா?

தோழி : தெரியாதவள் போலப் பேசுகிறாயே! நம்முடைய வீட்டின் இறைப்பிலே குருவிக் குடும்பம் வாழ்வதை நீ அறியாயா?

தலைவி : குடும்பம் இருந்தாலும் குருவிக்குக் கவலை இல்லை; நாளைக்கு வேண்டுமேஎன்ற நினைப்பு இல்லை.

தோழி : உணவைப் பொறுத்த வரையில் அதற்குக் கவலை இராமல் இருக்கலாம். ஆனால் வேறு ஒரு திறத்தில் குருவியும் முன் கூட்டியே ஏற்பாடு செய்து விடுகிறது. இறைவன் அதற்கும் அத்தகைய அறிவைக் கொடுத்திருக்கிறான்.

தலைவி : என்ன ஏற்பாடு?

தோழி : அது நம் வீட்டு இறைப்பில் சும்மா வாழவில்லை. அங்கே மெத்தென்ற வீடு கட்டிக் கொண்டு வாழ்கிறது. தனக்காக இல்லாவிட்டாலும் தன் மனைவிக்கும் அது முட்டையிடுவதற்கும் முட்டை பொரிந்தபின் குஞ்சுகள் வாழ்வதற்கும் வீடு ஒன்று வேண்டுமென்று முன்பே எண்ணி அது அந்த வீட்டைக் கட்டிக் கொள்கிறது. நாம் கட்டியுள்ள வீட்டின் இறைவானத்தில் அதுவும் கட்டிக் கொள்கிறது.

தலைவி : குருவியின் வாழ்க்கையே இன்ப வாழ்க்கை தான். அதோ பார்; குருவி பறந்து போகிறது. அந்த இடத்தில் உள்ள சாணத்தைக் கொத்துகிறதே!

தோழி : காய்ந்த சாணம் அது. அதைக் கொத்தி விளையாடுகிறது. அதனுடைய நுண்ணிய பொடியை வீட்டுக்குப் பூசுமோ என்னவோ? எருவின் நுண்ணிய தாதைக் குடைந்து விளையாடுகிறது. எதற்காக என்று நமக்குத் தெரியவில்லை. நாம் பெரிய அறிவுடையோம் என்று சொல்லிக் கொள்கிறோம்.

தலைவி : வேண்டியதை உண்டு, மனம் போலப் பறந்து விளையாடித் தன் குஞ்சுகளுடனும் பேடையுடனும் இறைவானத்து வீட்டில் வதியும் குருவியைக் கண்டால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது. நாமும் குருவியாகப் பிறந்து வாழலாம் என்று தோன்றுகிறது.

தோழி : என்ன அப்படிச் சொல்கிறாய்? உன் தலைவர் பிரிந்து சென்றிருக்கிறாரே; அதை நினைந்து வருத்தம் உண்டாகிறதா?

தலைவி : அவரை நினைக்காமல் இருக்க முடியுமா? ஆனால் அவர் கடமையின் பொருட்டுப் பிரிந்து சென்றிருக்கிறார் என்பதை நான் அறிவேன்.

தோழி : இல்லை, இல்லை. நீ உன் துன்பத்தை மறைத்துப் பேசுகிறாய். குருவியாக வாழலாம் என்று சொன்னாயே, அதுவே உன் பிரிவுத் துன்பத்தைக் காட்டவில்லையா?

தலைவி : குருவியின் விடுதலை பெற்ற வாழ்வை நினைந்து சொன்னேனே யன்றி, வேறு நினைவு எனக்கு இல்லை.

தோழி : அவர் பிரியும் போதே இப்படியெல்லாம் வரும் என்று நினைத்தேன். அவரது பிரிவைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் உனக்கு இல்லை என்பதை நான் அறிவேன். அவரைப் போகவேண்டாம் என்று சொல்வதற்கு உரிமையோ, ஆற்றலோ எனக்கு இல்லை. இந்த நிலையில் நான் என் செய்வேன்!

தலைவி : நான் வருந்துவதாக எண்ணிக்கொண்டு நீ ஏன் துன்புறுகிறாய்? நான் அன்று நன்றாகத்தெரிந்து கொண்டுதானே அவருக்கு விடை கொடுத்தேன்?

தோழி : என்ன தெரிந்து கொண்டு விடை கொடுத் தாய்?

தலைவி : அவர் என்னிடம் பேரன்புடையவர். போன இடத்தில் தம் காரியம் கைகூடினால் உடனே ஒரு கணமும் தாழ்க்காமல் வந்து விடுவார் என்பதை நான் அறிவேன்.

தோழி : உண்மையாகவே நீ இப்படி நினைத்தால் நல் லதுதான். அவருடைய பிரிவால் இவள் துன்புறு கிறாளே என்று நான் கவலைப் படாமல் இருப்பேன்.

தலைவி : நீ வீணாகக் கவலை கொண்டு பயன் என்ன? அவர் அன்பை நான் அறிய மாட்டேனா? ஆடவரு டைய கடமையை நாம் மறக்கலாமா? இப்போது வேறு ஒரு நிகழ்ச்சியும் என் ஆறுதலை அதிகமாக்குகிறது.

தோழி : என்ன நிகழ்ச்சி?

தலைவி : மாலை நேரம் வரப் போகிறது. இந்தக் குரு விகள் இல்லின் இறைப்பிலே உள்ள தம் வீட்டிலே பிள்ளையோடு வதியப்போகின்றன. இந்தக் குரு விக் குடும்பம் இந்த ஊரில் இருப்பது மாத்திரம் அன்று. உலகம் முழுவதுமே மனிதர்களோடு குரு

விகளும் வாழ்கின்றன. அவர் போயிருக்கிற இடத்திலும் குருவிக் குடும்பம் உண்டு. மாலைக் காலத்தில் குருவிகள் கூட்டில் அடையும் காட்சியை எங்குமே காணலாம். என் தலைவர் போன ஊரிலும் அந்தக் காட்சிகள் உண்டு. அவர் அதைப் பார்க்க மாட்டாரா?

தோழி : நிச்சயமாகப் பார்ப்பார்.

தலைவி : ஒரு வேளை வேலை மிகுதியினால் விரைவிலே ஊர் திரும்பவேண்டும் என்ற நினைவு மறந்திருந்தாலும், மனையில் உறையும் குருவிக் குடும்பத்தைக் கண்டு, நாமும் குடும்பத்தோடு வாழாமல் நெடுநாள் பிரிந்திருப்பது தவறு என்று எண்ண மாட்டாரா?

தோழி : எண்ணக் கூடும்.

தலைவி : நான் அவர் பிரிந்ததனால் தனியாக இருக்கிறேன். இந்தத் தனிமைத் துன்பம் எனக்கு மாத்திரந்தானா? அவரும் என்னைப் பிரிந்த தனிமையை உணரமாட்டாரா? அவருக்கும் துன்பம் உண்டாகும் அல்லவா?

தோழி : எப்படியோ நீ தைரியமாக இருந்தால் போதும். இந்த ஆறுதலை உனக்குத் தந்த இந்தக் குருவிக் குடும்பம் வாழட்டும்.

தலைவியின் கூற்றாக வருகிறது பாட்டு.

*ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன*
*கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ*
*முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து*
*எருவின் நுண்தாது குடைவன ஆடி,*
*இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்*

**புன்கண் மாலையும் புலம்பும்**
**இன்றுகொல் தோழி,அவர் சென்ற நாட்டே?**

[தோழியே, ஆம்பல் மலரின் வாடலைப் போன்ற குவிந்த சிறகையுடைய வீட்டில் வசிக்கும் குருவி, முற்றத்தில் உலரும் தானியத்தை உண்டு, பொதுவிடத்தில் சாணத்தினது நுட்பமான பொடியைக் குடைந்து விளையாடி, இல்லில் உள்ள இறைப்பிலுள்ள இடத்தில் தம் பிள்ளைகளோடு தங்கும், துன்பத்தைத் தரும் மாலை நேரமும் தனிமையும் தலைவர் சென்ற நாட்டில் இல்லையோ?

சாம்பல்-வாடற் பூ. கூம்பிய சிறகர்-மூடிய சிறகையுடைய. மனை-வீடு. குரீஇ-குருவி. முன்றில்-முற்றம். உணங்கல்-உலரும் பொருள்; தினை, கம்பு, நெல் முதலிய தானியங்கள். மாந்தி-உண்டு. மன்றம்-பொது இடம். எரு-சாணம். நுண்தாது-நுண்ணிய பொடி. குடைவன-கொத்துவனவாகி; முற்றெச்சம். ஆடி-விளையாடி. இல் இறை-வீட்டின் இறைவானம். வதியும்-தங்கும். புன்கண்-துன்பம். புலம்பு-தனிமை. அவர்-தலைவர்.]

துறை : பிரிவிடை ஆற்ருள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.

'தலைவன் பிரிந்திருக்கும் காலத்தில் அந்தப் பிரிவுத் துன்பத்தைத் தலைவி தாங்கமாட்டாள் என்று கவலையுற்ற தோழிக்கு, தலைவி, யான் ஆற்றுவேன் என்ற கருத்துப் புலப்படச் சொன்னது' என்பது இத் துறையின் விளக்கம்.

'அவர் போன இடத்தில் குருவிகள் இல்லிறப்பில் தங்கும் மாலையும் தனிமையும் இல்லையோ?' என்று கேட்பது போலப் பாட்டு இருந்தாலும், அங்கே அவை இருக்குமாதலின் தலைவர் அவற்றை உணர்ந்து விரைவில் இங்கே வரவேண்டும் என்று நினைப்பார் என்ற குறிப்பை அது வெளிப்படுத்தியது.

இதனைப் பாடியவர் மாமலாடன் என்னும் புலவர்.

இது குறுந்தொகையில் 46-ஆவது பாட்டு.

# அவள் ஆவல்

இல்லற வாழ்க்கையில் நல்விருந்தையே நுகர் பவன் காடியை நுகர்ந்ததுபோலப் பரத்தையை விரும் பினன் அவன். அதனை அறிந்து அவனுடைய மனைவி மிக வருந்தினள்; ஊடினள். ஆயினும் பேரன்பும் கற்பும் உடையவளாதலின் அந்த ஊடல் நீடிக்கவில்லை. ஊடல் மறைந்தது. கணவனும் மனைவியும் இடையில் ஏதும் நிகழாதது போலவே அளவளாவினர்கள்.

தலைவி தனக்கும் தலைவனுக்கும் உள்ள அன்பு இடையிலே மாறியது போலத் தோற்றினலும் உண் மையில் மாற்றம் அடையாதது என்று நம்பினள். தலைவனேடு மகிழ்ந்திருந்தபோது உவகை மிகுதியால் அவள் தன் விருப்பம் ஒன்றை வெளியிடத் தொடங்கி கினள்

★

அவர்கள் வாழும் இடம் கடற்கரையில் உள்ளது நெய்தல் நில ஊர். அங்குள்ள கரைக்கு அவன் சொந்தக்காரன். கடற்கரையை உடைய நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன் என்று சொல்வது தமிழ் வழக்கு. அவன் சேர்ப்பன். சேர்ப்பு என்பது கடற் கரை.

கடற்கரையில் முள்ளுச் செடிகள் வளர்ந்திருக் கின்றன. அந்தச் செடியை முள்ளி என்று சொல் வார்கள். முண்டகம் என்றும் அதற்கு ஒரு பெயர் உண்டு.

மனித வாழ்க்கையைப்போல இருக்கிறது அது. பார்த்தால் முட்கள் நிரம்பிய செடிதான். ஆயினும் அதிலும் மனிதர் விரும்பும் மலர் மலர்கிறது. முள்ளிச் செடியின் முள் அணிற் பல்லைப்போல இருக்கும். அதன் மலரில் தாது மணக்கும். பூந்தாதுதானே மல ரில் மணத்தை உண்டாக்குகிறது? அணிலின் பல்லைப் போன்ற முள்ளையுடைய செடி அது; தாது முதிர் முண்டகம்.

கரையிலே முள்ளும் மணமும் கலந்திருக்கும் முண் டகச் செடிகள் இருக்கின்றன. அதை யடுத்துக் கடல் விரிந்து பரந்து கிடக்கிறது. ஒரே நீலப் பெரும் பரப்பு; நீலமணியைப் போலக் கருநிறமாகக் கிடக்கும் கடல்.

இந்த அழகிய கடற்கரையிலே காதல் செய்தவர் கள் அந்த இருவரும். இப்போது நாடறியக் கணவ னும் மனைவியுமாக வாழ்கிறார்கள்.

இந்தப் பிறவியில் அவன் முண்டகமும் நீலமணி நிறத்து நெடுங்கடலும் உள்ள கடற்கரைக்குத் தலைவன். அவள் அவனுக்கு மனைவி. அடுத்த பிறவி யில்? அப்போதும் அவளே அவனுக்கு மனைவி யாவாள். இப் பிறவியிலே மனம் ஒன்றி வாழ்வது பெரிது அன்று. இனி எத்தனை பிறவி எடுத்தாலும் அவளே அவனுக்கு மனைவி ஆகவேண்டும். இது தான் அவளுடைய ஆவல்.

★

உடம்பு வேறு வேறாக மாறிப் பிறந்தாலும் உயிர் ஒன்றுதான். வெவ்வேறு சட்டைகளை அணிவதனால் மனிதன் வேறாவதில்லை. உயிரும் வெவ்வேறு உடம்பையுடைய பிறவிகளைப் பெற்றாலும் வெவ்வே றாக அது மாறுவதில்லை. அவன் எந்தப் பிறவி எடுத்

தாலும் அவன் பிறக்கும் இடத்திலே அவளும் பிறக்க வேண்டும். அவன் ஆணுகவும் அவள் பெண்ணுகவும் பிறக்க வேண்டும். அவன் செல்வமுடையவனுனுல் அவனை மணக்கும் உரிமையைப் பெற்ற செல்வக் குடும்பத்து மகளாக அவள் பிறக்க வேண்டும். அவன் ஏழையாகப் பிறந்தால் அவன் எளிதில் அணுகி அள வளாவும் ஏழை மகளாக அவளும் பிறக்கவேண்டும்.

வரப்போகின்ற பிறவி இன்ன நிலையில்தான் அமைய வேண்டும் என்று அவள் ஆசைப்படவில்லை. அது எப்படி இருந்தாலும் அவளுக்குக் கவலை இல்லை. அவள் கேட்பது ஒன்றுதான்: எந்தப் பிறவி எடுத்தா லும் அவனுக்கு மனைவியாக வேண்டும்.

'இந்தப் பிறவியிலே சில காலம் இவன் நம்மைப் பிரிந்து பரத்தையோடு ஒன்றியிருந்தானே' என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் ஓரிடத்தில் மறைந்து நின்றது. களவுக் காலத்தில் பிறர் அறியாதபடி சந்திக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் காண முடியும் என்று உறுதியாகச் சொல்ல இயலாத நிலை அது. அத் தகைய நிலை கூடாதென்று கருதியே அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள். ஒரு கணமும் பிரியாமல் யாருக்கும் அஞ்சாமல் இணைந்து வாழலாம் என்று எண்ணினுர்கள். அப்படியே வாழ்ந் தார்கள். ஆனுல் இடையிலே முளைத்தாள் பரத்தை. இல்லற வாழ்க்கையிலும் பிரிவு நேர்ந்தது. மக்கள் வாழ்க்கை குறுகியது. அதில் ஒன்றுபட்டு வாழும் வாழ்வு எவ்வளவோ காலத்துக்குப்பின் கிடைத்தது. அதனிடையிலும் பிரிவு என்ருல் இந்த வாழ்க்கை விரும்பத்தக்கதாகத் தோன்றுமா?

இந்த எண்ணம் அவளுக்கு வந்தது. ஆனால் அடுத்த கணமே அவள் ஒரு பேருண்மையை நினைவிற்குக் கொண்டு வந்தாள். 'இந்த வாழ்க்கை என்று நாம் நினைப்பது இந்த உடம்போடு வாழும் வாழ்க்கையைத்தானே? இந்த உடம்பு அழிந்துவிடும்; வாழ்வும் முடிவடையும் என்று அஞ்சுகிறோம்: உடம்பு அழியும் போது இதனோடு தொடர்புடைய யாவுமே அழிந்து விடும். எனக்கும் இவருக்கும் உள்ள உறவு உடம்பளவிலே நிற்பது அல்லவே! உள்ளம் ஒன்றியது அல்லவா? உள்ளத்தோடு நிற்பதுவும் அன்று; இது உயிரோடு பொருந்திய நட்பு. எனக்காகவே இவர் இருக்கிறார். இவருக்காகவே நான் இருக்கிறேன். உடம்பு ஒன்றும் திருமணந்தான் பிறவிதோறும் நடைபெறுகிறதேயன்றி, உயிர் ஒன்றும் திருமணம் என்றோ ஒருகாலத்தில், அநாதியிலே நடந்துவிட்டது!'—அவள் சிந்தனை படர்ந்தது.

'உடம்புக்குத்தான் ஆயுள் உண்டேயன்றி உயிருக்கு ஆயுள் ஏது? குறுகிய வாழ்க்கை என்று நாம் பேசுவது, உடம்பை எண்ணித்தானே? எனக்கும் என் தலைவருக்கும் இறுதியே இல்லாத உறவு அமைந்திருக்கிறது. இதை யார் தடுக்க முடியும்? உயிர் எந்த உடம்பை எடுத்தாலும் மாறாதது.'—இப்படி எண்ணும் போது அவளுக்குப் பெருமிதம் உண்டாயிற்று.

'இந்த நீண்ட உயிரின் வாழ்க்கையிலே எம்பெருமான் பிரிந்தது கணப்போதுகூட ஆகாது. இனி வரும் பிறவியிலே இந்த இடையீடுகூட இருக்கக் கூடாது. அவர் கணவராக இருப்பதும் நான் மனைவியாக இருப்பதும் பிறவிதோறும் அமையும் நிலை.

ஆனால் அவர் என்னிடத்தினின்றும் பிரியாமல் நெஞ்சு பொருந்தி வாழ வேண்டும். அவருடைய மனைவியாக இருப்பது மட்டுமன்றி, அவரது நெஞ்சுக்கு நேர்ந்தவளாக, ஏற்புடையவளாக நான் இருக்க வேண்டும்.'— இதுதான் அவள் விழைவு.

உடம்பு இணைவது காமம். உள்ளம் இணைவது காதல். உலகத்துக் கவிஞர்கள் அந்தக் காதலைப் பலபடியாகப் பாராட்டியிருக்கிறார்கள். பாரத சமுதாயத்தில் காதலின் சிறப்பைப் பின்னும் உயர்வாகப் பேசுவார்கள். உயிரும் இணைந்து ஒன்றுவதே காதல் என்ற கொள்கை இந்த நாட்டுக்கு உரியது. அந்தப் பண்பாட்டில் ஊறிய தலைவி, “இந்தப் பிறவி மாறி வேறு பிறவி வந்தாலும், நீ என் கணவனாக வேண்டும்; நான் உன் மனைவியாவதோடு உன் நெஞ்சுக்குப் பொருந்தியவளாகவும் வேண்டும்" என்று தன் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறாள்.

தலைவி கூறுவதாகப் பாடல் அமைந்திருக்கிறது.

*அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து*
*மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!*
*இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீஆ கியர்என் கணவனை;*
*யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே.*

[அணிலின் பல்லைப் போன்ற கூரிய முள்ளையுடையதும், பூந்தாது முதிர்ந்த மலரையுடையதுமாகிய முள்ளிச் செடியையும், நீல மணியின் நிறத்தை ஒத்த விரிந்த நீரையும் உடைய கடல்துறைக்குத் தலைவனே! இந்தப் பிறவி நீங்கி வேறு பிறவி வந்தாலும் நீயே என் கணவனாகுக! யானே நின் நெஞ்சுக்குப் பொருந்தியவள் ஆகுக!

அணில்பல் என்றது முள்ளுக்கு உவமை. அது, "குண்டு சுனைபூத்த வண்டுபடு கண்ணி" என்பது போல அதனையுடைய முண்டகத்துக்கு ஆயிற்று.

கொங்கு - பூந்தாது; மணமும் ஆம். முண்டகம் - கழிமுள்ளிச் செடி. மணி - நீலமணி. கேழ் - நிறம். மா நீர் - விரிந்த கடல்நீர். சேர்ப்ப - கடல்துறைக்குத் தலைவனே. இம்மை - இப்பிறவி. மாறி - நீங்கி. மறுமை - அடுத்த பிறவி; மறுமை என்றுளேனும் வரும் பிறவிகள் எல்லாவற்றையும் கொள்க. ஆகியர் - ஆகட்டும்; விருப் பத்தைக் காட்டுவது. கணவனை: ஐ, சாரியை. நேர்பவள் - பொருந்துபவள்.]

'நீயாகியர் என் கணவனை என்றதற்கு ஏற்ப, யானாகியர் நின் மனைவி என்னாது நெஞ்சு நேர்பவளென்றது, கணவன் என்றமையாலேயே மனைவியென்பது பெறப்பட்டமையாலும், மனைவியாக இருப்பினும் நெஞ்சு நேர்பவளாகும் பேறு பரத்தைக்கு ஆவதும் உண்டாதலின், வாளா மனைவியென வாழாமல் நெஞ்சு பொருந்தியவளுமாதல் வேண்டுமென்பது நினைவாதலாலும் என்க' என்றும், 'முள்ளிச்செடி புறத்தே முட்களை உடையதாயினும் மலர்களும் அம்மலர்களில் மணமுடைய பூந்தாதும் குறைவறப் பெற்றிருத்தலைப் போலத் தலைவன் புறத்தொழுக்கம் உடையனாயினும் தன்மாட்டு அன்புடையவனாகவே இருக்கின்றான் என்பது தலைவியின் குறிப்பு' என்றும் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எழுதியுள்ள உரைப் பகுதிகள் இங்கே அறிவதற்குரியன.

இந்தச் செய்யுளைப் பாடிய புலவர் அம்மூவனார். குறுந்தொகையில் 49-ஆம் பாடல் இது.

# மகன்றிலின் காதல்

தினைக் கொல்லையைக் காத்து வந்தாள் அந்த இளம் பெண். அவளுக்குத் துணையாகத் தோழி இருந்தாள். அப்போது அந்தக் கட்டழகன் வந்தான். கண்களும் கண்களும் சந்தித்தன. கருத்தும் கருத்தும் இணைந்தன. காதல் தோன்றி வளர்ந்தது. களவிலே அளவளாவி வந்தார்கள்.

தினை காக்கும் வேலை நின்றுவிட்டது. தினைக் கதிரைக் கொய்துவிட்டார்கள். அதனால் புனத்தைக் காக்கும் அவசியம் இல்லை. அவள் இப்போது வீட்டில் இருந்து வந்தாள். தினைப்புனத்திலே வளர்ந்த காதல் இப்போது மனைப்புறத்திலே வளர்ந்தது. ஒருவரும் அறியாமல் அவன் அவளை இரவு நேரங்களில் சந்தித்து வந்தான். அவர்களுடைய களவுக் காதலுக்கு உறுதுணையாக இருந்தாள் தோழி.

தாய்க்கும் பிறருக்கும் தம்முடைய பெண்ணுக்குக் கால் முளைத்துவிட்ட செய்தி குறிப்பாகத் தெரிந்தது. கட்டுக் காவலை அதிகமாக்கினார்கள். அந்த இளம் பெண் எங்கும் போக இயலாமல் ஏதேனும் வேலை சொல்லி உடனிருந்து பாதுகாத்தாள் தாய். செவிலித் தாயோ அவள் அருகில் படுத்து உறங்கினாள்.

இந்தக் காவல் மிகுதியினால் காதலிக்குத் தன் காதலனை அடிக்கடி சந்திக்க முடியவில்லை. அதனால் அவள் உள்ளத்தில் துயரம் கப்பிக்கொண்டது. வாழ்க்கையே சுவைக்கவில்லை. யாரைக் கண்டாலும் எரிச்சல்

எரிச்சலாக வந்தது. தன் காதலனோடு இணைபிரியாமல் ஒன்றி வாழவேண்டும் என்று அவள் ஏங்கினாள். அதற்கு நேர்மாறாக இருந்தது காவல்.

★

ஒரு நாள் வீட்டுக்குள்ளே யாரும் அறியாமல் தோழியும் தலைவியும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அன்றில் என்னும் பறவையைப் பற்றி நீ கேட்டிருக்கிறாயா?" என்று பேச்சைத் தொடங்கினாள் தலைவி.

தோழிக்கு அவள் எதற்காக அன்றிலைப் பற்றிப் பேசுகிறாள் என்பது தெரிந்துவிட்டது. பனை மரத்தில் எப்போதும் ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழும் இயல்பையுடையது அன்றில்.

"அன்றிலைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனால் பார்த்ததில்லை" என்றாள் தோழி.

தலைவி : ஆணும் பெண்ணும் பிரிவு இல்லாமல் வாழும் பறவை அன்றில் என்று சொல்கிறார்கள். அது நிலத்தில் வாழும் பறவை. நீரில் வாழும் பறவைகளிலும் அந்த இயல்புடைய சாதி ஒன்று உண்டென்று ஒரு புலவர் சொன்னார்.

தோழி : ஆம்; அன்று காதலின் சிறப்பைப் பற்றிச் சொன்னாரே, அந்தப் புலவர் மகன்றில் என்ற பறவையைப் பற்றிச் சொன்னார். நானும் கேட்டேன். நான் மாத்திரமா? இந்த வீட்டில் உள்ளவர்கள் எல்லோருமே கேட்டார்கள்.

தலைவி : அவர்கள் யாவரும் செவிடர்கள். அவர்கள் கேட்டுப் பயன் என்ன? காதலின் இயல்பை அனு

வளவும் உணராத கல் நெஞ்சுடையவர்கள் அவர்கள்.

தோழி : ஏதோ கதை கேட்பது போலக் கேட்டார்கள். வாழ்க்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இருப்பதாகவே அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

தலைவி : அன்றிலைவிட நுட்பமான காதலுணர்ச்சி உடையவை மகன்றில் என்றல்லவா தெரிகிறது?

தோழி : நீரில் தாமரை மலர்களினூடே வாழ்வது மகன்றில் என்று அந்தப் புலவர் சொன்னார்.

தலைவி : ஆம்; அந்தப் பறவைகள் மிகவும் மென்மை உடையன போலும். மெத்தென்ற மலரில் வாழும் அவை பெறும் பேறு யார் பெறுவார்கள்? மணமும் மென்மையும் உடைய பள்ளியும் இல்லமுமாகத் தாமரை அவற்றிற்குப் பயன்படுகிறது. மக்கள் அத்தனை இன்பத்தை நுகர்வார்களோ என்பது ஐயந்தான்.

தோழி : மனிதன் தானே படைத்துக் கொள்ளும் இல்லத்தைவிட இறைவன் படைத்துத் தந்திருக்கும் தாமரை இல்லம் சிறந்ததுதான்.

தலைவி : இல்லம் இருக்கட்டும். அவற்றின் உள்ளமும் அதிலுள்ள காதலும் மிக மிக உயர்வுடையன. ஆறறிவு படைத்தவர் என்று தருக்குகின்ற மனித சாதிக்குக்கூட அந்தக்காதல் வலிமைஇருப்பதில்லை.

தோழி : தாமரைப் பூவில் வாழும் வாழ்க்கையில் இன்பம் காணுவது மகன்றில். அங்கேகூடத் துயரம் வரும் என்றல்லவா சொன்னார் புலவர்?

தலைவி : அந்தத் துயரத்திலிருந்துதான் மகன்றிற் பறவைகளின் காதல் எவ்வளவு நுட்பமானது

என்று தெரிய வருகிறது. பூவுக்குப் பூத் தாவி வாழும் இரட்டை மகன்றில்கள் எப்போதும் இணைந்தே இருக்கும். எப்போதேனும் ஒரு கணம் ஒரு பூ இடைப்பட்டாலும் அந்தப் பறவைகள் துடித்துப் போய்விடுமாம். பல ஆண்டுகள் பிரிந்து விட்டது போன்ற துயரம் உண்டாகுமாம்.

தோழி : இதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட மக்களுக்கு வலிமை போதாது.

தலைவி : அது நன்ருகத் தெரிகிறதே. காதலுக்குக் குறுக்குச் சுவர் எடுத்துக் கொலை செய்யும் தாயும் செவிலியும் நிரம்பின மக்கட் சாதியில் காதலின் நுட்பத்தை உணர்பவர் யார் இருக்கின்றனர்?

தோழி : இறைவன் படைப்பிலே எத்தனை வியப்பு! பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன, நீர் உறை மகன்றிற் புணர்ச்சி வியப்பிலும் வியப்பு!

தலைவி : வாழ்ந்தால் அப்படி வாழவேண்டும். இல்லையானல் உயிர் நீங்கவேண்டும்.

தோழி : ஏன் அப்படிச் சொல்கிருய்?

தலைவி : அந்தப் பறவைக்கு இருக்கும் உரிமை நமக்கு இல்லையே! நாம் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிருேம். ஆடை அணிகளைப் புனைகிருேம். நாகரிக வாழ்க்கை வாழ்கிருேம். பெரிய பெரிய கொள்கைகளைப் பற்றிப் பேசுகிருேம். ஆனல் உள்ளத்தை அறியாமல் இருக்கிருேம். அறிந்தாலும் குமைந்து வாடச் செய்கிருேம். இந்த வாழ்வு வாழ்வதிலும் சாவதே மேல்.

தோழி : உயிரினும் சிறந்த காதலன் ஒருவன் கிடைத்திருக்கும்போது நீ இப்படிப் பேசலாமா?

தலைவி : காதல் வளர வேண்டுமானால் பிரிவு இருக்கக் கூடாது. பிரிவு அரிதாகிய காமத்தை மகன்றிற் பறவை பெற்றிருக்கிறது. உயர்ந்த படைப்பாகிய மக்கள் பெறுவதில்லை. பெற முயன்றாலும் மற்றவர் கள் விடுவதில்லை. ஏதோ தங்கள் உடைமை பறிபோய்விட்டது போலக் காவல் செய்து காதலைக் குமைத்து நசுக்குகிறார்கள். மகன்றிலுக்குத் தாயும் செவிலியும் இல்லைபோலும்! இந்தப் பிறவி போனால் வேறு பிறவியிலாவது இந்தக் காவல் இல்லாத இடத்தில் பிறக்கலாம் அல்லவா ?

தோழி : கணவனும் மனைவியுமாக மணந்து வாழும் வாழ்க்கையில் பிரிவின்றி வாழலாம்.

தலைவி : அதற்கு முன்பே இத்தனை இடையூறுகள் வந்துவிட்டனவே! உலகத்தில் வாழவேண்டுமானால் காதலனும் காதலியுமாகிய இருவராக வாழவேண் டும். இந்த நியதி பறவையினிடமும் இருக்கிறது. காதலும் கடமையும் நிகழ ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழவேண்டு மென்பது உலக வாழ்க் கையில் உள்ள வரையறை. கடமையை அறிந்து அதனைப் பல துறைகளிலும் ஆற்றக் காதலினால் இருவர் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையே வாழ்க்கை; அந்த வாழ்க்கையில்தான் பிரிவரிதாகிய காமம் வளரும்; தண்டாத (நீங்காத) காதல் வளரும். அத்தகைய வாழ்க்கை இல்லாவிட்டால் வாழ்வதில் பயன் இல்லை.

தோழி : காதலனோடு ஒன்றுபடும் காதல் வாழ்க்கை தான் உனக்குக் கிடைத்திருக்கிறதே!

தலைவி : காதல் கிடைத்தது உண்மைதான். ஆனால் பிரிவின்றி வாழும் வாழ்க்கை கிடைக்கவில்லையே! ஒன்றுபடும் காலத்தைவிடப் பிரிந்து தனித் தனியே வாடும் புன்மையைத்தானே அதிகமாக அநுபவிக்கிறேன்! சில காலம் ஒன்றுபட்டாலும் போதுமென்று, அந்த இணைப்பிலே உயிரை நீத்துவிடலாம். இருவராக இணைந்து வாழவேண்டிய உலகத்தில் பிரிந்து ஒருவராக வாழும் துன்பத்தினின்றும் விடுபட அதுதான் வழி. இருவரும் இணைந்த போதே ஒருங்கே உயிர் போகட்டும். அடுத்த பிறவியில் ஒன்று சேருவோம்.

தலைவி துயர மிகுதியினால் இவ்வாறு பேசுகிறாள் என்பதைத் தோழி நன்றாக உணர்ந்து கொண்டாள். வாழ்ந்தால் செவ்வையாக வாழவேண்டும்; இல்லையேல் வாழ்வினால் பயன் இல்லை என்பது நியாயமாகவே தோன்றுகிறது. இனிமேல் பேச்சுக் கொடுத்தால் அவள் வருத்தம் மிகுதியாகிவிடும் என்று எண்ணிப் பேச்சை நிறுத்தினாள்.

பாவம்! மகன்றிலின் வாழ்வை எண்ணி எண்ணி ஏங்கினாள் அந்த இளம் பெண். அவள் கூற்றாக உள்ளது பின்வரும் பாடல்.

*பூ இடைப் படினும் யாண்டுகழிந் தன்ன*
*நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போலப்*
*பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு*
*உடன்உயிர் போகுக தில்ல! கடன்அறிந்து*
*இருவேம் ஆகிய உலகத்து*
*ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே.*

[பூவானது இடையிலே தடுத்தாலும் பல ஆண்டுகள் கடந்தாற் போன்ற (துன்பத்தை உண்டாக்கும்), நீரிலே வாழும் மகன்றிற் பறவைகளின் உறவைப் போல, பிரிவு அரிதாக உள்ள நீங்காத காதலோடு ஒருங்கே எம் உயிர் போவன வாகுக! கடமையை உணர்ந்து யாம் இருவராக வாழ்ந்த இவ்வுலகத்தில் ஒருவராகிய துன்பத்தினின்றும் நாம் விடுபடும் பொருட்டு.

இடைப்படுவது, நடுவிலே தடையாகத் தோன்றுதல். கழிந்தன்ன - கழிந்தது அன்ன; கழிந்தாலன்ன என்பதன் விகாரம் என்றும் கூறுவர். புணர்ச்சி - ஒன்றி வாழும் உறவு. பிரிவு அரிது என்றது பிரிவின்றி வாழ்வதைச் சுட்டியது. தண்டா - நீங்காத; அழியாத. காமம் - காதல். உடன் - ஒருங்கே. ஒன்றுபட்டிருக்கும் போதே உயிர் போகட்டும் என்றாள். பிரிந்து படும் துன்பத்தை விட அது சிறந்த தென்பது அவள் கருத்து. தில்ல: தில் என்ற சொல்லின் விகாரம்; விருப்பத்தைக் குறிக்கும் இடைச் சொல் அது. கடன் - கடமை. பல பிறவிகளிலும் காதலன் காதலியராக ஒன்றுபட்டே வருகிறோம் என்ற கருத்தால், "இருவேமாகிய உலகம்" என்றாள். இருவேம் - நாம் இருவர். ஒருவேம் - ஒருவராக இருக்கும் தன்மையை உடையேம். புன்மை - துன்பம். உயற்கு - நீங்கும் பொருட்டு. புன்மையினின்றும் உயற்கு, உயிர் போகுக.]

★

இந்தச் செய்யுளிலும் காதல் பிறவிதோறும் வருவது என்பதைக் குறிப்பாகச் சொல்கிறாள் தலைவி.

இந்தப் பாட்டின் சொல்லையும் பொருளையும் அடியொற்றிக் கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்தில் களவுப் படலத்தில் பின்வரும் பாடலை அமைத்திருக்கிறார்.

மணிநீர்க் கயத்து மலரிடை தட்பினும்
வார்கழுத்துப்
பிணிநீர் மையிற்சற்று நீங்கினும் ஊழி
பெயர்ந்தனைய

துணிநீர் மகன்றிலிற் றண்டாது காமத்
துறைபடியும்
அணிநீர் மையின்உயிர் ஓராங்ககல்கதில்
அட்புவிக்கே.

முன் சொன்ன பாடலைப் பாடிய புலவர் சிறைக்குடி ஆந்தையார். இது குறுந்தொகையில் 57-ஆவது பாட்டு.

47269

# மனைவிளக்கு

## கி. வா. ஜகந்நாதன்

✶

சங்கநூற் காட்சிகளின் விளக்கத்தைத் தரும் நூல் வரிசையிலே இது முதல் வெளியீடு. இதைப் பற்றிய பாராட்டுகளிற் சில வருமாறு :

'ஆசிரியருக்கு உரிய அழகான தமிழ் நடையில் சுவை ததும்ப இந்த ஒன்பது எழுத்துச் சித்திரங்களையும் சமைத்திருக்கிறார். இந்தப் புஸ்தகத்துக்கு ஆசிரியர் எழுதியிருக்கும் முகவுரையே சங்க காலத்து நூல்களின் மேன்மையைப் பற்றி நமக்கு வரலாற்று உருவத்தில் எடுத்துச் சொல்வதாக இருக்கிறது. படிக்கும்போது இனிமையை உண்டாக்கும் இந்த மனைவிளக்கு, தன்னகத்தில் விழுமிய கருத்துக்களைக் கொண்டிருப்பது; அனைவரும் படித்தறிந்து பயன் பெறவேண்டும்.' —**தினமணிக் கதிர்.**

'இவ்வளவு அற்புதமான பழைய அணிகலன்களை மெருகிட்டு, உள்ளத்தைக் கவரும் வண்ணம் ஒரு பொருட் காட்சிச் சாலையில் வைத்ததுபோலும் இப்புத்தகம். இது தமிழ்ச் சங்க நூல்களைக் கற்று உணரும் பாக்கியம் இல்லாதவரும், இனி அவற்றைக் கற்க இருக்கும் மாணவர்களும் அவசியம் படிக்க வேண்டியதொன்று.' —**சுதேசமித்திரன்.**

'உட்பொருளின் சுவைக்கு ஏற்பவே புறமும் மனங் கவரும் வகையில் **மனைவிளக்கு** என்ற நூல் வெளிவந்திருக்கிறது. பற்பல இடங்களிலும் பாடற் பொருட் பகுதிகளை விளக்க ஆசிரியர் கையாளும் உவமைகள் சாலச் சிறந்தன. எல்லாப் பாடல்களையும் ஒரே ரீதியில் விளக்காது கதை,

சம்பாஷணை என்பவற்றின் மூலம் விளக்குவதால் நூல் அலுப்பின்றி ஒரே மூச்சிலே படித்து முடிக்கக் கூடியதாயிருக்கிறது. கி. வா. ஜ. வின் எழுத்தில் பற்பல காட்சிகளை எழுப்பும் சக்தி நன்கு குடிகொண்டிருக்கிறது.'

—ஈழகேசரி.

'ஸ்ரீ ஜகந்நாதனுடைய தெள்ளிய ஆற்றொழுக்குப் போன்ற வசன நடையையும், அப்படிப்பட்ட நடையிலே கதை சொல்வது போல, பின்னால் வரப்போகும் செய்யுட் பொருளை விரிவாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறும் எடுத்துச் சொல்லும் திறமையையும் நூலை வாசித்தவர்களால் தான் உணர முடியும்.' —ரேடியோ சிலோன்.

'மொத்தத்தில் பழைய இலக்கியத்திற்கு விளக்கம் எழுதும் துறையில் இந்நூலாசிரியர் எல்லோரும் வரவேற்கத் தக்க ஓர் புது வழியைப் பின்பற்றி வெற்றியடைந்திருக்கிறார் என்று கூறலாம். அழகிய மேல் அட்டைப் படத்துடன் சிறந்த முறையில் இந்நூலை அமுத நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.'

—வீரகேசரி.

**விலை ரூ. 2**

| | |
|---|---|
| தாமரைப் பொய்கை | ரூ. 3 |
| பிடியும் களிறும் | ரூ. 3 |
| இன்பமலை | ரூ. 3 |
| அறப் போர் | ரூ. 3 |
| புது வெள்ளம் | ரூ. 3 |
| தமிழ் வையை | ரூ. 3 |


# அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

**தேனம்பேட்டை : : சென்னை-18**